# எம்ப்ராய்டரி தையல் வகைகள்.

தொகுப்பு - ம. மேரி

# எம்ப்ராய்டரி

## தையல் வகைகள்

எம்ப்ராய்டரி என்பது நம் நாட்டுக்கு மட்டுமே சொந்தமான விஷயமல்ல... இன்னும் சொல்லப் போனால், எம்ப்ராய்டரி மூலமாக அந்தந்த நாட்டு கலாசாரம், வாழ்க்கை முறை, மதநம்பிக்கைகள், இயற்கையழகு, பறவைகளின் வண்ணங்கள் ஆகியவற்றை அறிய முடியும்.

பொதுவாக, நம் நாட்டைப் பொறுத்தவரை எம்ப்ராய்டரி கலையை செழித்து வளரச் செய்தவர்கள், ஆதிவாசி மற்றும் பழங்குடி மக்கள்தான்!

அதுவே ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் போன்றவற்றில் ராஜ பரம்பரையினர் மத்தியில் மட்டுமே எம்ப்ராய்டரி கலை பேணப்பட்டது.

ஹங்கேரி, ஸ்வீடன் ஆகியவற்றில் திருமணத்தன்று இளவரசிகளும் ராணிகளும் எம்ப்ராய்டரி செய்யப்பட்ட ஸ்பெஷல் கவுனைத்தான் அணிவார்கள்.

ஸ்பெயின் ராணிகள் விரும்பி அணிந்த எம்ப்ராய்டரி டிசைனுக்கு 'ஸ்பானிஷ் ப்ளாக் ஒர்க்' என்றே பெயர்.

நம் நாட்டில் இடத்துக்குத் தகுந்த மாதிரி எம்ப்ராய்டரி கலை வளர்ந்தது! மேற்கு வங்கத்தில் குளிர் கொஞ்சம் அதிகம். ஆகவே, ஐந்தாறு பழைய புடவைகள் அல்லது வேட்டிகளை அடுக்கடுக்காக ஒன்றன்மீது ஒன்றாக வைத்து ஓட்டுத் தையல் (Running stitch) போட்டு 'குவில்ட்' (போர்வை) தைப்பார்கள். இந்த வகை தையல்தான் பின்னர் 'காந்தா' எம்ப்ராய்டரியாக மலர்ந்தது.

வறட்சி மிகுந்த பாலைவன பூமியான ராஜஸ்தான் பகுதி மக்கள், தம் மனதிலிருந்த வண்ண வண்ணக் கனவுகளை, கற்பனை சந்தோஷங்களை துணிகளில் காட்டினார்கள்.

பளீர் வண்ணங்களில் அமைந்த 'பாந்தினி' துணி வகைகளில் கண்ணாடி சில்லுகள் பதித்து அவர்கள் செய்யும் எம்ப்ராய்டரிகள் அழகு அள்ளிக் கொண்டு போகும்! குஜராத் அருகே பாகிஸ்தான் பார்டரில் அமைந்த 'கட்ச்' பகுதி எம்ப்ராய்டரியில் பாகிஸ்தான் டிசைன் அதிகமிருக்கும்.

இதுபோல, கர்நாடகாவில் 'கசூதி' நீலகிரியில் 'தோடா எம்ப்ராய்டரி' (ஹேண்ட்லூம் டிசைன் மாதிரி இருக்கும்) என்று அந்தந்த ஊர்களுக்கே உரிய தனி சிறப்பான பலவகை எம்ப்ராய்டரி கலைகள் உள்ளன.

நீலகிரி பழங்குடி மக்களான தோடர்களின் வாழ்க்கையில் 'பூத்துக்குளி' எனப்படும் ஒரு வகை ஷால் (போர்வை மாதிரி) முக்கிய பங்கு வகிக்கும்.

நம் கல்யாணங்களில் மணமகள் 'கூறை புடவை' அணிவது மாதிரி தோடர் மணமகள் 'பூத்துக்குளி' போர்வை அணிவாள். மேலும் பண்டிகைச் சடங்குகள், இறுதிச் சடங்கு போன்றவற்றிலும் இப்போர்வை அணியப் படும். இதேபோல, பஞ்சாபில் 'புல்காரி' எம்ப்ராய்டரி ரொம்ப பிரசித்தம்.

முகலாய மன்னர்களின் படையெடுப்பின் காரணமாக, வடமாநில எம்ப்ராய்டரியில் முகலாய பாதிப்பு இருக்கும். இன்னும் சொல்லப்போனால், கண்ணாடி பதித்த ஒருவகை எம்ப்ராய்டரிக்கு 'மும்தாஜ் மஹால் வகை' என்றே பெயர்.

நம் நாட்டில் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒரு ஊரில் எம்ப்ராய்டரி கைவேலைப்பாடு பற்றி மற்றொரு ஊரில் இருப்பவர்களுக்குத் தெரிவதில்லை. அதைத் தெரியவைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப் படுவதில்லை.

எம்ப்ராய்டரியைப் பொறுத்தவரை, 'ஃப்ரீ ஸ்டைல்' (free style), எண்ணிக்கை முறையில் போடும் எம்ப்ராய்டரி (counted thread embroidary) என்று இருவகை உண்டு!

'ஃப்ரீ ஸ்டைல்' எம்ப்ராய்டரியில் மட்டுமே நூற்றுக்கணக்கான வகைகள் உள்ளன. அவற்றைப் படிப்படியாகப் பார்ப்போம்...

தையல் வகைக்குப் போகும் முன்பாக, பொதுவான சில விஷயங்களைச் சொல்லி விடுகிறேன்.

★ எம்ப்ராய்டரி போடுவதற்கு 'மதுரா கோட்ஸ்' நிறுவனத்தின் 'ஆங்கர்' (anchor) நூல்கண்டு மிகவும் சிறந்தது. எந்த வகை தையல் போடுகிறோமோ – அதற்கேற்ப நூலில் இழை பிரித்துக் கொள்ள வேண்டும். அதைப் பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

★ டிசைன் வரையப்பட்ட துணியைச் சுருக்கமின்றி நன்கு இழுத்து ஃபிரேமில் பொருத்தி எம்ப்ராய்டரி செய்ய வேண்டும். பல அளவுகளில் ஃபிரேம்கள் கிடைக்கின்றன.

★ எம்ப்ராய்டரி மிகவும் சிறப்பானதாக அமைவதற்கோ, மிகச் சுமாராகப் போவதற்கோ மூன்று விஷயங்கள்தான் காரணமாகின்றன். அவை: சரியான டிசைன், சரியான வகைத் தையல், பொருத்தமான கலர் காம்பினேஷன்!

★ எந்த வகை எம்ப்ராய்டரி போட்டாலும், பின்புறம் மிகவும் 'நீட்'டாக இருக்க வேண்டும். முண்டும் முடிச்சுமாக நூலை பின்புறம் கட்டியிருந்தால், முன்புற டிசைனின் அழகும் எடுபடாமல் போகும்.

★ முதன்முதலாக எம்ப்ராய்டரி கற்கத் துவங்குபவர்கள் 'பாம்பே டையிங்' 'மேட்டி' (Matte) துணி அல்லது 'கரூர் மேட்டி' துணியில் எம்ப்ராய்டரி செய்து பழக வேண்டும். அதில் தையல் அளவு நன்கு புரிந்து, மனதுக்கும் கைக்கும் பிராக்டீஸ் கிடைக்கும். இதில் நன்கு பழகிய பிறகு உடைகளில் எம்ப்ராய்டரி செய்யத் துவங்கலாம்.

எம்ப்ராய்டரியில் ஆயிரக்கணக்கான தையல்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான தையல்களை இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கிறோம்.

**1. கோட்டுத் தையல்கள்:** ரன்னிங், விப்ட் ரன்னிங், டபுள் ரன்னிங், பாக் ஸ்டிச், விப்ட் பேக், இன்டர்லேஸ்ட் பேக், பிகினீஸ், ஸ்டெம், விப்ட் ஸ்டெம், கேபிள் ஸ்டிச், செயின் ஸ்டிச், விப்ட் செயின், பிரெய்டட் செயின், ஸ்குரோல் முதலியன.

**2. நிரப்பும் தையல்கள்:** ஸ்டார் ஸ்டிச், ஸாடின், ஃப்ளாட் ஸ்டிச், ஃபிஷ் போன், ஓபன் ஃபிஷ்போன், லீஃப் ஸ்டிச், ருமானியன் ஸ்டிச், லாங் அண்டு ஷார்ட், ஃபர்ன் ஸ்டிச், ஹெரிங் போன் ஸ்டிச், க்ளோஸ்ட் ஹெரிங் போன், ஷெவரான் ஸ்டிச், கிராஸ் ஸ்டிச், ஐலெட் ஹோல் முதலியன.

**3. லூப் தையல்கள்:** பிளாங்கெட், பட்டன் ஹோல், குளோஸ்ட் பட்டன் ஹோல், அப் அண்ட் டவுன் பட்டன் ஹோல், நாட்டட் பட்டன் ஹோல், ஃபெதர் ஸ்டிச், க்ளோஸ்டு ஃபெதர் ஸ்டிச், செயின்ட் ஃபெதர் ஸ்டிச், ஓபன் கிரேட்டான், க்ரேட்டான் பில்லிங், ஃப்ளை ஸ்டிச், ஃப்ளை ஸ்டிச் பில்லிங்.

**4. செயின் தையல்கள்:** செயின் ஸ்டிச், டெய்சி, டபுள் டெய்சி ஸ்டிச், ட்விஸ்டட் செயின், செக்கர்ட் செயின், கேபிள் செயின், ஸிக்ஸாக் கேபிள் செயின், விப்ட் செயின், இன்டர்லேஸ்ட் செயின், பிரைடட் செயின், கோதுமை கதிர் முதலியன.

**5. முடிச்சு தையல்கள்:** பிரெஞ்ச் நாட், புல்லியன், கோரல், டபுள் நாட், நாட்டட் கேபிள் செயின்.

**6. கௌசிங் அண்ட் நிரப்பும் தையல்கள்:**



கௌசிங், ருமானியன் கௌசிங், பொகார கௌசிங், ஜேக்கோபியன் அல்லது ட்ரெல்லீஸ், ஷீப், ஸீடிங், ஸ்பைடர்ஸ் வெப், ரிப்ட் வீல்.

7. வேறு தையல்கள்: ஜப்பானிய டார்னிங், பெக்கிங்கீஸ், எர்மின் ஸ்டிச், நாலுபக்கத் தையல், அலைத் தையல்.

துணியை அழகு செய்வது எம்ப்ராய்டரி. டிசைன் என்னதான் பிரமாதமாக இருந்தாலும் அடிப்படையான சில விஷயங்களை புரிந்து கொண்டால் எம்ப்ராய்டரி சிறப்பாக அமைவதோடு சீக்கிரமும் போட்டு முடிக்கலாம். அதற்கான 'கைடு லைன்ஸ்'..

டிசைனும் தையலும்: எம்ப்ராய்டரிக்கான டிசைன் தீர்மானமானதும் அதை போடப் போகிற துணி, நூல், தையல்வகை ஆகியவற்றை தேர்ந்தெடுக்க வேண்டும். முதலில் டிசைன் அவுட்-லைனை 'ஸ்டெம் ஸ்டிச்' 'பேக் ஸ்டிச்' அல்லது 'செயின் ஸ்டிச்' மூலமாக போடலாம் அல்லது டிசைனுக்கு ஏற்றபடி ஹெவியான தங்க கலர் நூல் கொண்டு 'கௌசிங்' தையல் போடலாம், நடுவிலுள்ள டிசைனுக்கேற்ப மற்ற தையல்கள் போட வேண்டும்.

கலர் நூல் தேர்ந்தெடுக்கும் முறை: எம்ப்ராய்டரி நூலில் கிடைக்காத நிறமே இல்லை என்னும் அளவுக்கு எல்லா 'ஷேட்'களிலும் வெரைட்டியாக நூல்கள் கிடைக்கின்றன. நீங்கள் போடப்போகும் டிசைனிலுள்ள நிறங்களை கூர்ந்து கவனித்து அதற்கேற்ப நூல் கலரை தேர்ந்தெடுக்கவும். அரைக்கண் மூடிய நிலையில் டிசைனை கூர்ந்து கவனித்தால் நிறம் துல்லியமாக தெரிய வரும்.

துணியை தயார்படுத்துதல்: எம்ப்ராய்டரி செய்யப் போகும் துணி காட்டனாக இருக்கும் பட்சத்தில் கஞ்சி போக துவைத்து காயவைத்து அயர்ன் செய்ய வேண்டும். மற்றவகை துணிகளையும்கூட சுருக்கம் இல்லாதவகையில் அயர்ன் செய்ய வேண்டியது அவசியம். துணி ஓரத்தில் இழை பிரிந்து வராமலிருக்க, நான்கு பக்கமும் துணியை மடித்து ஓட்டுத் தையல் போட்டு ஓரம் அடித்து வைப்பது நல்லது.

டிசைன் நகல் எடுப்பது: எம்ப்ராய்டரி போடப்போகும் டிசைனை துணியில் கார்பன் பேப்பர் வைத்து நகல் எடுக்கலாம். அல்லது தண்ணீரில் நனைத்தால் அழியக்கூடிய இங்க் நிரப்பப்பட்ட பேனாவால் டிசைனை வரைந்து கொள்ளலாம்.

ஃபிரேம் உபயோகிக்கும் முறை: துணியில் டிசைன் போடப்போகும் பகுதிக்கு அடியில் சின்ன ஃபிரேமை வைக்கவும்.பெரிய வளையத்தின் ஸ்க்ருவை தளர்த்தி துணியின் மேற்பரப்பில் வைத்து செட் செய்யவும். துணி இறுக்கமாக பிடித்துக்கொண்டதும் ஸ்க்ருவை டைட் செய்யவும். நான்கு பக்கமும் துணியை டைட்டாக இழுத்து விடவும். எம்ப்ராய்ட ரிக்கு துணி தயார். எம்ப்ராய்டரி செய்யும்போது துணியை அவ்வப்போது வளையத்திலிருந்து எடுத்து நீவி விடவேண்டும் அப்போதுதான் தையல் அழகாகவும் துணி சுருங்கிக் கோணல் ஆகாமலும் இருக்கும்.

நூல் வைக்கும் முறை: கலர் கலராக எல்லா நூலையும் சுற்றிலும் பரப்பிவைத்து வேலை செய்தால் குழப்பம்தான் மிஞ்சும். இதை தவிர்க்க ஒரு வழி.. 3" x 4" அளவில் ஒரு கார்ட்போர்டு எடுத்து கொண்டு அதில் வரிசையாக துளை போடவும். தேவையான கலர் நூல்களை 20 அளவில் ஒரே மாதிரி கட் செய்து துளையினுள் வரிசையாக கோத்து தொங்க விடவும் வேண்டும்போது வேண்டிய நூலை உருவிக்கொள்ளலாம். அந்தந்த நூல் அருகே அதன் நம்பர் மற்றும் நிறத்தை



எழுதிவைக்க மறக்கக்கூடாது. மிச்சசொச்சம் விழுந்த நூல்களையும் ஒரு டப்பாவில் போட்டுவைத்தால் தேவைப்படும்போது எடுக்க வசதியாக இருக்கும்.

உட்கார வேண்டிய பொசிஷன்: கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் - நீங்கள் வசதியாக உட்கார்ந்திருக்கிறீர்களா என்பதுதான்! நன்றாக சாய்ந்து ரிலாக்ஸ்டாக உட்கார்ந்து கொள்ளுங்கள். தேவையானால் முதுகுபக்கம் சின்ன குஷன் கூட வைத்து, கொண்டால் நல்லதுதான். உடலை ரொம்ப வருத்திக்கொள்ள வேண்டாம். உட்கார்ந்திருக்கும் பொசிஷனை அவ்வப்போது மாற்றவும். தொடர்ந்தாற்போல் மணிக்கணக்கில் எம்ப்ராய்டரி செய்ய வேண்டாம். அவ்வப்போது பிரேக் கொடுங்கள். போதிய வெளிச்சம் உள்ள இடத்தில் அமர்ந்துதான் எம்ப்ராய்டரி செய்ய வேண்டும்.

1. நூல் கோக்கும் முறை: a. நூலை ஊசியை சுற்றி கொண்டுவந்து நீவிவிடவும். b. இரட்டைபட்டையாக நூலை திரித்து ஊசியின் கண்ணில் கோத்து வாங்கவும். ஊசியை 'ஸ்டெடி'யாக பிடித்திருந்தால் நூலை சுலபமாக கோக்கலாம்.

2. நூலிழுப்பான்: a. நூலிழுப்பானின் நுனியிலுள்ள வயரை ஊசியினுள் செலுத்தவும். b. வயரினுள் நூலைப் பொருத்தி ஊசியின் கண்வழியாக கவனமாக இழுக்கவும்.

3. எம்ப்ராய்டரி ஃபிரேம் பொருத்துவது: a. சின்ன ஃபிரேமை துணிக்கு அடியில் வைக்கவும்.. b. துணியின் மேற்புறம் பெரிய வளையத்தை பொருத்தி டைட்டாக செட் செய்யவும்.

4. டிசைன் அவுட்-லைன் போடுவது: ஓரிழை அல்லது ஈரிழை நூலில் அவுட்-லைன் ஸ்டிச் போட்டால் டிசைன் அழகாக இருக்கும்.

5. டிசைன் நடுவிலுள்ள ஃபில்லிங்: அவுட்-லைன் தையலை ஹெவியாக போட்டால் உட்புற ஃபில்லிங்கை எளிமையாக செய்வதன் மூலம் டிசைன் அழகாக அமையும்..

6. 'கௌசிங்' அவுட்-லைன் போடுவது: அவுட்-லைனை 'கௌசிங்' தையலால் போட்டால் இலைகளில் முட்கள் இருப்பது போன்ற தோற்றம் கொண்டுவர முடியும்.

7. தையலின் அடியில் முடிச்சு போடும் விதம்: ஊசியை துணியின் கீழிருந்து மேலாக கொண்டு வரவும். அடியில் ஒன்றரை இன்ச் அளவுக்கு நூலை ஓரமாக விட்டு மேலே இழுக்கவும். மேற்புறமாக மீதி தையலை தொடரும்போது அடி நூலை கெட்டியாக இழுத்துப் பிடிக்கவும். தையல் மொத்தமும் முடிந்தபிறகு அடிநூலை கட் பண்ணி விடலாம்.



8. மேற்புற முடிச்சுப் போடும் விதம்: 'நூலின் நுனியில் ஒரு முடிச்சுப் போட்டுவிட்டு வலப்புற மூலையில் ஊசியை கோத்து வாங்கவும். பிறகு அடிவழியாக இடது ஓரம் நூலை கொண்டுவந்து தையலை தொடங்கவும். முழுவதும் முடிந்தபிறகு ஆரம்பத்தில் போட்ட முடிச்சை கட் பண்ணவும்.

9. வேறுவித முடிச்சு: டிசைன் போடப் போகும் பகுதிக்கு சற்று தொலைவில் - முடிச்சிட்ட நூலைக் கோத்து வாங்கி பிறகு டிசைன் மீது எம்ப்ராய்டரியை தொடங்கலாம். கடைசியாக முடிச்சை கட் செய்து நூலை அடிவழியாக இழுத்துவிட்டால் போதும்.

10. மேற்புற முடிச்சுப் போடும் விதம்: துணியின் அடிப்புறம் சின்னதாக ஒரு தையலை லூசாக நூல் விட்டு போடவும். அந்த நூலின் இடையே வரும்படி ஊசியை செலுத்தி ஒரு கிராஸ் - ஸ்டிச் போடவும். தையலின் உறுதியை சோதித்து பார்த்தபின் எம்ப்ராய்டரி செய்யவும். இந்த மெத்தட் குருவெல் வொர்க் டைப்பில் பூவேலை செய்யும்போது உபயோகமாக இருக்கும்.

11. நடுவில் நூல்மாற்ற வேண்டியிருந்தால்: பாதியில் நூல் தீர்ந்து வேறு நூல் மாற்ற வேண்டி இருந்தால்-A புள்ளிக்கு ஊசியைக் கொண்டு வரவும். புது ஊசியில் புது நூல் கோத்து C புள்ளிக்கு வரவும். அடிநூலை கெட்டியாக பிடித்தபடி C-யிலிருந்து B-புள்ளிக்கு ஊசியை செலுத்தவும். அடியிலுள்ள பழைய நூலுடன் புது நூலை முடிச்சுப் போடவும், மேற்புறமுள்ள புதுநூலில் எம்ப்ராய்டரியை தொடரவும்.

12. முடிவுத் தையல் போடும் விதம்: நூலை ஊசியின் மூலமாக துணியின் அடிப்புறம் கொண்டுவரவும். ஊசியின்மீது நூலால் மூன்று, நான்குமுறை சுற்றி இழுத்து ஊசியை கோத்துவாங்கி முடிச்சுப் போடவும்.



## ஓட்டுத் தையல்
**(Running Stitch)**

**சா**தாரணமாக ஊசி நூலால் துணியில் தைப்பது மாதிரிதான் இந்த தையலும்..! ஆனால், ஃப்பிரேமில் பொருத்திய துணியில் ஒவ்வொரு தையலையும் படத்தில் உள்ளது மாதிரி கோத்து வாங்கி தைக்க வேண்டும். மூன்று இழை கொண்ட நூலை நீண்ட கண் உள்ள ஊசியில் கோத்து போட வேண்டும். இந்த எம்ப்ராய்டரி செய்யும் ஊசிக்கு (க்ரூவெல் நீடில்) crewel needle என்று பெயர்.

ஒரு தையலுக்கும் அடுத்த தையலுக்கும் அதிக இடைவெளி கூடாது! அருகருகே இருந்தால்தான் டிசைன் முத்துமுத்தாக அழகாக அமையும்.



ஓட்டுத் தையல் டிஸைன்






## இரட்டை ஓட்டுத் தையல்
**(Double Running Stitch)**

**இ**ரண்டு ஓட்டுத் தையல்களை ஒரே வரிசையில் மாறிமாறி போடுவதுதான் 'இரட்டை ஓட்டுத் தையல்' என்பது..!

சற்றே அதிக இடைவெளிகள் கொண்டதாக முதலில் சிவப்பு நூலில் ஓட்டுத் தையல் போடுங்கள்.




**குறிப்பு:** **இரண்டு ஓட்டுத் தையல்களையும் ஒரே புள்ளிகளில் போடக்கூடாது. அதாவது, சிவப்பு கலர் நூலை கோத்து வாங்கிய அதே இடத்தில் நீல கலர் நூலையும் கோக்கக் கூடாது.**

**அப்படிச் செய்தால் துணிகளில் ஓட்டை விழ வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இரண்டாவது தையலை சற்று முன்கூட்டிய புள்ளிகளில் போட வேண்டும்.**



அந்தத் தையல்களின் இடைவெளிகளில் வருமாறு நீலகலர் நூலினால் இரண்டாவது ஓட்டுத் தையலைப் போடுங்கள் (பார்க்க - படம்).

சிவப்பும் நீலமுமாக மாறி மாறி தையல் அமைந்து அழகாகக் காட்சியளிக்கும்.

இதற்கும் இரண்டு கலர் நூலுமே மூன்று இழை கொண்டதாக இருக்கவேண்டும்.



இரட்டை ஓட்டுத் தையல் டிஸைன்







முறுக்குத் தையல் டிசைன்

## முறுக்குத் தையல்
**(Whipped Running Stitch)**

**மு**தலில் ஒரு வரிசை ஓட்டுத் தையல் (சிவப்பு நூல்) போடுங்கள். இந்த ஓட்டுத் தையலின் இடையே நீலக் கலர் நூலை கோத்து வாங்க வேண்டும் (பார்க்க - படம்).

இதனுடைய எஃபெக்ட், நீல நூலும் சிவப்பு நூலும் முறுக்கிய மாதிரி வரும்.

இரண்டு கலர் நூலுமே மூன்று இழைகள் கொண்டதாக இருக்கவேண்டும்.



**Whipped Running**
முறுக்குத் தையல்



**Interlaced Running**
கோத்து வாங்கும் தையல்

★ இந்த இரண்டு தையலும் ஒரே மாதிரி இருந்தாலும் மேலே உள்ள படங்களைப் பார்த்து வித்தியாசத்தை புரிந்து கொள்ளவும்







எல்லா நாட்டுப் பெண்களுக்குமே எம்ப்ராய்டரி பிடித்திருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன!

கிரியேட்டிவிடி என்பது ஒரு பெண்ணின் ரத்தத்தில் ஊறிய விஷயம்! தன் குழந்தையைக் கண்டிப்புக் காட்டி வளர்ப்பவர் தந்தை என்றால், மிகவும் கனவோடு வளர்ப்பவர் தாய்தான்!

குழந்தைக்கு அழகான டிரஸ் போடுவதில் தொடங்கி, என்ன கல்வி அளிப்பது என்பது வரை தாயின் கனவும் கலந்திருக்கும். அந்த 'கிரியேட்டிவிடி' தன்மை துணியிலும் பிரதிபலிக்க, எம்ப்ராய்டரிக்கு கிடைத்தது மவுசு.

மேலும் பெண்களுக்கே உரிய பொறுமை குணமும் எம்ப்ராய்டரிக்கான முக்கிய காரணம்.

அந்த காலத்தில் வேலைக்குச் செல்லாத பெண்ணாக இருந்தாலும், தன் திறமையை நிரூபிக்க வேண்டும் என்ற தாபத்தின் விளைவால் எம்ப்ராய்டரியை விரும்பினர்.

மேலும் எம்ப்ராய்டரி செய்வதற்குத் தேவையான அடிப்படை பொருட்கள் என்று பார்த்தால், நூல், ஊசி, ஏராளமான கற்பனைத்திறன் ஆகியவை மட்டுமே..! ஆனால், கிடைக்கும் பலனோ மனதை பூரிக்க வைக்கும்.





**ச**ரி... மேற்கண்ட மூன்று வகை தையல்களையும் உபயோகித்து, அருகே உள்ள பொம்மை மனிதனை உங்கள் பாப்பாவின் கவுன் அல்லது கைக்குட்டையில் எம்ப்ராய்டரி செய்யுங்களேன்...

பொம்மையின் ஷூ, மற்றும் பேண்ட்டின் உட்புற கட்டங்களுக்கு வெறும் ஓட்டுத் தையல் போடுங்கள். கண்களுக்கு கறுப்பு பாசிமணியைத் தையுங்கள்.

மிச்சமிருக்கும் பகுதிகளை (தலை, வாய், உடம்பு மற்றும் பேண்ட் அவுட்-லைன், பாக்கெட் ஆகியவை) முறுக்குத் தையலில் (Whipped Running Stitch) எம்ப்ராய்டரி செய்யுங்கள். கலர் காம்பினேஷன் உங்கள் சாய்ஸ்!

















**வெ**றும் ஓட்டுத்தையல் (Running Stitch) மற்றும் முறுக்குத் தையலை (Whipped Running Stitch) மட்டுமே உபயோகித்து அழகான குஷன் உறை எம்ப்ராய்டரி செய்யலாமா?

இதற்குத் தேவை க்ரீம் கலர் கரூர் மேட்டி துணி. எல்லா ஊர்களிலும் 'ஹேண்ட்லூம் ஹவுஸில்' இந்த துணி கிடைக்கும். அதை 20 இன்ச் நீளமும் 20 இன்ச் அகலமும் கொண்டதாக வாங்குங்கள். துணியை கோணல் இல்லாமல் கிழித்து வாங்குங்கள்.

**சோ**பா, நாற்காலி, திண்டு ஆகியவற்றில் சாய்ந்துகொள்ள குஷன் தைத்துப் போட்டால் அழகாகவும், உட்காருபவர்களுக்கு வசதியாகவும் இருக்கும்.

அந்த குஷனுக்கான உறையில் எம்ப்ராய்டரி செய்து போட்டால் அதன் 'லுக்'கே தனிதான்!

உறையின் பின்புறம் வேறு சாதாரண துணியுடன் சேர்த்துத் தைப்பதற்காக, மேட்டித் துணியின் நான்குபுறமும் 2 இன்ச் விட்டுவிடுங்கள்.

மீதமுள்ள 18 இன்ச் நீள அகலத்துக்கு நான்குபுறமும் பார்டர் கட்டியது மாதிரி 'சீம் லைனில்' ஒரு ஓட்டுத் தையல் போட்டுவிட்டால், துணி கோணல் இல்லாமல் நேராக இருக்கும். எம்ப்ராய்டரியும் கச்சிதமாக அமையும்.

இப்போது எம்ப்ராய்டரி செய்ய துணி தயார். தேவையான பிறபொருட்களைப் பார்ப்போம்.

**ஊசி:**

கண் பெரிதாக உள்ள 'டேபஸ்ட்ரி' (Tapestry) ஊசி – 1

(அல்லது) போனி குரூவெல் (Pony Crewel) எம்ப்ராய்டரி ஊசி – நம்பர் 6 (அல்லது) 7

**நூல்:**

மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் 'ஆங்கர்' (anchor) நூல் சிறந்தது. இந்த வகை எம்ப்ராய்டரி நூலை 'ஸ்கெயின்ஸ்' (Skains) என்பார்கள். ஒரு நூலில் மொத்தம் ஆறு இழைகள் இருக்கும்.

இப்போது நாம் செய்யப் போகும் எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் ஆறு இழை கொண்ட நூலையே உபயோகிக்க வேண்டும்.

ஒவ்வொரு நிற நூலுக்கும் ஒவ்வொரு எண் உண்டு. அதை தெரிந்து நீங்கள் குறிப்பிட்டுக் கேட்டால், விரும்பும் நிறத்தில் நூலை வாங்கலாம்.



இந்த வகை எம்ப்ராய்டரிக்கு ஐந்து நிறங்களில் நூல் தேவை. அவை..

நம்பர் 011 (பிங்க் கலர்) – 1 ஸ்கெயின்

நம்பர் 019 (சிவப்பு) – 2 ஸ்கெயின்

நம்பர் 020 (மெரூன்) – 2 ஸ்கெயின்

நம்பர் 0102 (ஊதா) – 3 ஸ்கெயின்

நம்பர் 0119 (இளநீலம்) – 2 ஸ்கெயின்

ஆச்சா.. இனி எம்ப்ராய்டரிக்கு போவோம்..

துணியின் நடுப்புள்ளியிலிருந்துதான் எம்ப்ராய்டரியை ஆரம்பிக்க வேண்டும்.. துணியின் நட்டநடுவாக ஒரு 'மோடிஃப்' (motif) டிசைன் செய்து, அதிலிருந்து நாலாபுறமும் எம்ப்ராய்டரியை வளர்க்க வேண்டும்.

1

▲ நடுப்புள்ளி கண்டறிந்து..

2

◀ சதுர ஒட்டுத் தையல் போடவும்.

அதைச் சுற்றிலும் சதுரமாக ஒட்டுத் தையல் போட்டு..▼

3






துணியின் நடுப்புள்ளியை கண்டுபிடிப்பது எப்படி?

பார்டரை சரியாக வைத்து துணியை நான்காக மடித்தால் நான்கு முனையும் இணையும் பகுதிதான் மையப் புள்ளி. ஆனால், அது ஒரே புள்ளியாக இல்லாமல், நான்கு புள்ளிகள் (::) கொண்ட அமைப்பாக இருக்கும். இதில்தான் டிசைனைத் துவக்க வேண்டும்.

மையமான அந்த நான்கு புள்ளிகளையும் இணைத்து ஒட்டுத் தையல் போடுங்கள்.



முதலில் மேல்புள்ளிகள் இரண்டையும் பிங்க் கலர் நூலால் இணையுங்கள் (படம் 1). அடுத்து, கீழ்ப்புள்ளிகள் இரண்டையும் இணைக்கவும் (படம் 2). பக்கவாட்டு புள்ளிகளையும் அதேபோல் இணைக்கவும். இப்போது சதுரமாக 'பிங்க்' கலரில் ஒட்டுத் தையல் வந்திருக்கும்.

இந்த சதுரத்துக்கு அடுத்த வரிசைப் புள்ளிகளில் சதுரமாக பிங்க் கலர் நூலில் 'முறுக்குத் தையல்' (Whipped Running Stitch) போட வேண்டும். முதலில் பிங்க் கலர் நூலினால் ஒட்டுத் தையல் போடவும் (படம் 3). பிறகு அதே கலர் நூலினால் ஒட்டுத் தையலினுள் கோத்து



4

அதனுள் கோத்து வாங்கி முறுக்குத் தையல் போடவும். ▲

5

ஒரு வரிசை விட்டு, அடுத்த வரிசையில் மறுபடி ஒட்டுத் தையல் ▲

6

சதுரத்தின் ஓரம் திருப்பும்போது.. ▲




வாங்கி முறுக்குத் தையல் போடவும். (படம் 4).

அடுத்து வரும் ஒரு வரிசைப் புள்ளிகளை அப்படியே விட்டுவிடுங்கள். அதற்கடுத்த சதுர வரிசைப் புள்ளிகளில் ஊதா கலர் நூலினால் ஒட்டுத் தையல் போடவும் (படம் 5).

ஊதா நூலால் சதுரத்தின் நான்கு புறமும் இணைக்கும்போது ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். ஒருபக்கம்

▲ மறுபடி ஆரம்பப் புள்ளிக்கு வந்து அடிவழியாக நூலை அடுத்த புள்ளிக்கு கொண்டு வரவும்..




ஊதா நிற சதுரம் தயார் ▶

ஊதா சதுரத்தின் நான்குபுறமும் மேலும் இருவரிசை ஒட்டுத் தையல் ▼



போட்டு முடித்து பக்கவாட்டில் தையலை திருப்பி (படம் 6) மறுபடியும் ஆரம்பித்த புள்ளிக்கே வரவேண்டும். பின்னர் ஊசியை அடிவழியாக அடுத்த ஒட்டுத் தையலுக்கு கொண்டு வரவேண்டும் (படம் 7).

அதேபோல நான்குமுனைகளிலும் தையலை இணைத்து ஊதா கலர் நூலினால் சதுரமாக ஒட்டுத் தையல் போடவும் (படம் 8).







ஒவ்வொரு பக்கமும் ஊதா நிற தையலுக்கு இணையாக, அடுத்த இரு வரிசைகளிலும் ஊதா நிற நூலினால் ஒட்டுத் தையல் போடவும். (படம் 9).

நீலகலர் ஒட்டுத் தையலின் அடிவழியாக பிங்க் கலர் நூலை கோத்து வாங்கி (படம் 10) முறுக்குத் தையல் போடவும்.

இப்போது மையமான 'மோடிஃப்' டிசைன் தயார். இந்த டிசைனைச் சுற்றி அடுத்துவரும் நான்கு வரிசைப் புள்ளிகளை அப்படியே விட்டுவிடுங்கள்.

ஐந்தாவது வரிசையிலுள்ள புள்ளிகளை



(படம் 11) மெரூன் நூலினால் இணைத்து ஒட்டுத் தையல் போடவும். மெரூன் நூல் சதுரம் கிடைக்கும் (படம் 12).

மெரூன் கலர் நூல் தையலின் நான்கு பக்கங்களிலும் _/ 'ஷேப்' வருவது மாதிரி அதே கலர் நூலினால் ஒட்டுத் தையல் போடவேண்டும் (கீழேயுள்ள படம் போல).

அதாவது, மெரூன் நூல் தையலுக்கு அடுத்து



வரும் நான்கு வரிசைகளில் – வரிசைக்கு ஒரு தையல் விகிதம் குறைத்து ஒட்டுத் தையல் போடவேண்டும். அதன்படி, கடைசி வரிசையில் மொத்தம் ஆறு ஒட்டுத் தையல்கள் இருக்கும். இதே மாதிரி நான்குபக்கமும் டிசைன் செய்து முடிக்கவும் (படம் 13).

அடுத்த ஸ்டெப் – ஒவ்வொரு பக்கத்திலும் மெரூன் நூல் டிசைனுக்கு இருபுறமும் ஆரஞ்சு நிற நூலினால் டிசைன் போடவேண்டும். அது எப்படியென்று பார்ப்போம்..

மெரூன் கலர் நூல் டிசைனின் ஒரு பக்கத்தை எடுத்துக் கொள்வோம்...

மெரூன் கலர் டிசைனின் இருபுறமும் ஆரஞ்சு கலர் நூலினால் மேற்கண்ட மாதிரி ஒட்டுத் தையல் போட வேண்டும்.

ஆரஞ்சு நூல் தையல் முதலில் 9 வரிசையில் ஆரம்பித்து, படிப்படியாக குறைத்து கடைசி வரிசையில் 6 ஒட்டுத் தையலில் முடியும்.

இதே மாதிரி மெரூன் கலர் டிசைனின் நான்கு பக்கங்களிலும் ஆரஞ்சு கலர் நூலினால் எம்ப்ராய்டரி செய்து முடிக்கவும்.

இப்போது ஒவ்வொரு 'ப' ஷேப் டிசைனுக்கும் இடையே ஊதா நிற நூலினால் நான்கு வரிசை ஒட்டுத் தையலை அடுத்த பக்கத்தில் உள்ளது மாதிரி போடவேண்டும்.




ஊதா நூலின் அடிவழியாக பிங்க் நூலை கோத்து வாங்கி தையல் போடவும் (Interlaced Running Stitch).






அடுத்த நான்கு வரிசைகள் விட்டுவிட்டு மெரூன் கலரில் ஒட்டுத் தையல்




சதுரமாக மெரூன் கலரில் ஒட்டுத் தையல்...








சுற்றிலும் ஒரு தையல் குறைத்தபடி நான்கு வரிசை ஒட்டுத் தையல்..

அதாவது, மேலிருந்து மூன்று வரிசைப் புள்ளிகளை விட்டுவிட வேண்டும். பக்கவாட்டில் இருபுறமும் நான்கு வரிசைகளை விட்டுவிட வேண்டும்.

நடுவில் உள்ள நான்கு வரிசைகளில் ஊதாகலர் நூலினால் நீளமாக ஒட்டுத் தையல் போட வேண்டியதுதான்.

மெரூனும் ஆரஞ்சும் இணைந்த 'ப' டிசைனுக்கு வெளிப்புறத்தில் பத்தாவது புள்ளியில் மறுபடியும் 'மோடிஃப்' டிசைன் துவங்க வேண்டும் (படம் 14 ).

இப்படியே முழு டிசைனையும் போட்டு முடித்தால் கரூர் மேட்டி துணியில் சூப்பர் எம்ப்ராய்டரி செய்த குஷன் கவர் தயார்.

அதன் பின்புறத்தில் வேறு சாதாரண துணியுடன் இணைத்து உறை தைத்து உங்கள் வீட்டு குஷனுக்கு மாட்ட வேண்டியதுதான்.

சுற்றிலும் நான்கு 'மோடி.:.ப்'களுடன் எம்ப்ராய்டரி பாதி ஓவர்



நீங்கள் மூக்கு கண்ணாடி அணிபவரா..? அல்லது உங்கள் கணவர்..?! அந்த கண்ணாடிக்கான உறையை 'பாம்பே-டையிங் மேட்டி' துணியில் தைத்து அதில் எம்ப்ராய்டரி செய்வோம். இந்த கண்ணாடி உறையில் முதல் வரிசையில் Mock Pekingese-ம் இரண்டாவது வரிசையில் முறுக்குத் தையலும் (Whipped Running) மூன்றாவது வரிசையில் கோத்து வாங்கும் ஓட்டுத் தையலும் (Interlaced Running Stitch) உபயோகப்படுத்தப்பட்டு அவை அதே வரிசையில் திருப்பிப் போடப்பட்டுள்ளன.



எம்ப்ராய்டரி துணியில் கண்ணாடி உறை..

**இதற்கு தேவையான பொருட்கள்:**

பாம்பே-டையிங் மேட்டி துணி - 10" நீளம், 10" அகலம்
டேபஸ்ட்ரி ஊசி - 1
மெல்லிய ஃபோம் - 9" நீளமும் அகலமும்
லைனிங் துணி - 9" நீளமும் அகலமும்

**நூல் நிறம்:**

மதுரா கோட்ஸ் 'ஸ்கெயின் நூல்..
நம்பர் 0237 (பச்சை நிற நூல்)
நம்பர் - 0332 (ஆரஞ்சு நூல்)
நம்பர் - 019 (சிவப்பு நூல்)
நம்பர் - 020 (மெரூன் நூல்)

பாம்பே - டையிங் மேட்டித் துணியினுள் மெத்துமெத்தென்று வைத்துத் தைப்பதற்காகத்தான் 'ஃபோம்' மற்றும் லைனிங் துணி தேவைப்படும். குஷன் 'ஃபோம்' மெத்தைகள், தலையணைகள் விற்கும் கடைகளில் இது கிடைக்கும். மிக மெல்லிய சைஸில் வாங்கிக்கொள்ளுங்கள்.

▼ இரண்டு வரிசை ஓட்டுத்தையல்

1





அதேமாதிரி, லைனிங் துணிக்கு மெல்லிய காடா துணியை உபயோகிக்கலாம்.

எம்ப்ராய்டரி செய்து முடித்த பிறகுதான் துணியை வெட்டி உறை தைக்க வேண்டும் என்பதால், முதலில் எம்ப்ராய்டரியை முடித்துக் கொள்ளலாம்.

பாம்பே-டையிங் மேட்டித் துணியை நீளவாக்கில் சரிபாதியாக மடித்தால், இருபுறமும் தலா 10" நீளமும் 4½" அகலமும் கொண்டதாக துணி இருக்கும். இதில்தான் ஏதாவது ஒருபுறத்தில் எம்ப்ராய்டரி செய்ய வேண்டும்.

இதிலும், துணியை மடித்துத் தைக்க சுற்றிலும் சிறிது இடம்விட வேண்டியிருக்கும். அதன்படி பார்த்தால், மொத்தம் 7½" நீளமும் 3½" அகலமும் கொண்ட அளவில்தான் எம்ப்ராய்டரி செய்ய

2



▲ ஆரஞ்சு நூலால் வலப்புறம் கோத்து வாங்கி..

3



▲ கீழ்ப்புறம் ஊசியைத் திருப்பி..

★ எம்ப்ராய்டரி போடும்போது, ஊசியை 'வெடுக்'கென்று இழுக்கக் கூடாது. கடைசிவரை ஊசியாலேயே நூலை இழுக்காமல், சிறிது தூரத்துக்குப் பிறகு விரல்களால் நூலை இழுத்தால்தான் தையல் அழகாக அமையும்.

★ நூலில் முறுக்கேறிக் கொண்டால், நூலின் இரு முனைகளையும் பிடித்தபடி நூலினிடையே ஊசியை முன்னும் பின்னும் செலுத்தினால் சிக்கல் நீங்கும்.

▼ Mock Pekingese Stitch





வேண்டும். இந்த அளவுக்கு பார்டர் கட்டியது மாதிரி ஒரு ஓட்டுத் தையல் போட்டுக்கொண்டால், அதனுள் எம்ப்ராய்டரியைத் துவங்கலாம்.

இந்தமுறை 'மாக் பெக்கின்கீஸ்' (Mock Pekingese) என்ற புதியவகை தையலை உபயோகிக்கலாம். ஆரம்பமே இந்தவகை தையலில்தான் துவங்குகிறது.

இந்த தையலுக்குதான் மாக் பெக்கீன்கீஸ் என்று பெயர். மேட்டி துணியில் 'மாக் பெக்கீன்கீஸ்' தையல் போட்டு முடித்ததும் அடுத்த மூன்று வரிசைகளை விட்டுவிடுங்கள்.

நான்காவது வரிசையில் சிவப்பு நூலால் ஓட்டுத் தையல் போடவும். (படம்-5). அதனுள் மெரூன் கலர் நூலைக் கோத்து வாங்கி முறுக்குத் தையல் போடவும் (படம்-6).

அடுத்து வரும் நான்கு வரிசைப் புள்ளிகளை






▲ அடுத்து நான்காவது வரிசையில் ஓட்டுத் தையல்..

முதலில் பச்சைநிற நூலால் இருவரிசை ஓட்டுத்தையல் போடவும் (படம் – 1). அதனுள் ஆரஞ்சு நூலால் வலப்புறமாகக் கோத்து வாங்கவும் (படம்-2). அதே நூலால் கீழ்ப்புறம் திருப்பி (படம்-3). இடதுபுறமாக கோத்து வாங்கி தையலை முடிக்கவும்

பச்சை இணைப்புடன் கூடிய ஆரஞ்சு வளையங்களாக அமைந்த

விட்டுவிடுங்கள்.

அதற்கடுத்த நான்கு வரிசைகளில் மெரூன் நூலால் ஓட்டுத் தையல் போட்டுவிட்டு, அதனுள் பச்சை நூலால் கோத்து வாங்கவும் (படம்-7).

மூன்று வகை தையல்கள்தான் இந்த எம்ப்ராய்டரிக்கு அடிப்படை (படம்-8).

அடுத்த ஐந்தாவது வரிசையில் மறுபடியும் 'மாக் பெக்கின்கீஸ்' தையலைத்








▲ அதே கலர் நூலில் முறுக்குத் தையல்.

தொடங்கவேண்டும். முதலில் போட்ட அதே வரிசையில் அடுத்தடுத்த வகை தையல்களைப் போட்டு முடித்தால் எம்ப்ராய்டரி ஓவர்.

எம்ப்ராய்டரியை முடித்த பிறகு, துணியை பின்புறம் திருப்பி அதன்மேல் ஃபோம் மற்றும் லைனிங் துணியைப் பொருத்தி, சுற்றிலும் ¼" இடைவெளி




நான்கு வரிசை ஓட்டுத் தையலில் பச்சை நூலால் கோத்து வாங்கும் தையல். ▶

மூன்று வகை தையலுடன் பாதி எம்ப்ராய்டரி ஓவர். ▼




விட்டு நீளவாக்கிலும், பக்கவாட்டில் ஒரு பக்கமும் தைக்க வேண்டும்.

உறையின் வாய்ப்புறத்தில் ஒரு 'இன்ச்' அளவுக்கு மடித்துத் தைத்து பட்டன் அல்லது 'வெல்க்ரோ' பொருத்தவும்.

இப்போது எம்ப்ராய்டரி வெளிப்புறம் வருமாறு திருப்பினால், உங்கள் மூக்குகண்ணாடிக்கு அழகான கூடு தயார்.



## உடைகளில் எம்ப்ராய்டரி செய்வது எப்படி என்று இப்போது பார்க்கலாம். முதலில் பிளவுஸில் எம்ப்ராய்டரி செய்வோமா..?



மதுரா கோட்ஸ் 'கசூதி நெட்' உபயோகித்து, இந்த எம்ப்ராய்டரி செய்ய வேண்டும். மிகச் சிறிய கண்கள் கொண்ட இந்தத் துணிவலையை உபயோகித்துப் போடும்போது, எம்ப்ராய்டரி அருமையாக அமையும்.

கரூர் மேட்டித் துணியில் 1"-க்கு மொத்தம் பத்து துளைகள். பாம்பே டையிங் மேட்டித் துணியில் 1"-க்கு மொத்தம் பதினேழு துளைகள். 'கசூதி நெட்' துணி வலையில் 1"-க்கு மொத்தம் இருபத்தோரு துளைகள் உள்ளன. அப்படியானால் பார்த்துக் கொள்ளுங்கள்... கசூதி துணிவலையில் எந்தளவு நெருக்கமாக தையல் அமையுமென்று!

பிளவுஸின் முதுகுப்புறமும் இரண்டு கைகளிலும் எம்ப்ராய்டரி செய்யலாம். அரைமீட்டர் நீளத்துக்கு கசூதி துணிவலையை வாங்கி வைத்துக்கொண்டால், தேவைக்கேற்ப உபயோகித்துக் கொள்ளலாம்.

**தேவையான பொருட்கள்:**

கசூதி நெட் - 3" அகலம், சுமார் அரைமீட்டர் நீளம்.

**நூல் நிறம்:**

*1003 (பிஸ்கட் கலர்) - 2 ஸ்கெயின்*
*0388 (சில்வர் கலர்) - 1 ஸ்கெயின்*
*0302 (மஞ்சள் கலர்) - 2 ஸ்கெயின்*

இந்த இதழில் செய்யப்போகும் எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் நான்கு இழை கொண்ட நூலைப் பயன்படுத்த வேண்டும்.

**பிளவுஸ் துணி:**

தேவைப்பட்ட நிறத்தில், தேவைப்பட்ட அளவு.

எந்த வகை எம்ப்ராய்டரியையுமே முதலில் துணியில் பண்ணிவிட்டு, பிறகுதான் தைக்கக் கொடுக்க வேண்டும். அதன்படி, டெய்லரிடம் சட்டைத் துணியைக் கொடுத்து, முதுகுப்புறமும் கைப்பகுதிகளையும் 'மார்க்' பண்ணி வாங்கி, முதுகுப்புறம் டெய்லர் தைக்கத் தேவையான அளவு இடம் விட்டுவிட்டு, அதற்கு 'கால் இன்ச்' மேலாகத் துணிவலையைப் பொருத்தவும்.

துணிவலையின் நான்குபுறமும் நான்கு வரிசைகளை விட்டுவிட்டு, சுற்றிலும் ஒட்டுத் தையல் போட்டு, பிளவுஸோடு துணிவலையைப் பொருத்தவும் (படம்-1).

இனி எம்ப்ராய்டரியை ஆரம்பிக்கலாம்.

**துணிவலையைப் பொருத்தி.. ▼**

1





துணிவலைக்கு உட்புறமும் சுற்றிலும் இரண்டு வரிசைகளை விட்டு விடுங்கள்.

இப்போது பிஸ்கட் கலர் நூலால் நான்கு வரிசை ஒட்டுத் தையல் போட வேண்டும். முதல் வரிசையைப் பார்ப்போம்.

அடிவழியாக ஊசியை முதல் புள்ளியில் கொண்டுவந்து அடுத்த புள்ளியில் போடவும். அடுத்து வரும் மூன்று புள்ளிகளை விட்டுவிட்டு, நான்காவது புள்ளியில் மறுபடியும் ஊசியை கொண்டுவந்து, ஐந்தாவது புள்ளியில் இணைக்கவும் (படம்-2). இதே மாதிரி கடைசிவரை போடவும்.

அடுத்த ஒரு வரிசையை விட்டுவிட்டு, மூன்றாவது வரிசையில் மறுபடியும் ஒட்டுத் தையல் மேலே சொன்னபடி போடவும். இதே மாதிரி மொத்தம் நான்கு வரிசை ஒட்டுத் தையலை பிஸ்கட் கலர் நூலில் போடவும் (படம்-3).

அடுத்த ஐந்து வரிசைகளை விட்டுவிட்டு, ஆறாவது வரிசையில் மீண்டும் ஒட்டுத் தையலை பிஸ்கட் கலர் நூலில் ஆரம்பிக்க வேண்டும். இதற்கு ஒன்றாம் புள்ளியில் நூலை எடுத்து, மூன்றாம் புள்ளியில் கோக்க வேண்டும் (படம்-4).

அடுத்த ஐந்து வரிசைப் புள்ளிகளை விட்டுவிடுங்கள்.

2



**முதல்வரிசை ஒட்டுத்தையல் ▲**

3



**முதல் நான்கு வரிசை ஒட்டுத் தையல்.. ▲**

4



**ஆறாவது வரிசையில் மீண்டும் ஒட்டுத் தையல்.. ▲**

ஆறாவது வரிசையில் மஞ்சள்நிற நூலால் ஒட்டுத் தையல் போட வேண்டும். இதற்கு ஒரு புள்ளியில் ஊசியை எடுத்து, அடுத்த புள்ளியில் கோக்க வேண்டும், அடுத்து வரும் மூன்று புள்ளிகளை விட்டுவிட்டு, மறுபடி தையலை ஆரம்பிக்க வேண்டும்.

இப்படி ஒரு வரிசை ஒட்டுத் தையல் போட்டு முடிந்ததும், அடுத்த வரிசையை விட்டுவிட்டு, அதற்கடுத்த வரிசையில் முன்மாதிரியே ஒட்டுத் தையல் போட வேண்டும். இப்படி மஞ்சள் கலர் நூலால் மூன்று வரிசை ஒட்டுத் தையல் போடவும் (படம்-5).

அடுத்த நான்கு வரிசை விட்டுவிட்டு மறுபடி பிஸ்கட் கலர் நூலால் ஒரு வரிசை ஒட்டுத் தையல் போடவும்.

அடுத்த ஐந்து வரிசைகளை விட்டுவிட்டு, நான்கு வரிசை ஒட்டுத் தையல்கள் போடவும்

இப்படி மொத்த ஒட்டுத் தையலும் போட்டு முடித்த பிறகு துணிவலையை ஜாக்கிரதையாக பிரித்தெடுக்க வேண்டும்.

பிளவுஸுடன் இணைப்பதற்காக சுற்றிலும் போட்ட தையலை முதலில் பிரித்து எடுங்கள். பின்னர், கனமான ஊசியின் உதவியால் துணிவலையை




மஞ்சள் நூலால் மூன்று வரிசை ஒட்டுத் தையல் ▲




இந்த எம்ப்ராய்டரிக்கான சுருக்கமான கணக்கு.

முதல் 7 வரிசைகளில் – 'இன்டர் லேஸ்' தையல்.

அடுத்த 5 வரிசைகள் விட்டுவிடவும்.

6–வது வரிசையில் இரட்டை ஒட்டுத் தையல்.

அடுத்து வரும் 4 வரிசைகளை விட்டுவிடவும்.

அதன்பின் வரும் 5 வரிசைகளில் 'இன்டர் லேஸ்' தையல்.

பின்வரும் நான்கு வரிசைகளை விட்டுவிட்டு,

ஒரு வரிசையில் இரட்டை ஒட்டுத் தையல்.

அடுத்து 5 வரிசைகளை விட்டுவிட்டு,

மறுபடி 7 வரிசைகளில் 'இன்டர் லேஸ்' தையல்.




ஒவ்வொரு இழையாக உருவி.. ▲




கையால் உருவவும்.. ▲





விகடன் பிரசுரம்




▲ முதல் நான்கு வரிசையில் இன்டர் லேஸ்..




கையில் கச்சித எம்ப்ராய்டரி.. ▲




மொத்த தையல் ஓவர்.. ▲




முதுகுப்புற எம்ப்ராய்டரி.. ▲

ஒவ்வொரு இழையாக உருவ வேண்டும் (படம்–7).

ஊசி முனையால் இழையை சிறிது பிரித்த பிறகு கையால்தான் கடைசிவரை உருவ வேண்டும் (படம்–8).

இப்படி எல்லா இழையையும் முற்றிலுமாக உருவியபிறகு பார்த்தால், பிளவுஸ் துணியில் ஒரே சீராக ஓட்டுத் தையல் அமைந்திருக்கும்.

இதில் இப்போது 'இன்டர் லேஸ்' தையலை முதலிலுள்ள நான்கு வரிசையில் செய்ய வேண்டும். மஞ்சள் கலர் நூலை இவற்றினிடையே கோத்து வாங்கவும் (படம்–9).

அடுத்த ஒரு வரிசை ஒட்டுத் தையலின் இடையே சில்வர் நூலால் ஒட்டுத் தையல் போடவும்.

அதற்கடுத்த மூன்று வரிசை மஞ்சள் கலர் ஒட்டுத் தையலினிடையே அதே நிற நூலால் 'இன்டர் லேஸ்' தையல் போடவும்.

அதற்கடுத்த ஒரு வரிசை ஒட்டுத் தையலின் இடையே சில்வர் நூலால் ஒட்டுத் தையல் போடவும்.

அதனையடுத்து உள்ள நான்கு வரிசை பிஸ்கட் கலர் நூல் ஒட்டுத் தையலிடையே மஞ்சள் நூலால் 'இன்டர் லேஸ்' தையல் போடவும் (படம்–10).

முதுகுப்புறம் முழுமையாக செய்யப்பட்ட எம்ப்ராய்டரி (படம்–11).

இதேபோல இரண்டு கைப்பகுதிகளிலும் 'துணிவலை' பொருத்தி எம்ப்ராய்டரி செய்யவும் (படம்–12).

பிறகு டெய்லரிடம் கொடுத்து பிடித்த டிசைனில் பிளவுஸ் தைத்துப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

முக்கிய குறிப்பு: துணிவலை உபயோகித்துச் செய்யும்போது, ஊசியை சாய்த்துப் பிடிக்கக்கூடாது. ஊசியை நேராகப் பிடித்துப் போடாவிட்டால், தையல் உருமாறி கோணலாக் காட்சியளிக்கும்.

அடுத்து, ஜீன்ஸ் டாப்ஸ் ஒன்றுக்கு கரூர் மேட்டி துணியில் எம்ப்ராய்டரி செய்வோம்.



**காலேஜ் செல்லும் உங்கள் மகளின் ஜீன்ஸுக்கு மாட்ச்சாக பிஸ்கட் கலர் கரூர் மேட்டித் துணியிலான டி-ஷர்ட் ஒன்றுக்கு எம்ப்ராய்டரி செய்வோம்.**

**தேவையான பொருட்கள்:**

கரூர் மேட்டி துணி (பிஸ்கட் கலர்) – *1 ½ மீட்டர்*
லைனிங் துணி (பிஸ்கட் கலர்) – *1 ½ மீட்டர்*

**நூல் நிறம்:**

நம்பர் 0903 (காபிப்பொடி கலர்) – *3 ஸ்கெயின்*
நம்பர் 0339 (செங்கல் கலர்) – *4 ஸ்கெயின்*
நம்பர் 0300 (க்ரீம் கலர்) – *1 ஸ்கெயின்*

Back Stitch போடும் விதம் **a-விலிருந்து அடிவழியாக b-க்கு வந்து.. b-விலிருந்து அடிவழியாக c-க்கு வந்து..** ▼




இந்த முறை எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் நான்கு இழை நூல் பயன்படுத்த வேண்டும். முன்பே சொன்னபடி, எம்ப்ராய்டரி செய்து முடித்த பிறகுதான் தைக்கக் கொடுக்க வேண்டும்.

இந்த டாப்ஸ் பட்டன் இல்லாமல், அப்படியே தலை வழியாகப் போட்டுக்கொள்ளும் வகையில் தைக்கப்பட்டுள்ளது, அதற்கேற்ப நன்கு விரிந்து கொடுக்கும் வகையில், முன்பக்கக் கழுத்து மாடல் அமைந்துள்ளது.

உங்கள் டெய்லரிடம் துணியைக் கொடுத்து, முன்பக்கக் கழுத்து எங்கே வருகிறது என்பதை 'மார்க்' செய்து வாங்கிக் கொள்ளுங்கள். அதற்கு அரை இன்ச் கீழிருந்துதான் எம்ப்ராய்டரிக்கான அளவைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதாவது, மேலிருந்து ஒரு நான்கு வரிசைகளை விட்டுவிடுங்கள். அதற்கடுத்து வரும் ஐந்தாவது







வரிசையிலிருந்து கணக்கில் கொள்ள வேண்டும். அங்கிருந்து தொடங்கி, கீழ்வரும் முப்பத்தோராவது வரிசையின் நடுப்புள்ளியிலிருந்து எம்ப்ராய்டரியைத் தொடங்க வேண்டும்.

எம்ப்ராய்டரிக்குப் போவதற்கு முன்னால், 'பேக் ஸ்டிச்' (Back Stitch) என்னும் புதுவகை தையல் ஒன்றைப் பார்ப்போம். இந்த




**ரிவர்ஸில் மறுபடி a-க்குள் சேர்க்கவும்..** ▲




**பூ-டிசைன் ஆரம்பம்..** ▲




**பூ-டிசைன் எம்ப்ராய்டரி ஓவர்..** ▲




டைமண்ட் டிசைன் ஆரம்பம்.. ▲

எம்ப்ராய்டரி முழுவதுமே 'பேக் ஸ்டிச்' முறையில்தான் போடப்பட்டுள்ளது.

'பேக் ஸ்டிச்' போடும் விதம்...

1 . . . . . . .

a b c d e f g

முதலில் ஊசியை A-யிலிருந்து B-க்குள் கோக்கவும்.

2 . . . . . . .

a b c d e f g

B-யிலிருந்து அடிவழியாக C புள்ளிக்கு மேலாக ஊசியைக் கொண்டு வரவும் (படம்-2).

3 . . . . . . .

a b c d c f g

C-யிலிருந்து மறுபடி B-க்கு ரிவர்ஸில் ஊசியைக் கொண்டுவந்து... (படம்-3).

4

a b c d c f g

B-யின் அடிவழியாக மறுபடி C புள்ளிக்கு மேலாக ஊசியைக் கொண்டுவந்து D புள்ளியினுள் செலுத்தவும்.

மறுபடி அடுத்த 'பேக் ஸ்டிச்' E புள்ளியிலிருந்து D புள்ளிக்கு ரிவர்ஸில் கொண்டு வருவதன் மூலம் துவங்கும்.

இனி, எம்ப்ராய்டரிக்குப் போகலாம்.

நடுப்புள்ளியான 31-வது புள்ளியில் X ஷேப்பில் நான்கு

டைமண்ட் டிசைன் ஓவர்.. ▼





பூ-டிசைனும் டைமண்ட் டிசைனும் இணைந்த எம்ப்ராய்டரி.. ▲

தையல்கள் (க்ரீம் கலர் நூலில்) போடவும். இதன் நான்கு புறமும் தலா நான்கு தையல்கள் 'பேக் ஸ்டிச்' முறையில் போடவும்.

அதைச் சுற்றி ஒரு வரிசை விட்டுவிட்டு, அடுத்த வரிசையில் செங்கல்நிற நூலால் 'பேக் ஸ்டிச்' போடவும் (படம்-4).

அடுத்த ஒரு வரிசை விட்டுவிட்டு, மறுபடி க்ரீம் நிற நூலால் ஒரு வரிசை பேக் ஸ்டிச் போடவும்.

அதற்கடுத்த ஒரு வரிசையை விட்டுவிட்டு, மறுபடி செங்கல்நிற நூலால் பேக் ஸ்டிச் போட்டு முடித்தால், பூ டிசைன் எம்ப்ராய்டரி ஓவர்.

இனி, 'டைமண்ட் டிசைன்' எம்ப்ராய்டரி செய்யலாம்.

பூ டிசைனின் பக்கவாட்டிலிருந்து 12 மற்றும் 13-வது புள்ளியில் இரு தையல்கள் போடவும்.

அதற்கடுத்த நாலாவது புள்ளியில் தொடங்கி 'டைமண்ட் ஷேப்'பில் செங்கல்நிற நூலால் எம்ப்ராய்டரி செய்யவும். அதற்கடுத்த நாலாவது புள்ளியில் தொடங்கி, மற்றொரு வரிசை எம்ப்ராய்டரி செய்யவும் (படம்-5).

இடைப்பட்ட இரண்டாம் வரிசைப் புள்ளிகளில் காபிப்பொடி கலர் நூலால் மூன்று வரிசைகள் எம்ப்ராய்டரி செய்ய வேண்டும் (படம்-6).

பூ டிசைனைச் சுற்றிலும் நான்கு பக்கமும் டைமண்ட் ஷேப் எம்ப்ராய்டரி முடிந்ததும் மறுபடி பூ டிசைன் தொடங்க வேண்டும்.

மேற்கண்ட டாப்ஸ் அளவுக்கு ஐந்து பூ டிசைனும் பத்து டைமண்ட் வகை எம்ப்ராய்டரியும் செய்தால் அழகாக இருக்கும்.

டி.வி. வைக்கும் மர ஷோ-கேஸ் மேலாகப் போடப்படும் அலங்காரத் துணி உறைக்கு எம்ப்ராய்டரி செய்வோம்... இதில் நாம் உபயோகிக்கப் போவது முழுக்க முழுக்க 'ஸ்டார் ஸ்டிச்' (Star Stitch) எனப்படும் 'நட்சத்திர தையல்'.



நான்கு புள்ளிகளுக்கு ஓட்டு தையல் ▼



நான்குபுறமும் கோத்து வாங்கி நடுப்புள்ளிக்கு வரவும்.. ▼



**தேவையான பொருட்கள்:**

பாம்பே டையிங் மேட்டி துணி – 1 மீட்டர்

**நூல் நிறம்:**

நம்பர் 035 (அடர் பிங்க்) – 3 ஸ்கெயின்

நம்பர் 0256 (பச்சை) – 2 ஸ்கெயின்

நாலு இழை கொண்ட நூலை எடுத்துக் கொண்டு எம்ப்ராய்டரி தொடங்குவோம்..! டி.வி. கேபினட் கவருக்கு அடிப்பாகம் பார்டர் கட்டியது மாதிரி இந்த 'நட்சத்திர தையலை'ப் போட்டால் அழகு அள்ளிக்கொண்டு போகும்.

துணியின் அடிப்புறம் மடித்துத் தைக்க சிறிது இடம் விட்டுவிட்டு அதற்கு மேலிருந்து எம்ப்ராய்டரியை ஆரம்பிக்க வேண்டும். இனி, 'ஸ்டார் ஸ்டிச்' என்கிற 'நட்சத்திர தையல்' போடும் விதத்தைப் பார்ப்போம்..

ஒரு நட்சத்திர தையல் என்பது மேலிருந்து கீழாக ஒன்பது வரிசையிலும் பக்கவாட்டில் 7 புள்ளிகளும் கொண்ட சதுரத்துக்குள் அமையும்.

ஆகவே, எம்ப்ராய்டரி ஏரியாவின் கீழிருந்து மேலேயுள்ள ஐந்தாவது வரிசையின் ஓரப்புள்ளியில் ஆரம்பித்து அடுத்துள்ள நான்காவது புள்ளியில் பிங்க் நூலால் ஓட்டுத்தையல் போடவும் (படம்-1).







அடுத்த தையலை '┐' ஷேப்பில் போடவேண்டும். அதாவது, தையல் முடிந்த புள்ளிக்கு நேர்கீழே 5 வது வரிசைப் புள்ளியில் இருந்து மேற்புறமாக நூலைக் கொண்டுவந்து மறுபடி நடுப்புள்ளியில் சேர்க்கவும். கீழ்க்கண்ட படத்தைப் பார்த்தால் புரியும்.



இதேபோன்று மேற்புறம் 5-வது வரிசைப் புள்ளியிலிருந்து நடுப்புள்ளிக்கும், பிறகு பக்கவாட்டில் 4-வது புள்ளியிலிருந்து நடுப்புள்ளிக்கும் தையல் போடவும் (படம் 2).

இப்போது '+' மாதிரி தையல் அமைந்திருக்கும். இதன் நான்குபுறமும் நட்சத்திரம் மாடலில் தையல் போட வேண்டும்.

உதாரணத்துக்கு, வலப்புறம் குறுக்குவாட்டில் இருந்து நடுப்புள்ளிக்கு தையல் போடவும் (படம்-3). அதேமாதிரி நான்குபுறமும் தையலை முடித்தால், முதல் நட்சத்திரம் 'பிங்க்' கலரில் கண்சிமிட்டும்.

மறுபடி பக்கவாட்டில் நான்காவது புள்ளியில் ஓட்டுத் தையல் போட்டு அடுத்த நட்சத்திரத்தை ஆரம்பிக்க வேண்டும். (படம்-4).

இதேபோல வரிசையாக பார்டர் கட்டியது மாதிரி ஒரு வரிசை பிங்க்



குறுக்கு வாட்டில் நான்குபுற தையல்.. ▲



ஒரு நட்சத்திர தையல் ஓவர்.. ▲



ஒரு வரிசை நட்சத்திரங்கள் அணிவகுப்பு.. அடுத்த வரிசை ஆரம்பம்.. ▶

கலர் நூலில் நட்சத்திர தையல் போட்டு முடித்ததும், அடுத்த வரிசையை பச்சை நூலால் தொடங்க வேண்டும்.

இரண்டு நட்சத்திர தையல்களின் பக்கவாட்டு தையல்களுக்கு இடைப்பட்ட புள்ளியில் தொடங்கி மேலுள்ள 5-வது

**முதலில் போட்டது மாதிரியே இரண்டாவது வரிசையிலும் தையல்.. ▶**







**◀ இரு நிறங்களில் இரு வரிசை நட்சத்திர தையல்கள் ஓவர்..**

பச்சைநிற நட்சத்திர தையல் அமைந்திருக்கும் (படம்-7).

முதல்வரிசை பிங்க் நிற நட்சத்திரத் தையலுக்கு இணையாக, மூன்றாவது வரிசை நட்சத்திர தையலை பிங்க் நூலால் போடத் துவங்கவும் (படம்-8).

மூன்று வரிசைகளிலும் அமைந்த வரிசையில் பச்சை நூலால் கோத்து வாங்க வேண்டும். (படம்-5).

பிங்க் நூலில் போட்டது மாதிரியே பச்சை நூலால் நட்சத்திர தையலைப் போடவும் (படம்-6).

பிங்க் நிற நட்சத்திரங்களுக்கு இடைப்பட்ட புள்ளிகளில்




**மூன்றாவது வரிசை ஆரம்பம் ▶**




**◀ மூன்று வரிசை நட்சத்திர தையல்களுடன் எம்ப்ராய்டரி ஓவர்..**

வண்ணமிகு நட்சத்திரங்களின் அணிவகுப்பு கண்ணைப் பறிக்கும். (படம்-9).

துணியின் நீளத்துக்கேற்ப முழுக்க எம்ப்ராய்டரியை இதேபோன்று முடித்து, டி.வி-யின்மேல் போர்த்தி அழகுபார்க்க வேண்டியதுதான்.





## இப்போது குஷன் கவரில் எம்ப்ராய்டரி செய்வதில் மேலும் சில நுணுக்கங்களைப் பார்ப்போம்

**தேவையான பொருட்கள்:**

க்ரீம் கலர் கரூர் மேட்டி துணி - 20''×20'' அளவு.

**நூல் நிறம்:**

0237 (இளம்பச்சை) - 3 ஸ்கெயின்
0228 (அடர் பச்சை) - 3 ஸ்கெயின்
013 (மெரூன்) - 3 ஸ்கெயின்
028 (லைட் பிங்க்) - 3 ஸ்கெயின்
094 (ஊதா நிறம்) - 3 ஸ்கெயின்

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் ஆறு இழை கொண்ட நூல் உபயோகிக்க வேண்டும்.

கரூர் மேட்டி துணியை உறையாக தைத்து முடித்தால் 18''×18'' அளவில் இருக்கும்.

ஆகவே, இந்த அளவுக்குள்தான் எம்ப்ராய்டரி செய்ய வேண்டியிருக்கும். இதிலும் உட்புறமாக சுமார் 3 வரிசைகளை விட்டு விடுங்கள்.

இனி எம்ப்ராய்டரிக்குப் போவோம்..



கொடியும், பூவுமாக மொத்தம் ஏழு வரிசை எம்ப்ராய்டரி வரும்.
'பேக் ஸ்டிச்' மற்றும் நட்சத்திர தையல் உபயோகித்துப் போட வேண்டும்!

நடுவரிசையிலிருந்துதான் எம்ப்ராய்டரி தொடங்க வேண்டும். அதன்பிறகு இருபுறமும் தலா மூன்று வரிசை எம்ப்ராய்டரிகளைச் செய்யலாம்.

ஒரு வரிசை எம்ப்ராய்டரிக்கு பக்கவாட்டில் மொத்தம் 15 புள்ளிகள் தேவைப்படும்.

ஆகவே, சரியாக கணக்குப் பார்த்து, மேட்டி துணியின் நடுவாக உள்ள 15 புள்ளிகளைக் கண்டறிந்து எம்ப்ராய்டரியைத் துவக்க வேண்டும்.




**'பேக் ஸ்டிக்' முறையில் தையல் ஆரம்பம்.. ▲**




முதலில் அடர்பச்சை நிற நூலால் கொடியை எம்ப்ராய்டரி செய்துவிட்டு, பிறகு பூ டிசைன் போட வேண்டும்.

'பேக் ஸ்டிச்' முறையில்

**◀ ஆரம்பித்த புள்ளிக்கே வந்து..**




அடுத்த புள்ளியில் கோத்து.. ▲

கொடி போடலாம்.

நடுவாக நாம் 'மார்க்' செய்துள்ள 15 புள்ளிகளில், இரண்டாம் புள்ளிக்கு மேலுள்ள புள்ளியில் அடிவழியாக ஊசியைக் கொண்டு வந்து முதல் புள்ளியினுள் கோக்கவும் (படம்–1).

எம்ப்ராய்டரியைத் துவங்கிய அதேபுள்ளியில் மறுபடியும் ஊசியைக் கொண்டு வரவும் (படம்-2).

குறுக்குவாட்டில் அடுத்துள்ள புள்ளியினுள் ஊசியைச் செலுத்தவும் (படம்–3).

குறுக்குவாட்டில் அடுத்துள்ள புள்ளியின் மேற்புறமாக ஊசியைக் கொண்டுவந்து (படம்–4) மறுபடியும், முன்னதாக உள்ள புள்ளியில் செலுத்தவும்.

மறுபடியும் அடிவழியாக அடுத்துள்ள புள்ளியின் மேற்புறம் ஊசியைக் கொண்டுவந்து அடுத்துள்ள குறுக்குவாட்டுப் புள்ளியில் செலுத்தவும்.

இப்படி குறுக்குவாட்டாக ஐந்து 'பேக் ஸ்டிச்' தையல்கள் போட்டு முடித்தபிறகு, தொடக்கத்திலிருந்து இரண்டாவதாக உள்ள தையலின் மேற்புறமாக ஊசியை கொண்டு வரவும் (படம்–5).

குறுக்குவாட்டில் அதற்கடுத்ததாக உள்ள புள்ளியினுள் ஊசியைச் செலுத்தவும் (படம்–6).

அதற்கடுத்த புள்ளியின் அடிவழியாக ஊசியைக் கொண்டுவந்து மறுபடி முதற் தையலினுள் கோக்கவும்.




அதற்கடுத்த புள்ளிக்கு ▲
அடிவழியாக ஊசியைக் கொண்டு வரவும்




ஐந்து தையல் முடிந்தபின்
அடிவழியாக இரண்டாவது ▶
தையலுக்கு வரவும்

இப்படி வலப்புறம் இடப்புறமாக இரண்டிரண்டு 'பேக் ஸ்டிச்'கள் போட்டு கொடி மாதிரி டிசைன் போடவும்.

பக்கவாட்டில் இருபுறமும் மாதிரியும் மாதிரியும் டிசைன் தோற்றமளிக்க வேண்டும். இதை இரண்டு டைமண்ட்களாக டிசைன் போட வேண்டும். மேற்பக்கம் போட்டு முடித்த இரண்டாவது தையலின் அடிப்புற வழியாக ஊசியைக் கொண்டுவந்து – அடுத்து குறுக்குவாட்டில் கீழ்நோக்கி வரும் புள்ளியில் ஊசியைக் கோர்க்கவும் (படம்–7).

அதேபோல அடுத்து ஒரு தையலை போட்டுவிட்டு. மேற்புறமாக அடுத்தடுத்து மூன்று தையல்கள் போடவும். இது பார்ப்பதற்கு W தோற்றத்தில் இருக்கும்.

மறுபடி அடிவழியாக ஊசியைத் தொடக்கப்புள்ளிக்கு கொண்டு வரவும் (படம்–8).






குறுக்குவாட்டில் அடுத்த புள்ளியினுள் ▲
நூலை கோக்கவும்..

(குறிப்பு: நூலை அடிப்புறம் ரொம்ப நீளமாக அப்படியே கொண்டு வரக் கூடாது. அருகருகே உள்ள தையல்களினுள் நுழைத்துக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் நூலில் சிக்கல் ஏற்படாது.)

இப்போது மேலும் இரண்டு 'பேக் ஸ்டிச்' தையல்கள் போட்டால் ஒரு டைமண்ட் (◇) 'ஷேப்'பில் உருவாகியிருக்கும். அடுத்துள்ள கட்டங்களையும் அதேபோல் இணைத்து மூன்று டைமண்ட்களை உருவாக்கவும் (படம்–9).

இதேமாதிரி மேட்டி துணியின் முழு நீளத்துக்கும் டைமண்ட் டிசைன் களை போட்டு முடித்த பிறகு, பார்ப்பதற்கு இப்படி இருக்கும் (படம்–10). இப்போது பக்கவாட்டில் கொம்பு கொம்பாக

முதல் டைமண்ட் ஆரம்பம்..
▼




முதல் டைமண்ட் பாதி முடிந்த
நிலையில்.. ▼





▲ கொடி டிசைன் ஓவர்..

உச்சியில் ஒரு டைமண்ட் போடவும்..

▼




நீட்டிக் கொண்டிருக்கும் பகுதிகளில் பூ டிசைன் போட வேண்டும்.

பச்சை நூல் முடிந்த புள்ளியில் ஊதா நூலை அடிவழியாக கொண்டு வந்து அடுத்துள்ள இரண்டாவது புள்ளியினுள் கோக்கவும்.

அடிவழியாக மறுபடி ஆரம்பப் புள்ளிக்கு வந்து, மேற் புறமாக உள்ள இரண்டாவது புள்ளியினுள் கோக்கவும்.

இதேபோல, கீழ்ப்புறமுள்ள இரண்டாவது புள்ளியிலும் கோத்து வாங்கி, முதல் ஸ்டெப் நட்சத்திர தையலைப் போடவும் (படம்-11).

அடுத்து மேலும் மூன்றுபுற தையல்களை நட்சத்திர வடிவில் போட்டு முடித்தால் ஊதா கலரில் அழகிய பூ உருவாகியிருக்கும். எம்ப்ராய்டரி முடியும் உச்சியிலும் ஒரு பூ




▲ பக்கவாட்டில் நட்சத்திர தையலில் பூ டிசைன்..

போட வேண்டும் (படம்-12).

மொத்தம் ஐந்து வரிசை ஊதாப் பூக்கள் போட்ட பிறகு, மெரூன் கலர் நூலால் ஐந்து வரிசைப் பூக்களைப் போடவும் (படம்-13).

பூவும் கொடியுமாக நடுவரிசை முழுக்கப் போட்டு முடித்தபின், அடுத்து வரும் பத்து புள்ளிகளை விட்டுவிட்டு, மறுபடியும் இளம்பச்சை நூலால் 'பேக் ஸ்டிச்' முறையில் கொடி டிசைனைத் துவங்க வேண்டும். இதன் இருபுறமும் பிங்க் கலர் நூலால் மட்டுமே பூ டிசைன் அமையும் (படம்-14).

இது முடிந்ததும் அடுத்த பத்துப்








▲ உச்சியில் ஒரு பூவும் பக்கவாட்டில் இரு பூக்களும்..




▲ கொம்பு கொம்பாக இருபுறத்தின் உச்சியில் பூ டிசைன்..




◀ இரு வரிசை எம்ப்ராய்டரி முடிந்தது..

புள்ளிகளை விட்டுவிட்டு மறுபடி அடர்பச்சை நூலால் கொடி எம்ப்ராய்டரியைத் துவக்கவும்.

இதேபோல் இருபுறமும் மாறி மாறி டிசைன் செய்து முடித்தால், குஷன் கவர் கலர்ஃபுல்லாக கண்சிமிட்டும்.

**வ**ரிசையாக கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் என்று பண்டிகைகள் வருகின்றன! வீட்டில் ஐந்தாறு வயது பெண்குழந்தை இருந்தால், அவளுக்கு பாம்பே-டையிங் மேட்டி துணியில் மயில் மற்றும் பூ டிசைன் எம்ப்ராய்டரி செய்த புது ஸ்கர்ட் தைத்துப் போடலாமே...

பிஸ்கட் கலரில் பாம்பே-டையிங் மேட்டி துணி 1 மீட்டர் 10 சென்டி மீட்டர் அளவுக்கு வாங்கிக் கொள்ளுங்கள்.

ஸ்கர்ட்டின் மேற்புறம் பட்டையாக பெல்ட் மாதிரி பட்டி வைப்பதற்காக 4" வெட்டி மடித்து தைக்கவும். மீதியுள்ள துணியில் கீழே 2 ½" மடித்துத் தைக்க இடம்விட்டுவிட்டு, அதற்கு மேலாக 2"-ல் மார்க் பண்ணி ஒரு ஓட்டுத் தையல் போட்டுக்கொண்டால் அதனுள் எம்ப்ராய்டரி செய்ய வசதியாக இருக்கும்.

ஸ்கர்ட்டின் முன்புறம் மட்டுமே மயில் டிசைனும் பூ டிசைனும் வரும். மற்றபடி பார்டர் கட்டியது மாதிரியான வளைவு டிசைனை பின்புறமும் செய்தால் அழகாக இருக்கும்.

இந்த எம்ப்ராய்டரிக்குத் தேவையான பொருட்களை பார்ப்போம்...

**மதுரா கோட்ஸில் 'ஆங்கர்' நூல் நிறம்:**

**பார்டர் வளைவுக்கு:-**

எண் 0149 (அடர் நீலம்) - 2 ஸ்கெயின்

எண் 0132 (இள நீலம்) - 1 ஸ்கெயின்

எண் 0923 (அடர்பச்சை) - 1 ஸ்கெயின்

எண் 0189 (ராமர்பச்சை) - 2 ஸ்கெயின்

**மயில் டிசைனுக்கு:** ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள அடர்நீலம் (எண் 0149) உடலுக்குப் பயன்படும்.



**தோகைக்கு:** எண் 0164 (கடல் நீலம்) - 2 ஸ்கெயின்

எண் 0187 (வெளிர் நீலப்பச்சை) - 1 ஸ்கெயின்

எண் 0239 (இலைப் பச்சை) - 2 ஸ்கெயின்

**மயிலின் கால்களுக்கு:**

எண் 0326 (ஆரஞ்சு) - 1 ஸ்கெயின்

**மயிலின் உடலில் வரும் கலர் புள்ளிகளுக்கு:**

ஆரஞ்சு (0326) தவிர,

எண் 0297 (மஞ்சள்) - 1 ஸ்கெயின்

எண் 0304 (கோல்டன் மஞ்சள்) - 1 ஸ்கெயின்

**பூ டிசைனுக்கு:**

ஏற்கெனவே கூறியுள்ள மஞ்சள், கோல்டன் மஞ்சள், ஆரஞ்சு மற்றும் இலைபச்சை வண்ண நூல்களையே பயன்படுத்திக் கொள்ளலாம்.






◀ குறுக்குவாட்டில் முதல் தையல்..

கோபுரம் மாதிரி அடுத்த தையல்..
▼







▲ அடுத்த வரிசை தையல் ஆரம்பம்..




▲ இரண்டாவது வரிசை கோபுரம் ஓவர்..

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் மூன்று இழை நூலை பயன்படுத்த வேண்டும்.

இனி எம்ப்ராய்டரிக்குப் போவோம்...

துணியை மடித்துத் தைத்து ஒட்டுத் தையல் போட்டதற்கு மேலாக 2 ½" விட்டுவிட்டு அதன்பிறகு நீலநூலால் வளைவு டிசைன் எம்ப்ராய்டரி தொடங்க வேண்டும். நீல நூலால் \ ஷேப்பில் வரிசையாக தைக்கவும் (படம் 1). பிறகு அதே வரிசையில் வலமிருந்து இடமாக '/' ஷேப்பில் நெளிநெளியாக வைத்து முடிக்கவும் (படம் 2).

அதற்கடுத்துள்ள உடனடி வரிசையில் அடர்நீல நூலால் முதலில் இடமிருந்து வலமாக (படம் 3), பின் வலமிருந்து இடமாக தைக்கவும் (படம் 4).

அடுத்த மூன்று வரிசைகளை விட்டுவிட்டு, நான்காவது வரிசையில் மறுபடி இளம்பச்சை நூலால்



1 2 3



▶ பூ டிசைன் எம்ப்ராய்டரி ஆரம்பம்..



◀ மேலிருந்து கீழாக.. வலமிருந்து இடமாக..



▶ குறுக்குவாட்டில் வலமிருந்து இடமாக..



◀ இடமிருந்து குறுக்கில் வலமாக..







▲ டபுள் - கிராஸ் தையல் அடுத்தது ஆரம்பம்..



▲ அடுத்தடுத்து நான்கு தையல்கள்..

ஒரு வரிசையும், அடர் பச்சை நூலால் அடுத்த வரிசையும் போட வேண்டும்.

அடுத்த மூன்று வரிசைகளை விட்டுவிட்டு, மறுபடியும் அடர்நீலம் மற்றும் கடல் நீல நூலால் நெளி டிசைன் போடவும்.

அதன்பிறகு, ஸ்கர்ட்டை சரிபாதியாக மடித்து, முன்புறத்தில் மட்டும் மயில் டிசைன் மற்றும் பூ டிசைன் செய்ய வேண்டும்.

இந்த எம்ப்ராய்டரி மொத்தமுமே 'டபுள் கிராஸ் ஸ்டிச்' முறையில் போட வேண்டும்.

அதாவது மூன்றுக்கு மூன்று புள்ளியில் ✳ அருகேயுள்ள டிசைன் மாதிரி அமைவதுதான் 'டபுள்-கிராஸ் ஸ்டிச்'.

முன்புற ஸ்கர்ட்டின் நடுப் புள்ளியை கண்டறிந்து மயில் டிசைன் போட்டு, அதன் இருபுறமும் பூ மற்றும் மயில் டிசைனை போட வேண்டும்.

இனி பூ டிசைனுக்குப் போவோம்...



▲ அடுத்த வரிசை கோல்டன் மஞ்சள் கலரில்..



சுற்றிலும் இரண்டிரண்டு பூக்கள்.. ▶

மேலிருந்து கீழ்வழியாக மூன்றாவது புள்ளியில் ஊசியைக் கோக்கவும் (படம் 5).

அதே மாதிரி பக்க வாட்டில் மூன்று புள்ளிகளுக்கிடையே ஒரு தையல் போடவும் (படம் 6).




▲ மூன்றாவதாக ஆரஞ்சு கலரில் எம்ப்ராய்டரி..




▲ ஆரஞ்சு கலரில் முதல் பூ டிசைன்..

குறுக்கு வாட்டில் வலப்புறத்தில் ஒரு தையலும் (படம் 7), இடப்புறமிருந்து ஒரு தையலும் போடவும் (படம் 8).

இதே போன்ற தையலை அடுத்த புள்ளியில் ஆரம்பிக்கவும் (படம் 9).

அருகருகே நான்கு 'டபுள் கிராஸ்' தையல்கள் மஞ்சள் கலர் நூலில் போடவும் (படம் 10).

அதற்கடுத்த வரிசையை கோல்டன் மஞ்சள் நூலில் ஆரம்பிக்கவும் (படம் 11). சுற்றிலும் நான்கு நான்காக 'டபுள்-கிராஸ்' தையல் போடவும் (படம் 12).




▲ மஞ்சள், கோல்டன் மஞ்சள், ஆரஞ்சு நிறங்களில் பூ டிசைன்..

அடுத்த வரிசையை ஆரஞ்சு நூலால் தொடங்கவும் (படம் 13). ஒரு தையல் ஓவர் (படம் 14). சுற்றிலும் இரண்டு இரண்டு பூக்களாக ஆரஞ்சு டிசைன் போடவும் (படம் 15).




◀ பச்சை நூலில் பூ டிசைன்..






▲ ஒரு முனையில் பச்சை பூ..




▲ நான்கு முனைகளிலும் பச்சை பூ கொம்பு..

இலைப்பச்சை நிற நூலால் நான்குபுறமும் கொம்பு மாதிரி போடுவதற்கான ஆரம்பம் (படம் 16).

மொத்தம் 5 பூக்கள் போட வேண்டும் (படம் 17).

நான்குபுறமும் 'ஆன்ட்டெனா' மாதிரி பச்சை பூக்கள் (படம் 18).

மயில் டிசைனும் (படம் 19) போட்டு முடித்தால் ஸ்கர்ட் தயார். இந்த ஸ்கர்ட்டுக்கு மொத்தம் மூன்று மயிலும், நான்கு பூக்களும் அமையும்.

▼ மயில் டிசைன்



**டை**னிங் டேபிளில் அழகான துணிவிரிப்பு விரித்து அதன்மேல் விருந்துணவுப் பாத்திரங்களை வைப்பது நவீன கலாசாரம். இந்த துணிவிரிப்புக்கு 'ரன்னர்' என்று பெயர்.

அதேபோல ஒவ்வொரு டேபிளுக்கு முன்பும் துணியாலான 'அலங்கார மேட்' விரித்து அதன்மேல் தட்டு, ஸ்பூன், முள்கரண்டி ஆகியவற்றை வைப்பது வழக்கம்.

அப்படி 'ரன்னர்' மற்றும் 'டேபிள் மேட்'களுக்கான எம்ப்ராய்டரியைப் பார்ப்போம்...

வெளிர் நீல நிறத்தில் 'பாம்பே-டையிங் மேட்'டித் துணியை 1 மீட்டர் 80 செ.மீ அளவுக்கு வாங்கிக் கொள்ளுங்கள்.

மேற்கண்ட அளவுக்கு 2 ரன்னரும் 4 'டேபிள் மேட்'டும் வரும். சில வீடுகளில் ஆறு டேபிள்கள் கொண்டதாக டைனிங் டேபிள் அமைந்திருக்கும். அப்படியிருந்தால் மேற்கண்ட அளவு துணிக்கு 1 ரன்னரும் 6 'டேபிள் மேட்'களும் தைக்கலாம்.

மொத்த துணியில் 18 செ.மீ அகலம் மற்றும் 14 செ.மீ. நீளத்துக்கு நான்கு 'மேட்'களாக கிழித்துக் கொள்ளுங்கள். மீதியுள்ள துணியை சரிபாதியாக 'கட்'பண்ணி இரண்டு மேஜைவிரிப்புகளாக தைத்துக்கொள்ளலாம்.

'டேபிள் மேட்'டை நான்குபுறமும் மடித்து தைக்க அரை இன்ச் அளவுக்கு விட்டுவிட்டு, அதற்கும் மேலாக








▲ மேலிருந்து கீழே ஆறாவது புள்ளிக்கு வரவும்

3 வரிசைகளைவிட்டு ஒரு ஒட்டுத் தையல் போட்டுக்கொண்டால் அதனுள் எம்ப்ராய்டரியை ஆரம்பிக்கலாம்.

**தேவையானவை:**

(மதுரா கோட்ஸ் ஆங்கர்) நூல் நிறம்:–

எண் 0304 (மஞ்சள்) - 2 ஸ்கெயின்

எண் 0840 (சாம்பல்) - 1 ஸ்கெயின்

எண் 1003 (பிஸ்கட்) - 1 ஸ்கெயின்

எண் 0341 (மெரூன்) - 1 ஸ்கெயின்

எண் 0311 (க்ரீம் கலர்) - 1 ஸ்கெயின்

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் ஆறு இழைகொண்ட நூலை பயன்படுத்த வேண்டும்.

இதில் சாட்டின் ஸ்டிச் (satin stitch) ஸ்டார் ஸ்டிச் (star stitch) பேக் ஸ்டிச் (back stitch) மற்றும் டக் ஸ்டிச் (tuck stitch) ஆகிய நான்கு வகை தையல்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

இதில் 'ஸ்டார் ஸ்டிச்'சும், 'பேக் ஸ்டிச்'சும் நமக்கு ஏற்கெனவே அறிமுகமானவைதான்.

'சாட்டின் ஸ்டிச்' போடும் விதத்தைப் பார்ப்போம்.

அடிவழியாக ஊசியை எடுத்து மேற்புறம்




▲ அதே மாதிரி ஏறுவரிசையில் ஒரு தையல்




▲ மூன்றுக்கு பிறகு இறங்குவரிசை தையல்




▲ ஐந்து தையலுக்குப் பின் பக்கவாட்டில் தையல்




▲ நான்கு புறமும் சாட்டின் தையல் ஓவர்




▲ நடுவில் நட்சத்திர தையல் ஆரம்பம்




▲ நடுவில் நட்சத்திர தையல் ஓவர்




▲ நடுவில் நாலாபுறமும் க்ரீம் நூலில் 'டக்கிங்' தையல்..

கொண்டு வந்து கீழேயுள்ள 6-வது புள்ளியில் ஊசியை கோக்க வேண்டும் (படம் 1).

அதேபோல, அடுத்த வரிசை தையலைப் போடவேண்டும். ஆனால், முதல் வரிசையின் ஆரம்பப் புள்ளிக்கு மேலுள்ள இரண்டாவது வரிசைப் புள்ளியில் தையலை துவங்க வேண்டும் (படம் 2).

ஏறு வரிசையில் மூன்று தையல்களை போட்ட பிறகு,
அடுத்த தையலை இறங்கு வரிசையில் ஆரம்பிக்க
வேண்டும் (படம் 3).

இறங்கு வரிசையில் இரண்டு 'சாட்டின் ஸ்டிச்'களைப் போட்ட பிறகு, அதேமாதிரி தையலை பக்கவாட்டில் ஆரம்பிக்க வேண்டும் (படம் 4).

ஆனால், பக்கவாட்டில் ஐந்து புள்ளிகளுக்கு இடையேதான் இந்த தையலைப் போடவேண்டும்.

இதேபோல சுற்றிலும் நான்குபக்கமும் போட்டு முடித்தால், மஞ்சள் நிறத்தில் மெயின் பூ தயார் (படம் 5).

நான்கு புறமும் நடுத் தையலிலிருந்து நடுப்புள்ளிக்கு சாம்பல் கலர் நூலில் 'ஸ்டார் ஸ்டிச்' போடவேண்டும் (படம் 6).

நடுவில் 'பெருக்கல்'குறி மாதிரி சாம்பல் கலர் நூலில் கோத்து முடித்தால் நட்சத்திர டிசைன் முடிந்திருக்கும் (படம் 7).

நட்சத்திரத் தையலில் நீண்டிருக்கும் நான்குபக்க கொம்புக்கு நடுவே க்ரீம் கலர் நூலால் 'டக்கிங்' செய்ய வேண்டும் (படம் 8).

இப்போது, மஞ்சள் பூவின்








▲ வெளிப்புறம் நான்கு பக்கமும் நட்சத்திர தையல்...




▲ மெரூன் நூலில் நான்கு பக்கமும் 'பேக் ஸ்டிச்' தையல்

வெளிப்புறம் நான்கு பக்கமும் 5-க்கு 5 புள்ளி வரிசையில் நட்சத்திர தையல் போடவேண்டும் (படம் 9).

உட்புற நட்சத்திர தையலின் நான்குபுறமும் மெரூன் கலர் நூலால் 'பேக் ஸ்டிச்' செய்யவேண்டும். ஒவ்வொரு 'பேக் ஸ்டிச்'சிலும் ஐந்து தையல்கள் போடவேண்டும் (படம் 10). இப்போது முதல் பூ டிசைன் தயார்.

இதேமாதிரி தொடர்ந்து 'டேபிள் மேட்' முழுக்க ஒரு வரிசை மஞ்சள் பூ டிசைன் போட்டு முடிக்கவேண்டும் (படம் 11).

அடுத்த வரிசை 'சாட்டின் ஸ்டிச்'சை பிஸ்கட் கலர் நூலில் ஆரம்பிக்க வேண்டும்.

முதல் வரிசையில் இரண்டு மஞ்சள் பூக்களுக்கு இடையிலுள்ள நட்சத்திர டிசைனின் மேற்புற நடுஇதழ் முடியும் இடத்தில் பிஸ்கட் கலர் பூ டிசைன் துவங்கும்.

இப்படி மஞ்சள் பூ டிசைனும், பிஸ்கட் கலர் பூ டிசைனுமாக மாற்றி மாற்றி மூன்று வரிசை எம்ப்ராய்டரி செய்யவேண்டும் (படம் 12).




▲ மஞ்சள் பூக்களுடன் ஒரு வரிசை எம்ப்ராய்டரி..




▲ மொத்தம் மூன்று வரிசை எம்ப்ராய்டரி..



இளம் பச்சைநிற 'பாம்பே-டையிங்' மேட்டி துணியிலான 'காபி டேபிள் மேட்' ஒன்றை எம்ப்ராய்டரி செய்வோம்.

இதில் நாம் பயன்படுத்தப் போகும் தையல் 'ஃபோர்-சைடட் ஸ்டிச் (Four-Sided Stitch)' எனப்படும் 'நான்குபுற தையல்.'

இந்த தையலை உபயோகித்து எம்ப்ராய்டரி செய்யும்போது லேஸ் வைத்து தைத்தது மாதிரி இருக்கும்.

**தேவையானவை:**

இளம்பச்சை நிற பாம்பே-டையிங் மேட்டி துணி – 16 இன்ச் நீளம் மற்றும் 24 இன்ச் அகலம்.

**நூல் நிறம் (மதுரா கோட்ஸ் ஆங்கர்):**

நம்பர் 052 (பிங்க் கலர்) – 3 ஸ்கெயின்

நம்பர் 0386 (வெண்முத்து நிறம்) – 3 ஸ்கெயின்

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் நான்கு இழை கொண்ட நூலை பயன்படுத்த வேண்டும். பாம்பே-டையிங் மேட்டித் துணியை சுற்றிலும் இரண்டு இன்ச் அளவுக்கு மடித்துத் தைக்கவும். இப்போது 14 இன்ச் நீளமும் 22 இன்ச் அகலமும் கொண்ட 'காபி டேபிள் மேட்'











எம்ப்ராய்டரிக்கு தயார். தைத்து முடித்த பிறகும், உட்புறம் 2 இன்ச் அளவுக்கு நான்கு பக்கங்களிலும் விட்டுவிட்டு அதன்பிறகு எம்ப்ராய்டரியை ஆரம்பிக்க வேண்டும்.

இனி, 'நான்குபுற தையல்' எப்படி என்று பார்ப்போம்..

பிங்க் நூலை அடிவழியாக மேற்புறம் கொண்டுவந்து, இடது பக்கம் அடுத்துவரும் இரண்டாவது புள்ளியில் நூலை கோக்கவும் (படம் 1).




▲ இடமிருந்து வலமாக..

பிறகு, அடிவழியாக மேற்புறம் இரண்டாவது வரிசைப் புள்ளியில் நூலை கொண்டுவந்து, ஆரம்பித்த புள்ளியில் செலுத்தவும் (படம் 2).




▲ மேலிருந்து கீழ்...

மேற்புற வரிசையில் மூன்றாவது புள்ளிக்கு அடிவழியாக ஊசியைக் கொண்டுவந்து, முதன்முதலில் ஆரம்பித்த புள்ளியில் ஊசியைக் கோக்கவும் (படம் 3). இப்போது மூன்றுபுறங்களில் தையல் ஓவர்.




▲ பக்கவாட்டில் மேலிருந்து கீழ்...

மறுபடியும் அடிவழியாகவே மேற்புற வரிசையின் முதல்புள்ளிக்கு நூலை கொண்டுவந்து, மூன்றாவது புள்ளியில் ஊசியை செலுத்தவும் (படம் 4).

இப்போது உருண்டையாக பிங்க் கலரில் 'நான்குபுற தையல் (Four-Sided Stitch)' முழுமை அடைந்திருக்கும் (படம் 5).

▼ 'நான்குபுற' தையலின் கடைசி தையல்..




பின்புறம் திருப்பிப் பார்த்தால் 'பெருக்கல் குறி' மாதிரி தையல் அமைந்திருந்தால், சரியாகப் போட்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

இதேபோன்ற தையலை அடுத்த புள்ளியில் மறுபடி ஆரம்பிக்கவும்.

மேட்டி துணியின்

முழு நீளத்துக்கு பிங்க் கலர் நூலால் ஒரு வரிசை போட்டு முடிக்கவும் (படம் 7).

பிறகு அகலவாட்டிலும் அதேபோன்ற எம்ப்ராய்டரி செய்ய வேண்டியதுதான் (படம் 8).

மேட்டித் துணியின் நீள அகலத்துக்கு பார்டர் கட்டியது மாதிரி பிங்க் கலர் நூலால் ஒரு வரிசை




▲ நான்குபுற தையல் ஓவர்




▲ வரிசையாக தையல்



எம்ப்ராய்டரி முடிந்த பிறகு, உட்புறமாக அடுத்த வரிசை எம்ப்ராய்டரியை வெண்முத்துநிற நூலால் தொடங்கவும் (படம் 9).

பிறகு; மறுபடியும் ஒரு வரிசையை பிங்க் கலர் நூலால் போடவும் (படம் 10).

இரண்டு பிங்க் வரிசைக்கு நடுவே, வெண்ணிற தையலுடன் பார்டர் ஏரியா வேலை முடிந்தது.

இனி உட்புற எம்ப்ராய்டரிக்கு வருவோம். உட்புறம் மொத்தம் ஆறு பெட்டிகள் மாதிரியான எம்ப்ராய்டரி செய்ய வேண்டும்.

உட்புறம் முதலாவதாக உள்ள பிங்க் பார்டருக்கு அடுத்துள்ள புள்ளியிலிருந்து எண்ணத் தொடங்குங்கள்.

கீழிருந்து மேலாகவும், வலமிருந்து இடமாகவும் 28–வது புள்ளி சந்திக்கும் இடத்தில் பிங்க் கலர் நூலால் 'நான்குபுற தையலை'த் துவக்க வேண்டும் (படம் 11). மொத்தம் 16 'நான்குபுற தையல்களை' அகலவாட்டில் போட்டு முடித்த பிறகு, நீளவாக்கில் 11 தையல்கள் போட வேண்டும்.

அகலவாட்டில் போட்ட




▲ பக்கவாட்டிலும் தையல்

16–வது தையலை, நீளவாட்டின் முதல் தையலாக கணக்கில் கொள்ள வேண்டும்.

பிறகு பிங்க் சதுரத்தின் உட்புறம் நான்கு பக்கங்களிலும் மொத்தம் 6 வரிசைப் புள்ளிகளை விட்டுவிடவும்.




◀ பிங்க் நூல் தையல் முடிந்து, வெண்ணிற தையல்...

மூன்றாவது வரிசை மீண்டும் ▼ பிங்க் நூலில்




நடுவிலுள்ள பகுதியில் வெண்ணிற நூலால் அடைப்பாக எம்ப்ராய்டரி செய்ய வேண்டும் (படம் 12). நீளவாக்கில் 6 வரிசையும் அகலவாக்கில் 19 வரிசை தையல்களுமாக முதல் பெட்டி எம்ப்ராய்டரி முடிந்திருக்கும் (படம் 13).




◄ உட்புற பிங்க் பெட்டி ஆரம்பம்




உட்புறம் அடைப்பாக வெண்ணிற தையல் ►

ஒரு பெட்டி தையல் ஓவர் ▼




அடுத்த 28-வது புள்ளியில் மறுபடி அடுத்த பெட்டி எம்ப்ராய்டரியைத் துவங்க வேண்டியதுதான்.

ஒவ்வொரு பெட்டிக்கும் இடையிலும், பார்டருக்கும் பெட்டிக்கும் இடையிலும் ஒரே சீராக 27 புள்ளிகள் இடைவெளி விட்டு போடவேண்டும்.





**'பாம்பே-டையிங்' மேட்டி துணியிலான டேபிள் விரிப்பு ஒன்றுக்கு எம்ப்ராய்டரி செய்வோம். இதில் நாம் பயன்படுத்தப் போகும் புதுவகை தையல் 'டெய்சி ஸ்டிச்'.**







**தேவையானவை:**

பாம்பே-டையிங் மேட்டித் துணி - பிங்க் கலர்

அளவு - 14" × 14"

இதில் சுற்றிலும் 2" மடித்து தைத்துக் கொள்ளவும். அதனுள் 25 புள்ளிகள் நான்கு பக்கமும் விட்டுவிட்டு, உட்புற ஏரியாவில் எம்ப்ராய்டரி ஆரம்பிக்க வேண்டும்.

**நூல் நிறம்** *(மதுரா கோட்ஸ் 'ஆங்கர்')*

நம்பர் 0246 (அடர் பச்சை) - 3 ஸ்கெயின்

நம்பர் 0291 (கோல்டன் மஞ்சள்) - 2 ஸ்கெயின்

வெள்ளை நிற நூல் - 1 ஸ்கெயின்

இனி, 'டெய்சி ஸ்டிச்' போடுவது எப்படி என்று பார்ப்போம்.





நட்சத்திர தையல் ஆரம்பம்...



▲ சுற்றிலும் மஞ்சள் நூல் தையல்...



▼ மஞ்சள் முத்துகளாக 'டெய்சி ஸ்டிச்'



▲ சுற்றிலும் பச்சை நூல் தையல்

கரும்பச்சை நிற நூலால் முதல் 'நட்சத்திர தையல்' போடவும் (படம் 1).

நட்சத்திர தையலைச் சுற்றிலும் மஞ்சள் நூலால் படத்தில் உள்ளபடி (படம் 2) முத்துமுத்தாக தையல் போடவும். இதற்குத்தான் 'டெய்சி ஸ்டிச்' என்று பெயர்.

கரும்பச்சை நிற முனைகளில் மஞ்சள் முத்துகள் பதித்தது மாதிரி தையல் காட்சியளிக்கும் (படம் 3).

இனி மஞ்சள் தையலுக்கு மேலாக மறுபடி பச்சை நிற நூலால் தையல் போடவும் (படம் 4). தையல் முடிந்த இடத்துக்கு மேலுள்ள புள்ளியினுள் ஊசியைச் செலுத்தவும் (படம் 5).

இதே மாதிரி, சுற்றிலும்



அடுத்த புள்ளியில் கோக்கவும்.. ▶

கரும்பச்சை நூலால் தையல் போட்டு முடித்தால் 'டெய்சி ஸ்டிச்'சில் அமைந்த முதல் பூ தயார் (படம் 6).

அடுத்த ஆறாவது புள்ளியை மையமாக





▲ முதல் பூ தயார்..

வைத்து, மறுபடியும் அடுத்த பூவுக்கான நட்சத்திர தையலை ஆரம்பிக்கவும் (படம் 7).

கரும்பச்சை நிற நட்சத்திர தையலைச் சுற்றி மஞ்சள் முத்து மாதிரியான 'டெய்சி ஸ்டிச்' ஓவர் (படம் 8). அதைச் சுற்றிலும் கரும்பச்சை நிற நூலால் கோத்து முடித்து இரண்டாவது பூவும் தயார் (படம் 9).

முதல் வரிசையில் 14 பூக்களை போட்டு முடித்ததும், இரண்டாவது வரிசைக்குப் போக வேண்டும். இரண்டாவது வரிசையைப் பொறுத்தவரை, மஞ்சள் நூல் உபயோகித்து இரண்டு பூக்களில் 'டெய்சி ஸ்டிச்'



▲ அடுத்த பூ ஆரம்பம்



இரண்டாவது பூவில் மஞ்சள் நூல் 'டெய்சி ஸ்டிச்'..

▼ இரண்டு புறமும் இரண்டு வரிசை..





▲ இரண்டாவது பூ ஓவர்..

போட்டு முடிக்க வேண்டும். மூன்றாவது பூவுக்கான 'டெய்சி ஸ்டிச்'சை வெள்ளை நிற நூலில் போடவும் (படம் 10).

அதன்படி, உட்புற வரிசையில் முதல் இரண்டு பூக்கள் மஞ்சள்




▲ ஒரு கட்டம்.. நடுவில் ஒற்றை பூ..




▲ நடுப் பூவுக்கான டிசைன்...

நிறமாகவும், அடுத்து வரும் நான்கு பூக்கள் வெள்ளை நிறத்திலும் அமையும்.

இதே மாதிரி நான்கு புறமும், இரண்டு வரிசை டிசைன் போட்டு முடித்ததும், நடுவில் '+' குறி மாதிரியான டிசைனுக்கு வருவோம்.

பார்டர் வரிசையின் 7-வது மற்றும் 8-வது பூவுக்கு மேலாக இரண்டிரண்டாக மொத்தம் நான்கு வரிசை வெள்ளைப்பூக்கள் தையல் போடவும்.

இதே மாதிரி நான்குபுறமிருந்தும் டிசைன் போட்டு முடித்து, அவற்றை இணைக்கும் வகையில் நடுவில் அமையும் நான்கு பூக்களை மட்டும் மஞ்சள் நூலால் தையல் போடவும்.

இப்போது வெறுமையாக இருக்கும் நான்கு சதுரப் பகுதியினுள் நட்ட நடுவாக நான்கு பூக்களை தையல் போட்டு முடித்தால் எம்ப்ராய்டரி ஓவர் (படம் 11).

நடுவில் போடப்படும் இந்தப் பூவில் கூடுதல் அம்சம் ஒன்று உண்டு. முதலில் போட்ட வெள்ளைப் பூ டிசைன் மாதிரியே எம்ப்ராய்டரி செய்தபின், அதைச் சுற்றிலும் நான்கு பக்கமும் மஞ்சள் நூலால் டிசைன் செய்ய வேண்டும் (படம் 12).







**ப**ண்டிகை தினங்களில் மாவிலை தோரணம் மாதிரி எம்ப்ராய்டரி செய்த டேபிள் விரிப்பை அலங்காரமாக விரித்தால் அழகாக இருக்குமல்லவா..?!

வாருங்கள்.. களத்தில் இறங்குவோம்..

**க்**ரீம் கலர் பாம்பே-டையிங் மேட்டி துணியை அப்படியே முழுசாக வாங்கிக் கொள்ளுங்கள்.
36" X 36" அளவுக்கு இந்தத் துணி இருக்கும்.

சுற்றிலும் 3" அளவுக்கு மடித்துத் தைத்துவிட்டு, உட்புறமும் 3" வெறுமனே விட்டுவிட்டு, உட்புற ஏரியாவில் எம்ப்ராய்டரியை தொடங்க வேண்டும்.




▲ பச்சை பார்டர் ஆரம்பம்

**தேவையான நூல் நிறம் (மதுரா கோட்ஸ்–ஆங்கர்):**

நம்பர் 0245 (பச்சை) – 8 ஸ்கெயின்
நம்பர் 0335 (ஆரஞ்சு) – 6 ஸ்கெயின்
நம்பர் 0100 (வயலட்) – 3 ஸ்கெயின்



நம்பர் 0433 (நீலம்) – 3 ஸ்கெயின் பார்டரில் சிவப்பு பட்டன் பதித்தது மாதிரியான வட்ட அடைப்புத் தையலுக்கு மட்டும் 8 நூல் பயன்படுத்த வேண்டும். மீதியுள்ளவற்றுக்கு ஆறு நூல் உபயோகிக்கலாம்.

**இனி எம்ப்ராய்டரி..**

முதலில் பச்சை நூலால் நான்கு பக்கமும் இரு இணை வரிசைகளில் பார்டர் போட்டு முடிக்கவும் (படம்–1).

மூன்று புள்ளிக்கு ஒரு தையல் என்ற விகிதத்தில் 'பேக் ஸ்டிச்' தையலை பார்டரில் போடவும். அதன்படி ஒரு பக்கத்துக்கு 89 தையல் போட்டு விட்டு, 90–வது தையலை மட்டும் ஒரு புள்ளி குறைவாகப் (2 புள்ளிகளுக்கு நடுவே மட்டும்) போட்டு, கார்னர் திருப்பவும்..அதிலும் முதல் தையலை இரண்டு புள்ளிகளுக்கு இடையே மட்டும் போட்டு விட்டு, மீதியுள்ளவற்றை வழக்கம்போல் மூன்று புள்ளிக்கு ஒன்று என்ற கணக்கில் 'பேக் ஸ்டிச்' போடவும்.




ஓரத்தில் வயலட் பூ ▲

உட்புற பார்டரை 18–வது புள்ளியில் ஆரம்பிக்கவும். அதாவது, இணையான இரு பார்டருக்கும் நடுவே 17 வரிசை புள்ளி இடைவெளி இருக்க வேண்டும்.

பிறகு பார்டருக்கு நடுவே வயலட் நட்சத்திரம்,சிவப்பு பட்டன், சிவப்பு வளையம் ஆகிய டிசைன்களை ஆரம்பிக்கலாம்.

நான்குபுறமும் கார்னரில் வயலட் பூ மாதிரி நட்சத்திரத் தையல் போடவும் (படம் 2). எண்ணிக்கை கணக்குக்கு படத்தைப் பார்க்கவும். அதன்படி நான்கு கார்னரில் மட்டும் இரண்டு வயலட் பூக்கள் அருகருகே அமையும். (படம் 3). ஒருபக்க பார்டரில் 10 வயலட் பூக்கள், 4 சிவப்பு வளையம், 5 சிவப்பு அடைப்பு வட்டம் ஆகியவை அமையும் (படம் 4). சிவப்பு அடைப்பு டிசைன் போடும் விதத்தை பார்ப்போம்..




▲ கார்னரில் இரண்டு 'வயலட் பூக்கள்..'

▼ பார்டருக்கு நடுவே உட்புற டிசைன்







கௌசிங் ஆரம்பம் ▲




தையலுக்கு நடுவே ▲ கௌசிங்




அடுத்த தையல் ▲




மூன்றாவது தையல் ▲

துணியை சரிபாதியாக மடித்து, நட்டநடுப் பகுதியில் பார்டருக்குள்ளாக இந்தத் தையலைப் போடவேண்டும். ஆறு நூல் கொண்ட சிவப்பு நூலால் 7 புள்ளிகளுக்கு இடையே சாட்டின் தையல் போடவும் (படம் 5). அதன் நடுவே இரு 'கௌசிங்' தையல்கள் (படம் 6) போடவேண்டும். (அடையாளம் தெரிவதற்காக மஞ்சள் நூலால் போடப்பட்டுள்ளது. மற்றபடி 'கௌசிங்' தையலையும் சிவப்பு நூலால்தான் போட வேண்டும்).

அதேமாதிரி அடுத்த 9 புள்ளிகளுக்கு இடையே 'சாட்டின்' தையலும் 'கௌசிங்' தையலும் போடவும் (படம் 7). அடுத்து 11 புள்ளிகளுக்கு இடையே இதேமாதிரி தையல் போடவும் (படம் 8). அடுத்த நான்கு வரிசைகளையும் இதே அளவில் போட்டுவிட்டு (படம் 9), கடைசி இரு வரிசைகளை படிப்படியாக இரண்டு புள்ளிகள் குறைத்துப் போட்டு (படம் 10) முடிக்கவும்.

டிசைன் முடிந்தபின் பார்த்தால் அடைப்பாக சிவப்பு வட்ட டிசைன் அமைந்திருக்கும்.

சிவப்பு வளையம் போடுவதும் சுலபம்தான்.. ஐந்து புள்ளிகளுக்கு நடுவே 'சாட்டின்' தையல் போட்டு (படம் 12), குறுக்காக மூன்றாவது தையலில் 'பேக் ஸ்டிச்' போடவும் (படம் 13). இதேபோல வளையமாக (படம் 14) போட்டு முடித்தால் டிசைன் ஓவர் (படம் 15).

பார்டர் மொத்தமும் போட்டு முடித்தபின், உட்புற தோரண டிசைனுக்கு வருவோம்..

நட்ட நடுவாக உள்ள சிவப்பு அடைப்பு டிசைனுக்கு நேர்மேலாக நடுத்தோரணம் அமையும்.

குறுக்குவாட்டில் பச்சைநூலால் 'பேக் ஸ்டிச்' போட்டுவிட்டு, 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 16). இந்த தையலை படத்திலுள்ளது மாதிரி கவனமாக பார்த்துப் போடவும். படிப்படியாக எண்ணிக்கை அதிகரித்தபடி 5 'ஃப்ளை ஸ்டிச்'சுகள் போடவும் (படம்–17). இவற்றிலும் நடுநடுவே 'கௌசிங்'




நான்காவது ▲ தையல்




கௌசிங் தையல் ▲ ஓவர்..




வளையம் டிசைன் ஆரம்பம் ▲

செய்தால்,தையல் பதிந்து பார்க்க அழகாக இருக்கும். பக்கவாட்டு 'பேக் ஸ்டிச்'



'பேக் ஸ்டிச்' போடவும் ▲



டிசைன் முடியும்போது ▲



தோரணத்துக்கு ஃப்ளை ஸ்டிச் ▲



மொத்தம் 'ஃப்ளை ஸ்டிச்' ▲

தையலை நீட்டித்து, மேலும் இரு வரிசை 'ஃப்ளை ஸ்டிச்' போடவேண்டும். இரண்டாவது வரிசையில் மூன்று 'ஃப்ளை ஸ்டிச்'களும் மூன்றாவது வரிசையில் இரு ஃப்ளை ஸ்டிச்களும் அமையும்.

அதன்பிறகு, பக்கவாட்டு 'பேக் ஸ்டிச்'சில் ஐந்து வரிசைகளை விட்டுவிட்டு மேலும் 9 தையல்கள் போடவும்.

உச்சியில் வயலட் நூலால் நட்சத்திரத் தையலால் பூ போடவும் (படம் 18).

மறுபடி



இருவரிசை ஃப்ளை ஸ்டிச் ▲



மூன்று வரிசை ஃப்ளை ஸ்டிச் ▲

உச்சியில் வயலட் பூ ▼




மறுபாதி டிசைன் ஆரம்பம் ▼








முதல் டிசைனுக்கு இணையாக.. ▲



தோரணம் ரெடி ▲



நடுநடுவே கௌசிங் டிசைன் ▲

மேலிருந்து கீழ்நோக்கி 'பேக் ஸ்டிச்' போட்டுவிட்டு, படத்திலுள்ளது மாதிரி 5 வரிசை 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 19).

பின்னர் ஆரம்பத்தில் போட்டதற்கு இணையாக பக்கவாட்டிலும் 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 20).

நடுவில் வட்ட அடைப்பு 'கௌசிங்' தையல்கள் போடுவதற்கு தகுந்த அளவில் இடைவெளி விட்டுவிட்டு, தோரண டிசைனை முடிக்கவும். (படம்-21).

படத்தில் உள்ளது மாதிரி அந்தந்த இடங்களில் அந்தந்த கலர் நூலால் 'கௌசிங்' தையல், சிவப்பு வளையம் ஆகியவற்றை போட்டு முடிக்கவும்.

ஒரு பக்கத்துக்கு மூன்று தோரணங்கள் என்ற கணக்கில் மொத்தம் 12 தோரணங்கள் போடவும். அதன்மேலாக 13 புள்ளி இடைவெளிக்குப் பின் ஒரு சிவப்பு பூ போடவும்.

கார்னரில் இரு தோரணங்களின் உச்சியில் பொதுவாக ஒரு வயலட் பூவும், அதன்மேலாக ஒரு சிவப்பு பூவும் போடவேண்டும். இரு தோரணங்களுக்கும் இடையே பக்கவாட்டில் முக்கோணம் மாதிரி இரண்டு வயலட் பூவும் ஒரு சிவப்பு பூவும் அமையும்.

தோரணங்கள் அணிவகுப்பு ▼



**நா**ற்காலிகள் மீது போட அழகான எம்ப்ராய்டரி விரிப்பு ஒன்றை தயார் செய்வோம்.



**வெ**ளிர் பழுப்புநிற பாம்பே டையிங் மேட்டித் துணியை 32"X19" என்ற அளவுக்கு வாங்கிக் கொள்ளுங்கள். சுற்றிலும் 2" மடித்து, தைக்க இடம் விடவேண்டி இருக்கும். உட்புறமும் 2" அளவுக்கு விட்டுவிட்டு, அதனுள் எம்ப்ராய்டரியை துவக்க வேண்டும்.

இதில் நாம் பயன்படுத்தப் போகும் தையல்கள்- 'பேக் ஸ்டிச்' மற்றும் 'நேர் தையல்'. மொத்த எம்ப்ராய்டரியின் எண்ணிக்கை கணக்குக்கு, படங்களை கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.

**தேவையான நூல் நிறம் (மதுரா கோட்ஸ் ஆங்கர்):**

*எண் 0380 (காபி பொடி கலர்) – 4 ஸ்கெயின்*

*எண் 088 (வாடாமல்லி) – 3 ஸ்கெயின்*

*எண் 0230 (இளம்பச்சை) – 3 ஸ்கெயின்*






▲ 'பேக் ஸ்டிச்' முறையில் பார்டர் தையல்..



கார்னர் ஏரியா டிசைன்.. ▶




உச்சியில் பூ டிசைன்.. ▼




முதலில் காபிபொடி கலர் நூலால் பார்டர் தையலை 'பேக் ஸ்டிச்' முறையில் போடவும் *(படம்-1)*.

அதனுள் படத்தில் உள்ளது மாதிரி, கார்னர் ஏரியாவின் டிசைனை போடவும் *(படம்-2)*.

அவற்றின் நுனிகளில் இளம்பச்சை நூலால் 'நேர் தையல்' மூலமாக பூ டிசைன் செய்ய வேண்டும் *(படம்-3)*.

பச்சை இதழ்களுக்கு இடையே வாடாமல்லி நிற நூலால் 'நேர் தையல்' மூலமாகக் கொம்பு கொம்பாக தைக்கவும் *(படம்-4)*.

இதேபோல், காபிபொடி கலர் டிசைனின் மொத்த நுனிப்பகுதியிலும்



மேலே கொம்பு கொம்பாக நேர் தையல்.. ▶



மொத்த நுனியிலும் பூ டிசைன்.. ▲



◀ பார்டருக்கு இடையே டிசைன் நீட்டிப்பு..

இளம்பச்சை மற்றும் வாடாமல்லி நூலால் பூ போட்டு முடிக்கவும் (படம்-5).

பிறகு, மூன்றுபுறமும் பார்டருக்கு இடையே டிசைனை நீட்டிக்க வேண்டும் (படம்-6). இதில், நீளவாக்கில் அமைந்த இருபுற பார்டரில் போடவேண்டிய டிசைன், ஒரே திசையை நோக்கிச் செல்லும்படி இருக்க



வேண்டும்.

ஆனால், அகலவாட்டில் குறைந்த அளவில் அமைந்த மூன்றாவது பக்கத்தின் எம்ப்ராய்டரி வேறுமாதிரி இருக்கும். அதாவது, இந்த பார்டரில் வலமிருந்து இடமாக நான்கு பூக்களும் இடமிருந்து வலமாக நான்கு பூக்களுமாக எதிரும் புதிருமாக டிசைன் அமையும் (படம்-7).

இனி, பார்டருக்கு மேலுள்ள பூ டிசைனுக்கு வருவோம் (படம்-8). முதலில், படத்தில் உள்ளது மாதிரி அதே எண்ணிக்கையில் பச்சை நூலால் தைக்கவும் (படம்-9). அதைச் சுற்றிலும் வாடாமல்லி நூலால் 'நேர் தையல்' கோடுகள் தைக்கவும் (படம்-10).

அதைச் சுற்றி காபிபொடி நூலால் படத்தில் உள்ளது மாதிரி (படம்-11) டிசைன் செய்யவும். அவற்றின் நுனிகளில் பச்சை மற்றும் வாடாமல்லி நூலால் பூ டிசைன் போட்டுவிட்டு,



நடுப்பகுதியில் எதிரும் புதிருமாக டிசைன்.. ▲



பார்டருக்கு அருகில் டிசைன்.. ▲



முதலில் நடுப் பூ.. ▲



பூவைச் சுற்றிலும் நேர் தையல் கொம்புகள்.. ▲

நான்குபுறமும் பிரவுன் தையலின் வெளிப்புறம் சீப்புசீப்பாக எம்ப்ராய்டரி செய்தால் பூ ஓவர் (படம் 12).

இந்த டிசைன் முடிந்ததும் 7 புள்ளிகள் விட்டுவிட்டு, 8-வது புள்ளியில் ஒரேயொரு பூ இருக்குமாறு டிசைன் போட வேண்டும் (படம் 13). அந்த ஒற்றை பூ போடுவது எப்படியென்று பார்ப்போம்.

முதலில் அரைவட்ட பூ ஒன்றைப் பச்சை நூலால் போடவும் (படம் 14).

ஒரு புள்ளி விட்டுவிட்டு, மறுபாதியையும் அதே மாதிரி அரைவட்ட பூவாகப் போடவும். இரண்டு புள்ளிகளையும் நடுவில் இணைத்து, சுற்றிலும் வாடாமல்லி நூலால் கொம்பு கொம்பாக டிசைன் போடவும் (படம் 15).

இரண்டு பெரிய பூக்களுக்கு நடுவே இந்த ஒற்றை பூ இருக்கும் வகையில் எம்ப்ராய்டரி அமையும்.



பூவைச் சுற்றி படத்தில் உள்ளது மாதிரி.. ▲



முழு டிசைனும் ஓவர்.. ▲



முதலில் அரைவட்டம்.. ▲



மறுபாதியும் முடித்தால் ஓவர்.. ▲





**வெ**ள்ளை நிறத்தில் பாம்பே-டையிங் மேட்டித் துணியில் நாம் போடப் போவது 'டேபிள்-மேட்'டுக்கான எம்ப்ராய்டரி. இதில் 'ஷீஃப் ஸ்டிச்' என்கிற புதுவகை தையலை உபயோகப்படுத்துகிறோம். மேலும் ஏற்கெனவே நமக்கு பரிச்சயமான 'பேக்-ஸ்டிச்', 'நேர் தையல்', 'நட்சத்திர தையல்' ஆகியவையும் உண்டு.



**வெ**ள்ளைநிற பாம்பே-டையிங் மேட்டி துணியை முழுசாக (36"x36") வாங்கிக் கொள்ளுங்கள்.

தேவையான பிற பொருட்கள்..

**நூல் நிறம் (மதுரா கோட்ஸ் ஆங்கர்):**

நம்பர் 0316 (மஞ்சள்)-5 ஸ்கெயின்

நம்பர் 0879 (கரும் பச்சை)-5 ஸ்கெயின்

நம்பர் 0529 (ராமர் நீலம்)-6 ஸ்கெயின்

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் நான்கு


ஷீஃப் ஸ்டிச்

1



மூன்று ▲
நேர் தையல்

இழை கொண்ட நூலை உபயோகிக்க வேண்டும்.

துணியில் நான்குபுறமும் மடித்து தைக்க 3" இடம் விட்டு விட்டு, உட்புறமும் 1" இடைவெளி விட்டு எம்ப்ராய்டரியை தொடங்க வேண்டும்.

இனி 'ஷீஃப் ஸ்டிச்' போடும் விதத்தை பார்ப்போம். முதலில் ஏழு புள்ளிகளுக்கு நடுவே ஒரு தையல் போடவும். அடுத்தாற்போல் அதேமாதிரி மேலும் இரு தையல்கள் போடவும் (படம் 1).

அதே
புள்ளியில் கோத்தால்..
▼

3



2



நடுவாக
▲ ஊசியை
கொண்டுவந்து

இப்போது இரண்டாவது தையலுக்கும் மூன்றாவது தையலுக்கும் நடுவே - சென்டர் புள்ளியில் (4-வது புள்ளியில்) அடிவழியாக ஊசியை கொண்டுவரவும் (படம் 2).

அந்த ஊசிநூலை வலப்புறமாக மேல்நோக்கி கொண்டுவந்து (படம் 3) ஆரம்ப புள்ளியினுள்(4-வது புள்ளியில்) செலுத்தவும். இப்போது 'ஷீஃப் ஸ்டிச்' தயார் (படம் 4).

'பேக் ஸ்டிச்' முறையில் கரும்பச்சை நூலால் முதலில் துணியின் மூலைப்

'ஷீ.'.ப் ஸ்டிச்'
தயார்
▼

4





5



▲
பார்டர் டிசைன்..

பகுதியில் படத்திலிருப்பது மாதிரி தையல் போடவும் (படம் 5).

அதன் இருபுற நுனியில் நேர் தையல் மூலமாக ராமர் நீல கலர் நூலால் மொக்கு மாதிரி மூன்று தையல்கள் போடவும் (படம் 6).

அடுத்ததாக மஞ்சள் நூலால் 'ஷீஃப் ஸ்டிச்' போட வேண்டும். அதேமாதிரி மற்றொருபுறமும் 'ஷீஃப் ஸ்டிச்' போடவும்(படம் 7).

இனி 'ஷீஃப் ஸ்டிச்'சுக்கு அருகே முதலில் போட்டமாதிரி கரும்பச்சை மற்றும் ராமர்நீல நூலால் எம்ப்ராய்டரி செய்யவும்.

மேல்வரிசையிலும்
அப்படியே
▼

8



6



▲ கார்னர்
டிசைன் ஓவர்

7



▲ கார்னருக்கு அடுத்து
'ஷீ.'.ப்' ஸ்டிச்'

9



இதே போல்
▲ மாற்றி மாற்றி
டிசைனை செய்து



▲ நான்குபுறமும் பார்டர் ரெடி..



▲ அதே டிசைனை நட்டநடுவாக போடவும்

இப்படியே மாற்றி மாற்றி நான்குபுறமும் டிசைன் போட்டு எம்ப்ராய்டரியை முடிக்கவும் (படம் 8).

இதே டிசைனை துணியின் நட்டநடுவாக உட்புறமும் போடவேண்டும் (படம் 9). எண்ணிக்கை கணக்குக்கு படத்தை பார்த்துக் கொள்ளவும்.

உட்புற இந்த சதுர டிசைனை சுற்றி இருவித எம்ப்ராய்டரி செய்யவேண்டும்.வட்டப்பூ டிசைன், மற்றும் சதுரப் பூ டிசன் ஆகியவை போடவேண்டும்.

கரும்பச்சை நிறத்தில் வட்டப் பூ டிசைன் போடுவதை பார்ப்போம்..

படத்தில் இருப்பதுமாதிரி நான்கு 'ஷீஃப் ஸ்டிச்'களைபோடவும் (படம்-10).அதனுள் ராமர்நீல நூலால் நட்சத்திர தையல் போடவும் (படம் 11).

'ஷீஃப் ஸ்டிச்'சின் பக்கவாட்டில் கரும்பச்சை நூலால் படத்தில் இருப்பதுமாதிரி போடவும் (படம் 12). அதன் நடுவே ராமர்நீல நூலால் 'நேர் தையல்' போடவும் (படம் 13). இதேமாதிரி நான்குபுறமும் தைத்து முடித்தால் டிசைன் ஓவர் (படம் 14).

நடுச்சதுர டிசைனை சுற்றிலும் ஏழு புள்ளிகள் விட்டுவிட்டு இதேமாதிரி பூக்கள் மொத்தம் எட்டு போடவேண்டும்.

இந்த இரண்டு பூக்களுக்கு மத்தியில் அமையும்வகையில் அடுத்த வரிசையில் மஞ்சள் சதுரப் பூ டிசைன் போடவேண்டும். அதை போடும் விதத்தை பார்ப்போம்..

படத்தில் இருப்பதுமாதிரி 'பேக் ஸ்டிச்' முறையில் கரும்பச்சை சதுரம் போடவும் (படம் 15). அதனுள் ராமர்நீல நூலால் நட்சத்திர தையல் போடவும் (படம் 16).

வட்டப்பூ டிசைனுக்கு.. ▼




'ஷீ.:.ப் ஸ்டிச்'சுக்கு நடுவே நட்சத்திர தையல்.. ▼







▲ மேற்புற எம்ப்ராய்டரி




▲ ஒருபக்க எம்ப்ராய்டரி தயார்




▲ அதேபோல நான்குபுறமும் தைத்தால் வட்டப்பூ தயார்!

சதுர டிசைன் ஆரம்பம் ▼







▲ சதுரத்துக்கு நடுவே நட்சத்திர தையல்






◀ மேற்புறம் மேலும் ஒரு சதுரம்

பக்கவாட்டில் கொம்பு டிசைன் ▼




ஒரு வரிசை விட்டுவிட்டு, மேலும் ஒரு கரும்பச்சை சதுரம் போடவும் (படம் 17).

'பேக் ஸ்டிச்' முறையில் இரு கொம்புகளை ஒருபக்கம் போடவும் (படம் 18).

அந்த இரு கொம்புகளுக்கு நடுவே மூன்று 'ஷீஃப் ஸ்டிச்'கள் போடவும் (படம் 19).

நான்குபுறமும் இதேபோல போட்டு டிசைனை முடிக்கவும் (படம் 20).






▲ அதன் நடுவே மூன்று 'ஷீ.ப் ஸ்டிச்'




◀ நான்குபுறமும் டிசைன் செய்தால் சதுரப்பூ தயார்

**டைனிங் டேபிள் மேல் விரிக்கப்படும் ரன்னர் விரிப்புக்கான எம்ப்ராய்டரி.**

இதில் உபயோகிக்கப் போகும் தையல் வகைகள் 'ஃப்ளை ஸ்டிச்' மற்றும் 'பேக் ஸ்டிச்'.




க்ரீம் கலர் கரூர் மேட்டித் துணியை 36'' அகலம் மற்றும் 13'' நீளத்துக்கு வாங்கிக்கொள்ளுங்கள். சுற்றிலும் 2'' மடித்து தைக்க இடம் விட்டுவிட்டு எம்ப்ராய்டரியைத் துவங்கலாம்.

**தேவையானவை:**

**நூல் நிறம் (மதுரா கோட்ஸ் 'ஆங்கர்'):**

கறுப்பு நூல் - 6 ஸ்கெயின், நம்பர் 019.
(சிவப்பு) - 6 ஸ்கெயின், நம்பர் 0267.
(பச்சை) - 3 ஸ்கெயின்.




பார்டர் தையல் ஆரம்பம் ▲






முதல் 'ஃப்ளை ஸ்டிச்' ஆரம்பம்..




ஒரு 'ஃப்ளை ஸ்டிச்' ஓவர்

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் 6 இழை கொண்ட நூலை பயன்படுத்தவேண்டும். இனி தையலுக்குப் போவோம்.

முதலில் துணியின் நான்குபுறமும் பார்டர் தையலை பச்சை நூலால் 'பேக் ஸ்டிச்' முறையில் தைக்கவும் (படம் 1).




அடுத்து இரு ஃப்ளை ஸ்டிச்'கள்..

பிறகு கார்னர் ஏரியாவில் சிவப்பு நூலால் 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 2). பார்ப்பதற்கு சூலாயுதம் போல் இத்தையல் அமைந்திருக்கும் (படம் 3). அதை ஒட்டினாற்போலவே மற்றொரு ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 4).




கீழப்புறமும் 'ஃப்ளை ஸ்டிச்' துவக்கம்




இரு 'ஃப்ளை ஸ்டிச்'கள் இருபுறமும்..





கறுப்பு டைமண்ட் டிசைன் துவக்கம்..







கறுப்பு நூல் டிசைன் ஆரம்பம்...

மறுபடி கீழ்முனைப் பகுதியில் ஒரு 'ஃப்ளை ஸ்டிச்'சும் (படம் 5), அதையொட்டி மற்றொரு தையலும் போடவும் (படம் 6).

அடுத்ததாக படத்திலிருப்பது மாதிரி கறுப்பு நூலால் 'பேக் ஸ்டிச்' போடவும் (படம் 7). டைமண்ட் வடிவில் இந்த

கறுப்பு டைமண்ட் டிசைன்




அடுத்த செட் ஃப்ளை ஸ்டிச்'கள் சிவப்பு நூலில்




உட்புறம் மற்றொரு டைமண்ட்







இருபுறமும் கறுப்பு டைமண்ட் டிசைன்கள்..



▲ கீழ்ப்புறமும் அதே மாதிரி டிசைன்...



▲ சுற்றிலும் பார்டர் டிசைன் ஓவர்...



▲ உட்புற சின்ன டிசைன் துவக்கம்...



▲ கறுப்பு டைமண்ட்டை சுற்றிலும் '.:.ப்ளை ஸ்டிச்..'

கறுப்பு டிசைன் அமையும் (படம் 8).

ஒரு கறுப்பு டிசைன் போட்டு முடித்ததும் (படம் 9) அதனுள் உட்புறமாக மற்றொரு கறுப்பு டைமண்ட் போடவும் (படம் 10). அதேபோல் கீழ்ப்புறமும் ஒன்றினுள் ஒன்றாக கறுப்பு டைமண்ட் டிசைன் போடவும் (படம் 11).

அடுத்ததாக, மறுபடி சிவப்பு நூலால் இரு 'ஃப்ளை ஸ்டிச்'சுகள் போடவேண்டும் (படம் 12). கீழ்ப்புறமும் அதேபோல தைக்கவும் (படம் 13).

இப்படியே பார்டர் முழுக்க 'ஃப்ளை ஸ்டிச்'சும் 'பேக் ஸ்டிச்'சுமாக மாறிமாறி போட்டு முடிக்கவும் (படம்-14).

இனி உட்புற டிசைனுக்கு வருவோம்.

முதலில் கறுப்பு டைமண்ட் டிசைன் போட்டுவிட்டு, அதன் ஒருபுறம் இரு 'ஃப்ளை ஸ்டிச்'சுகள் போடவும் (படம் 15). அதேபோல நான்குபுறமும் டிசைன் போட்டு முடிக்கவும் (படம் 16).

அடுத்து பெரிய டிசைனுக்கு வருவோம்.

வழக்கம்போல, கறுப்பு டைமண்ட் போட்டுவிட்டு அதன் ஒவ்வொருபுறமும் 'ய' வடிவில் பச்சை நூலால் தையல் போடவும் (படம் 17). நான்கு புறமும்
இம்மாதிரி தைத்தபின், படத்தில் இருப்பது மாதிரி டிசைன் அமைந்திருக்கும் (படம் 18).



◀ அடுத்த டிசைன் ஆரம்பம்...



▶ கறுப்பு டைமண்ட்டை சுற்றி பச்சை நூல் தையல்...



▲ பச்சை நூலிடையே '.:.ப்ளை ஸ்டிச்..'



▲ மற்றொரு '.:.ப்ளை ஸ்டிச்'



▲ ஒரு பக்கத்துக்கு மூன்று '.:.ப்ளை ஸ்டிச்'



▶ மூன்றுக்கு மேலாக இரண்டு '.:.ப்ளை ஸ்டிச்..'



▶ உச்சியில் ஒற்றை '.:.ப்ளை ஸ்டிச்..'




▲ இதேபோல நான்கு புறமும் டிசைன்...




▲ அடுத்து கறுப்பு நூல் '∴ப்ளை ஸ்டிச்..'

இரு பச்சை நூலுக்கிடையே சிவப்பு நூலால் ஒரு '◦°ப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 19). அடுத்ததாக மற்றொரு '◦°ப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 20). மறுபுறமும் போடவும் (படம் 21).

இந்த மூன்று '◦°ப்ளை ஸ்டிச்'களுக்கு மேலாக இரு '◦°ப்ளை ஸ்டிச்'கள் போடவும் (படம் 22). அதன்மேல் உச்சியில் ஒற்றையாக ஒரு '◦°ப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 23). இதேபோல நான்குபுறமும் எம்ப்ராய்டரி செய்யவும் (படம் 24).

அடுத்ததாக கறுப்பு நூலால் '◦°ப்ளை ஸ்டிச்' துவங்க வேண்டும் (படம் 25). மொத்தம் மூன்று '◦°ப்ளை ஸ்டிச்'கள் போடவும் (படம் 26).

இதேமாதிரி நான்குபுறமும் கறுப்பு




▲ ஒரு பக்கத்துக்கு மொத்தமும் மூன்று கறுப்பு நூல் தையல்...

நூலால் தையல் போட்டு முடித்தால் பெரிய டிசைன் எம்ப்ராய்டரி ஓவர் (படம் 27).




▲ நான்கு புறமும் தைத்தால் எம்ப்ராய்டரி ஓவர்







டெலிபோன் டேபிள் மீது போர்த்துவதற்கு ஏற்ற அழகான 'மேட்' ஒன்றை தயார் செய்வோம்... வாருங்கள்!

இதில் நாம் பயன்படுத்தப் போவது முழுக்க முழுக்க '◦°ப்ளை ஸ்டிச்' மட்டுமே!




▲ ஒரு வரிசை '∴ப்ளை ஸ்டிச்'




▲ இரு வரிசை '∴ப்ளை ஸ்டிச்'

வெள்ளை நிற 'பாம்பே-டையிங்' மேட்டித் துணியை 20" × 20" அளவுக்கு வாங்கிக் கொள்ளுங்கள். சுற்றிலும் மடித்துத் தைக்க 2" இடம் விட்டுவிட்டால், எம்ப்ராய்டரிக்கு துணி தயார்.

**தேவையானவை:**

**நூல்நிறம் (மதுரா கோட்ஸ் 'ஆங்கர்')** நம்பர் 047



▲ மேற்புறம் இருவரிசை



▲ நீல சூரியன் தோற்றம்

(மெரூன்) – 4 ஸ்கெயின்
நம்பர் 0335 (ஆரஞ்சு) – 5 ஸ்கெயின்
நம்பர் 0132 (அடர் நீலம்) – 2 ஸ்கெயின்
நம்பர் 0433 (வெளிர்நீலம்) – 1 ஸ்கெயின்
நம்பர். 0262 (இளம் பச்சை) – 1 ஸ்கெயின்

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கு 4 இழை கொண்ட நூல் உபயோகிக்க வேண்டும்.

இதில் பக்கவாட்டு பார்டர்கள் இரண்டும் ஒரு டிசைனிலும், மற்ற இரு பக்கத்திலும் வேறு மாதிரி டிசைனிலும் எம்ப்ராய்டரி அமையும். முதலில் பக்கவாட்டு டிசைனை பார்ப்போம்.



▲ நான்குபுறமும் தலா ஒரு 'ஃப்ளை ஸ்டிச்'

▼ 'W' டிசைன்




▼ பக்கவாட்டில்






▲ மேற்புறம் இருவரிசை 'ஃப்ளை ஸ்டிச்'



▲ பூ மாதிரி 'ஃப்ளை ஸ்டிச்'

மெரூன் கலர் நூலால் முதலில் ஒரு வரிசை 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் அதையொட்டி ஆரஞ்சு நூலால் அடுத்த வரிசை 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 2).

அதன் மேற்புறம் இருவரிசைகளில் படத்திலுள்ளது மாதிரி (படம் 3) 'ஃப்ளை ஸ்டிச்' போடவும். அதன் நடுவே 'W' மாதிரி வெளிர்நீல நூலால் டிசைன் செய்யவும் (படம் 4).

சுற்றிலும் அதேபோல் போட்டு, நீல சூரியன் போல் தோற்றம் உருவாக்கவும் (படம் 5). அதன் நான்கு புறமும் அடர்நீல நூலால் தலா ஒரு 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 6).



▲ உட்புற டிசைன்

இணையாக இருவரிசை ▼




பக்கத்துக்கு ஏழு பூக்கள் வீதம் நான்கு பக்கமும் ▼








▲ நான்காவது பூவுக்கு மேலாக ஐந்து 'ஃப்ளை ஸ்டிச்'

பிறகு, பக்கவாட்டிலும் படத்திலிருப்பது போல (படம் 7) வெளிர்நீல மற்றும் அடர் நீல நூலால் டிசைன் போடவும்.

மேற்புறம் மெரூன் கலர் மற்றும் ஆரஞ்சு கலர் நூலால் இருவரிசை 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 8). இனி இதேபோல் பார்டர் முழுக்க டிசைனை நீட்டிக்கொண்டு போக வேண்டியதுதான். உட்புற டிசைனை படத்தில் உள்ளது போல் (படம் 9) போடவும். இனி மற்றொருபுற டிசைனுக்கு வருவோம்.

நெருக்கமாக ஐந்து புள்ளிகளில் இரு வரிசை 'ஃப்ளை ஸ்டிச்' போட வேண்டும். ஆரஞ்சு கலர் மற்றும் மெரூன் கலர் நூலால் ஒன்றுடன் ஒன்று இணைந்த மாதிரி இணையாக இரு வரிசை தையல் போடவும் (படம் 10).

இப்படி நான்கு புறமும் பார்டர் போட்டு முடித்த பிறகு, உட்புறத்தில் எம்ப்ராய்டரியை ஆரம்பிக்கலாம்.

பார்டரிலிருந்து 18 புள்ளிகள் தள்ளி, 19-வது புள்ளியிலிருந்து உட்புறத்தில் எம்ப்ராய்டரியை ஆரம்பிக்கலாம்.

படத்திலுள்ளது மாதிரி (படம் 11) நான்கு சிவப்பு 'ஃப்ளை ஸ்டிச்'களை பூ மாதிரி போட்டுவிட்டு, இரண்டு பக்கமும் பச்சை நூலால் டிசைனை நீட்டிக்க வேண்டும்.

ஒரு பக்கத்துக்கு 7 சிவப்பு பூக்கள் வீதம் நான்கு பக்கமும் இந்த டிசைனை போட்டு




▲ பெரிய 'ஃப்ளை ஸ்டிச்'




▲ மற்றொரு 'ஃப்ளை ஸ்டிச்'

மற்றொரு பூ ▼







▲ ஆரஞ்சு வலை




▲ இரு 'ஃப்ளை ஸ்டிச்' ஆரம்பம்




▲ பக்கவாட்டில் தையல்

இணைக்க மற்றொரு தையல் ▼




முடிக்கவும் (படம் 12).

அதனுள் உட்புறமாக அமைந்த ஆரஞ்சு வலை டிசைன் போடுவதைப் பார்ப்போம்.

ஒவ்வொரு பக்கமும் நான்காவது சிவப்பு பூவுக்கு மேலாக பச்சை நூலால் ஐந்து 'ஃப்ளை ஸ்டிச்'கள் போடவும் (படம் 13).

அதன் மேல் ஆரஞ்சு நூலால் படத்திலுள்ள எண்ணிக்கைப்படி பெரிய 'ஃப்ளை ஸ்டிச்' போடவும் (படம் 14). அதன் எதிர்ப்புறமாக மற்றொரு 'ஃப்ளை ஸ்டிச்' போட்டால் டிசைன் இப்படி அமையும் (படம் 15).

அடுத்ததாக மற்றொரு பூவையும் அதேபோல்




▲ உட்புறப் பூ

போடவும் (படம் 16). இதேமாதிரி சுற்றிலும் போட்டு முடித்தால், ஒரு ஆரஞ்சு வலை தயார் (படம் 17). இப்படி நான்கு பக்கமும் டிசைன் போடவும்.

இனி, நட்ட நடுவாக ஒரேயொரு பூ போட வேண்டியதுதான் பாக்கி!

முதலில் பச்சை நூலால் இரு 'ஃப்ளை ஸ்டிச்'கள் போடவும் (படம் 18). பக்கவாட்டில் ஒரு ஆரஞ்சு தையல் போடவும் (படம் 19). அதை இணைக்கும் வகையில் மேற்புறம் மற்றொரு தையல் போடவும் (படம் 20).

இப்படி நான்கு பக்கமும் டிசைன் செய்தால் உட்புற பூ ரெடி (படம் 21).



**கா**பி டேபிள் அல்லது டீபாய் மேல் விரிக்கும் துணிக்கு எம்ப்ராய்டரி செய்வோம். இதில் நாம் பயன்படுத்தப் போகும் புதுவகை ஸ்டிச் 'கேபிள் ஸ்டிச்'.

வெளிர் பிஸ்கட் கலர் பாம்பே-டையிங் துணியை 25 இன்ச் அகலம் மற்றும் 16 இன்ச் நீளத்துக்கு வாங்கிக் கொள்ளுங்கள். சுற்றிலும் மடித்துத் தைக்கவும். உட்புற இடைவெளிக்கும் சேர்த்து 4 இன்ச் அளவுக்கு விட்டு விட்டு எம்ப்ராய்டரியை ஆரம்பிக்க வேண்டும்.

**தேவையான நூல் நிறம் – மதுரா கோட்ஸ்:**

நம்பர் 033 (பிங்க்) நிட்டிங் காட்டன் – ஒரு உருண்டை.

முதலில் 'கேபிள் ஸ்டிச்' போடும் விதத்தைப் பார்ப்போம்.




முதல் இருவரிசை தையல் போடுங்கள் (படம் 1). மேற்புறம் மேலும் இரு வரிசை தையல் போட வேண்டும் (படம் 2).

இப்படி வரிசையாக தைத்தால் தையல்கள் ஒன்றுக்கொன்று அடைப்பாக அமைந்து, கற்கள் பதித்தது மாதிரி தோற்றமளிக்கும். இதுவே 'கேபிள் ஸ்டிச்'.

பார்டரில் ஒருபக்கம் நான்கு வரிசை 'கேபிள் ஸ்டிச்' போட்டு முடித்தபின், மறுபக்கம் தொடங்க வேண்டும் (படம் 3).

இப்படி பார்டர் முழுக்க போட்டு முடித்ததும், உட்புற டிசைனைத் தொடங்க வேண்டும்.






▲ முதல் இருவரிசை தையல்




அடுத்த இருவரிசை தையல் ◀




▲ பார்டரில் மறுபக்க தையல்




அடைப்பு டிசைன் ஆரம்பம் ◀

பட்டையாக பிங்க் கற்கள் மாதிரி காட்சியளிக்கும் எம்ப்ராய்டரி டிசைனை முதலில் போடுவோம்.

வழக்கம்போல் முதல் இரு வரிசை தையல் போடவும் (படம் 4). அடுத்த இரு வரிசைக் கான தையல் ஆரம்பம்




▲ அடைப்பு டிசைனின் அடுத்த ஸ்டெப்

(படம் 5). மேலும் கீழுமாக இந்த இரு வரிசை தையலை போட வேண்டும் (படம் 6). நான்கு வரிசைகளில் ஒரு சுற்று 'கேபிள் ஸ்டிச்' ரெடி (படம்-7). இம்மாதிரி அடைப்பாக




▲ மேற்புற இருவரிசை தையல்




▲ அடைப்பு டிசைன் பாதி ஓவர்

மொத்தம் 14 வரிசை 'கேபிள் ஸ்டிச்' போட்டால் ஒரு அடைப்பு டிசைன் ஓவர் (படம் 8).

இப்படி ஒரு பக்கத்துக்கு மூன்று என்ற கணக்கில் மொத்தம் 12 அடைப்பு டிசைன்களை டைமண்ட் வடிவில் அமையுமாறு போட வேண்டும். இதன் நடுவே செடி டிசைன் போடலாம்.

படத்தில் உள்ளது மாதிரி (படம்-9) அதே கணக்குக்கு V ஷேப்பில் 'கேபிள் ஸ்டிச்' போடவும். நடுவில் தண்டு மாதிரி ஐந்து 'பேக் ஸ்டிச்' போட்டுவிட்டு பக்கவாட்டில் கிளை டிசைன் தொடங்க வேண்டும் (படம்-10).

மறுபக்கமும் கிளை டிசைனை போடத் தொடங்கவும் (படம்-11).

பிறகு தண்டு போல நடுவாக 4 'பேக் ஸ்டிச்'கள் போடவும் (படம் 12). அதன் நுனியில் இரு பக்கமும் இரு வரிசை 'கேபிள் ஸ்டிச்' போடவும்.

அதன் நுனியில் மூன்று 'பேக் ஸ்டிச்'சும், பக்கவாட்டில் இரு புறமும் இரண்டு

▼ அடைப்பு டிசைன் ஓவர்




'V' ஷேப் செடி டிசைன் துவக்கம் ▼







▲ நடுவாக தண்டு போல 'பேக் ஸ்டிச்'




பக்கவாட்டு கிளை டிசைன் ◀

இரு பக்க கிளை டிசைன் ▼







▲ செடி டிசைன் ஓவர்

தையல்களும் போட்டு முடித்தால் செடி டிசைன் ஓவர் (படம் 13).

இம்மாதிரி அடுத்தடுத்து மேலும் இரண்டு டைமண்ட் டிசைனும் அதன் நடுவே செடி டிசைனும் போட்டு முடித்தால் எம்ப்ராய்டரி ஓவர்.

டைமண்டுக்கு நடுவே செடி டிசைன் ▼





**'ஷெவ்ரான் ஸ்டிச்' என்கிற புதுவகை தையல் உபயோகித்து டேபிள்-ரன்னர் துணிக்கு எம்ப்ராய்டரி செய்வோம்...**







க்ரீம் கலர் கரூர் மேட்டி துணியை 15'' x 36'' அளவுக்கு வாங்கிக் கொள்ளுங்கள். நான்கு புறமும் மடித்து தைக்க 2'' அளவும், உட்புற ஏரியாவுக்கு 2'' அளவும் விட்டு விட்டு எம்ப்ராய்டரியைத் தொடங்கலாம்.

**தேவையானவை:**

**நூல் நிறம் (மதுரா கோட்ஸ் 'ஆங்கர்'):**

*நம்பர் 0897 (மெரூன்) – 6 ஸ்கெயின்*
*நம்பர் 0530 (அடர் ராமர் கலர்) – 2 ஸ்கெயின்*
*நம்பர் 0529 (வெளிர் ராமர் கலர்) – 6 ஸ்கெயின்*

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் 6 இழை கொண்ட நூலை உபயோகிக்க வேண்டும்.

முதலில் பார்டர் டிசைனை போட்டு முடிப்போம்..

மெரூன் கலர் நூலால் இருபக்கமும் 'ஷெவ்ரான் ஸ்டிச்' போடவும் (படம் - 1). அடுத்த வரிசையை வெளிர் ராமர் நிற நூலால் தைக்கவும் (படம் - 2). மூன்றாவது வரிசையை மறுபடி மெரூன் நூலால் தைக்கவும் (படம் - 3).

கார்னர் பகுதியை திருப்பிப் போடும்போது கவனிக்க வேண்டிய எண்ணிக்கை கணக்குக்கு படத்தை நன்கு பார்க்கவும்.

இப்படி நான்குபுறமும் மூன்றுவரிசை






▲ மெரூன் நூலால் ஒரு வரிசை 'ஷெவ்ரான் ஸ்டிச்'




▲ அடுத்த வரிசை வெளிர் ராமர் கலர் நூலால்..

'ஷெவ்ரான் ஸ்டிச்' பார்டர் போட்டு முடித்தபின், உட்புற டிசைனுக்கு வரலாம்.

முதலில் வெளிர் ராமர் கலர் நூலால், எதிரும் புதிரும் இருப்பதுபோல இருவரிசை 'ஷெவ்ரான் ஸ்டிச்' போட வேண்டும். அதாவது முதல்வரிசை (படம்-4) போட்டு முடித்ததும் அடுத்த வரிசையை மேல்நோக்கி இருக்குமாறு போடவும் (படம்-5).

பின்னர் கீழ்ப்புறமும் (படம்-6), மேற்புறமும் தலா ஒரு வரிசை மெரூன் நூலால் 'ஷெவ்ரான் ஸ்டிச்' போடவும்.




▲ மறுபடி மெரூன் தையல்




▲ உட்புற டிசைனின் முதல் வரிசை..




▲ அதை பார்த்தவாறு அடுத்த வரிசை..




▲ மேற்புறம், கீழ்ப்புறம் ஒரு வரிசை மெரூன் தையல்!




▲ மெரூன் டைமண்ட் டிசைன் ஆரம்பம்..




▲ அடுத்த வரிசை இரு 'ஸ்டிச்'கள்..




▲ அடுத்ததாக மூன்று 'ஷெவ்ரான் ஸ்டிச்'கள்..




▲ 'ப' வடிவில் நான்கு தையல்கள்..



இனி, இடையிடையே உள்ள மெரூன் டைமண்ட் டிசைன் போடுவது எப்படி என்று பார்க்கலாம்..

மெரூன் தையலில் நான்கு 'ஷெவ்ரான்




▲ மேற்புறம் திருப்பி, மூன்று தையல்கள்..

▼ படிப்படியாக குறைத்து, டைமண்ட் வடிவில்..




▼ உச்சியில் ஒரு 'ஷெவ்ரான் ஸ்டிச்'.





▲ பக்கவாட்டு டிசைன்

ஸ்டிச்'சுகளை விட்டு விட்டு, அடுத்தபடியாக உள்ள இரு தையல்களை இணைத்து கீழ்ப்புறம் ஒரு 'ஷெவ்ரான் ஸ்டிச்' போட்டு, மேலும் ஒரு தையலை நீட்டிக்கவும் (படம்-7).

அதற்கடுத்த வரிசையில் ஒரு 'ஷெவ்ரான் ஸ்டிச்'சும் (படம்-8) அதற்கடுத்த வரிசையில் மூன்று 'ஸ்டிச்'களும் (படம்-9) போட்டுவிட்டு, 'ப' வடிவில் நான்கு தையல்கள் போடவும். (படம்-10).

பிறகு மேற்புறம் திருப்பி மூன்று 'ஷெவ்ரான் ஸ்டிச்'கள் போடவும் (படம்-11). பின்னர் படிப்படியாக இரண்டு, ஒன்று என்று தையலைக் குறைத்து டைமண்ட் வடிவில் எம்ப் ராய்டரி செய்யவும் (படம்-12). உச்சியில் கடைசியாக, திருப்பிய மாதிரி ஒரு 'ஷெவ்ரான் ஸ்டிச்' போடவும் (படம்-13).

பின்னர் பக்கவாட்டில் அடர்ராமர் கலர் நூலால் படத்திலிருப்பது மாதிரி (படம்-14) எம்ப்ராய்டரி செய்யவும்.

இதே மாதிரி மேற்புறமும் மெரூன் டைமண்ட் டிசைனை வரிசையாகப் போட்டு முடித்தால் எம்ப்ராய்டரி ஓவர் (படம்-15).

மொத்தமாக எம்ப்ராய்டரியை முடித்த பிறகு பார்த்தால் பார்டர் டிசைனும் உட்புற டிசைனுமாக (படம்-16) கண்ணைப் பறிக்கிற அழகுடன் டேபிள்-ரன்னர் துணி மிளிரும்.



▲மேற்புறமும், கீழ்ப்புறமும் டைமண்ட் டிசைன்



▲ பார்டரும், உட்புற டிசைனுமாக எம்ப்ராய்டரி ஓவர்!





## குழந்தைகளுக்கான 'ஜீன்ஸ் டாப்ஸி'ல் அழகிய எம்ப்ராய்டரி பற்றி சொல்கிறேன்.

ஆறு வயது பெண் குழந்தைக்கு பொருத்தமான 'ஜீன்ஸ் டாப்ஸு'க்கு தேவையான பொருள்கள்:

வெள்ளை நிற மேட்டி துணி - 3/4 மீட்டர்.

**நூல் நிறம் (மதுரா கோட்ஸ் ஆங்கர்):**

நம்பர் 1004 (பிரவுன்) - 3 ஸ்கெயின்

நம்பர் 0239 (பச்சை) - 4 ஸ்கெயின்

நம்பர் 028 (பிங்க்) - 4 ஸ்கெயின்

**பயன்படுத்தும் ஸ்டிச்சுகள்:**

பிரவுன் - ரன்னிங் ஸ்டிச்

பச்சை - 1. சாட்டின் குறுக்கு தையல்
2. நேர் தையல்

பிங்க் - டெய்ஸி தையல்

**செய்முறை:** வெள்ளை நிற மேட்டி துணியில் கழுத்தை வரைந்து கொண்டு, கழுத்தின் நடுவிலிருந்து இந்த டிசைனை தேவையான நீளத்துக்கு போட்டுக்கொள்ளவும்.

பிரவுன் கலர் நூலால் (4 இழைகள்) நீளவாக்கில் ரன்னிங் ஸ்டிச் போட்டுக் கொள்ளவும். அடுத்த ஸ்டிச் நான்காவது ஓட்டையில் ஆரம்பிக்க வேண்டும் (படம்-1). 11 வரிசைக்கும் 33 ஓட்டைகள் வரும்.

பச்சை கலர் நூல் கொண்டு (6 இழைகள்) 5வது வரிசையில் (படம்-2)




'பிரவுன் ஸ்டிச்'சுக்கு நடுவிலிருந்து குறுக்கு வாட்டில் 7 ஸ்டிச்சுகள் போட்டுக் கொள்ளவும்.




'7' குறுக்குத் தையல்கள் முடித்தவுடன் உள்ள படம் (படம்-3).




படத்தில் உள்ளதுபோல் பச்சை கலர் முதல் குறுக்குத் தையலின் ஓட்டையில் தொடங்கி, மேலே ஐந்தாவது ஓட்டையில் முடிக்கவேண்டும் (படம்-4).




இரண்டாவது குறுக்குத் தையல் (படம்-5).

மூன்றாவது குறுக்குத் தையல் (படம்-6).

இதே போல் எதிர்பக்கமும் நிறைவு




செய்ய வேண்டும்.

படத்தில் உள்ளது போல குறுக்குத் தையல் முடிவு பெறும் (படம்-7).

படத்தை உற்று கவனியுங்கள் (படம்-8). அதில் உள்ள கணக்கின்படி பிங்க் கலர் நூலால் (6 இழைகள்), முதல் டெய்ஸி ஸ்டிச்சை போட்டுக் கொள்ளவும்.

படத்தில் உள்ளது போல (படம்-9) டெய்ஸி ஸ்டிச்சுகளை முடித்துக்கொள்ளவும்.

மறுபக்கத்துக்கும் தையல் போட்டு முடிக்கவும் (படம்-10).




இப்போது அழகிய டிசைன் ரெடி. இதுபோல் வரிசையாக தேவையான நீளத்துக்கு போட்டுக் கொள்ளவும். ஒரு வரிசை டிசைனில் நடு பிங்க் 'டெய்ஸி




ஸ்டிச்'லிருந்து அடுத்த வரிசை டெய்ஸிக்கு நடுவில் 26 ஓட்டைகள் விட வேண்டும்.

அடுத்து, குழந்தைக்கான 'பிராக்'கில் அழகிய டிசைன் போடுவது பற்றி பார்க்கலாம்.











இங்கே கொடுக்கப்பட்டுள்ளது அஸிஸி (Assisi) எம்ப்ராய்டரி – இதில், டிசைனின் வெளிபுறத்தை கிராஸ் (Cross) ஸ்டிச்சால் நிரப்ப வேண்டும். டிசைனின் உட்புறத்தை வெற்றிடமாக விட வேண்டும். வெற்றிடத்தில்தான் உருவம் தெரியும்.

14-15-ம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் அஸிஸி வகை எம்ப்ராய்டரி தீவிரமாக பரவியது. அரண்மனை மற்றும் சர்ச்சுகளில் இந்த வகை எம்ப்ராய்டரியை அலங்காரத்துக்காக அதிகமாக பயன்படுத்தினர். ஆகையால் இது அஸிஸி எம்ப்ராய்டரி என்றும் எக்லீஸ்டியஸ்டிகல் (Ecleciastical) எம்ப்ராய்டரி என்றும் ஐரோப்பா முழுவதும் பிரபலமானது.

**இந்த எம்ப்ராய்டரி போட தேவையானவை:**

*1. நீலநிற பாம்பே டையிங் மேட்டிதுணி - ஒன்றரை மீட்டர்.*

*2. மதுரா கோட்ஸ் இன்டிகோ நீலநிற நூல், நம்பர் 0127 – 3 ஸ்கெயின்.*

**உபயோகப்படுத்தும் ஸ்டிச்சுகள்:**

பேக் ஸ்டிச் - அவுட்லைனுக்கு.

கிராஸ் ஸ்டிச் - ஃபில்லிங்குக்கு.

1



2



3







கொடுக்கப்பட்டுள்ள கிராஃப்பை நன்கு கவனித்து, பின்பு எம்ப்ராய்டரி போட தொடங்குங்கள். கோடுகளை பேக் ஸ்டிச்சிலும், புள்ளிகளை கிராஸ் ஸ்டிச்சிலும் போட வேண்டும்.

*படம்-1:* நீலநிற நூலில் 2 இழைகள் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு ஸ்டிச்சுக்கு மூன்று ஓட்டை, இரண்டு ஸ்டிச்சுக்கு 5 ஓட்டை என்று கணக்கெடுத்துக் கொள்ளவேண்டும். மூன்றாவது ஓட்டை ஒவ்வொரு ஸ்டிச்சிலும் பொதுவாக இருப்பதால் இந்த கணக்கில் வருகிறது.

*படம்-2:* இதுபோல் இரண்டாவது ஸ்டிச்.

கிராஃப் கணக்கைப் பார்த்து படம்-1,2-ல் உள்ளது போல் பேக் ஸ்டிச்சை வரிசையாக போட்டுக் கொள்ளவும்.

*படம்-3:* முதல் கிராஸ் ஸ்டிச்

*படம்-4:* கிராஸ் ஸ்டிச்சை 'X' போல் முடித்துக் கொள்ளவேண்டும்.

படம்-5-ல் உள்ளது போல் கிராஸ் ஸ்டிச்சுகளை கிராஃபின் கணக்குப்படி போட்டுக் கொள்ளவும்.

**குறிப்பு:** கிராஸ் ஸ்டிச்சுகளை மட்டும் படம்-1-ல் உள்ளது போல் முதல் தையலையும், படம்-2-ல் உள்ளது போல் இரண்டாவது







தையலையும் போட்டால் உருவ அமைப்பு நன்றாக இருக்கும். இல்லையேல், கரடுமுரடாக இருக்கும். மீண்டும் கிராஃப்பை கவனமாக பார்த்து முழு டிசைனையும் போட்டு முடியுங்கள்.



**துணி:** பாம்பே டையிங் மேட்டி பிங்க் கலர் – 30 சென்டி மீட்டர்.

**தேவையான நூல்:** மதுரா கோட்ஸ் ஆங்கர் நூல்.

இரண்டு கரடிக்கும் உடல் பகுதிக்கு:

நம்பர்: 0365 கோல்டன் ப்ரவுன் – 1 ஸ்கெய்ன்.

நம்பர்: 035 பிங்க் - 1 ஸ்கெய்ன்

நம்பர்: 047 சிவப்பு - 1 ஸ்கெய்ன்

நம்பர்: 0433 லைட் கலர் நீலம் - 1 ஸ்கெய்ன்

நம்பர்: 0155 டார்க் கலர் நீலம் - 1 ஸ்கெய்ன்

**ஸ்கிப்பிங்கயிறு:**

**நம்பர்:** 0106 வயலட் - 1 ஸ்கெய்ன்

**கண் மற்றும் வெளிப்புற 'அவுட் லைனு'க்கு:** கருப்பு - 1 ஸ்கெய்ன்

**வாய் பகுதிக்கு:** வெள்ளை - 1 ஸ்கெய்ன்

**உபயோகப்படுத்தும் தையல்:**

**உடம்பு பகுதி முழுவதும் –** கிராஸ் ஸ்டிச் (Cross) - 3 இழைகள்

**ஸ்கிப்பிங்கயிறு மற்றும் கரை** (Out Line) - பேக் ஸ்டிச் (Back) - 3 இழைகள்.

படம் 1-ல் உள்ளது போல் நூலில் 3 இழைகள் எடுத்து கீழ் இரண்டு மேல் இரண்டுமாக நாலு ஓட்டைகள் ஒரு கிராஸ் வீதம் போடவேண்டும். இதுபோல் உடல் பகுதி மொத்தத்தையும் கிராஸ் ஸ்டிச்சால் நிரப்ப வேண்டும்.




▲ கரடி பொம்மைகள் ரெடி





**ஜொ**ள்ளு வடியும் குழந்தைகளின் கழுத்தில் அணிவிக்கும் கழுத்தாடையான 'பிப்' (ஜொள்ளுபட்டை)ல் அழகிய கரடி டிசைன் ஒன்றை போடலாம்...








▲ கரடிக்கான கிரா.்.ப்

◀ கிராஸ் ஸ்டிச் தையல்

படம் 2-ல் உள்ளது போல் முதல் கரடியின் உடம்பு பகுதிக்கு கோல்டன் ப்ரவுன், பிங்க் மற்றும் சிவப்பு ஆகிய நூல்களில் 'க்ராஸ் ஸ்டிச்' போட்டு நிரப்ப வேண்டும்.

இரண்டாவது கரடியின் உடம்பு பகுதிக்கு கோல்டன் ப்ரவுன், லைட் கலர் நீலம், மற்றும் டார்க் கலர் நீலம் ஆகிய நூலகளில் தையல் போட வேண்டும்.

மற்றபடி, கரடியின் கண்களுக்கும், அவுட்லைனுக்கும் கருப்பு நூல், கரடியின் வாய்க்கு வெள்ளை நூல், ஸ்கிப்பிங் கயிறுக்கு வயலட் கலர் நூல் ஆகியவை இரண்டு கரடிகளுக்கும் பொதுவானது.

**எம்ப்ராய்டரி செய்யும் முறை:**

கொடுக்கப்பட்ட படங்களையும் படம் 3-ல் உள்ள கிராஃப்பையும் கவனமாக பாருங்கள். பின்பு வேலையை தொடங்கவும்.

பாம்பேடையிங் மேட்டி துணி 30 சென்டிமீட்டர் எடுத்து கழுத்தை வரைந்துகொண்டு, கழுத்துக்கு நடுவில் 3 இன்ச் கீழே மூன்றாவது புள்ளியில் இருந்து டிசைனை ஆரம்பிக்கவும். உடல்பகுதி கிராஸ் ஸ்டிச்லிலும், கரை (out line) மற்றும் ஸ்கிப்பிங் கயிறு 'பேக் ஸ்டிச்சி'லும் நிரப்புங்கள்.










**குழந்தைக்கான கவுனில் சிறிய நாய்க்குட்டி டிசைனை பார்க்கலாம்.**



**தேவையான பொருட்கள்:**

துணி: பாம்பே டையிங் மேட்டி பிங்க் கலர் - ஒண்ணரை மீட்டர்.

**நூல் நிறம்:**

முதல் வகை நாய்குட்டி:

நம்பர் - 0297 மஞ்சள் (காது டிசைனுக்கு).

நம்பர் - 028 பிங்க் (உடலுக்கு).

நம்பர் - 013 சிவப்பு (உடல் அவுட்லைன்).

நம்பர் - 0888 காக்கி (காது அவுட்லைன்).

இரண்டாம் வகை நாய்குட்டி:

நம்பர் - 0433 லைட்புளூ (காது).

நம்பர் - 0133 டார்ப்புளூ (உடல்).

நம்பர் - 0888 காக்கி (காது அவுட்லைன்).

அனைத்து நூல்களும் 1 ஸ்கெய்ன்.

இரண்டு இழைகள் கொண்ட நூலை மொத்த எம்ப்ராய்டரிக்கும் உபயோகப்படுத்த வேண்டும்.

**தேவைப்படும் ஸ்டிச்:** 'ஆஃப் கிராஸ் ஸ்டிச்' மற்றும் 'பேக் ஸ்டிச்'.

**செய்முறை:** படம் 1-ல் உள்ள கிராஃபையும், படம் 2-ல் உள்ள டிசைனையும் நன்கு பாருங்கள்.

படம் 2-ல் 5 நாய்குட்டி உள்ளது. மஞ்சள், பிங்க்







கலரில் உள்ள நாய்குட்டிகள் முதல் வகை எனவும், லைட் புளு, டார்க் புளு கலரில் உள்ள நாய் குட்டிகள் இரண்டாம் வகை எனவும் கொள்ளலாம்.

பாம்பே டையிங் மேட்டி துணியில்






கவுனுக்கான கழுத்து வரைந்துகொண்டு, கழுத்தின் நடுவிலிருந்து ஒரு இன்ச்க்கு கீழே முதல் வகை (பிங்க், மஞ்சள்) நாய்க்குட்டியை நடுவில் போட்டுக்






கொள்ளவும்.

பிறகு மார்பு அளவுக்கு ஏற்ப தேவையான நாய்க்குட்டிகளை இருபுறமும் போடவும். நாய்க்குட்டிகளின் எண்ணிக்கை ஒற்றைப்படையில் இருக்க வேண்டும்.

கவுனில் உள்ள பாக்கெட் அளவை துணியில் வரைந்து, நடுவில் வகைக்கு ஒன்றாக நாய்க்குட்டி போடலாம்.

படம் 3-ல் முதல் ஆஃப் கிராஸ் ஸ்டிச்'சும்.




படம் 4-ல் இரண்டாவது 'ஆஃப் கிராஸ் ஸ்டிச்' போடும் விதம் காட்டப்பட்டுள்ளது.

இதேபோல, படம் 5-ல் உள்ளதுபோல் வரிசையாக 'ஆஃப் கிராஸ் ஸ்டிச்' போட வேண்டும்.

படம் 6-ல் உள்ளது போல் டிசைனை நிரப்ப வேண்டும்.

நாய்க்குட்டி அவுட்லைனுக்கு 'பேக் ஸ்டிச்' உபயோகப்படுத்த வேண்டும்.

இதுவரை எம்ப்ராய்டரியில் பலவித தையல் வகைகளையும் 'மேட்டி' துணியில் அறிமுகப்படுத்தினோம். பூவேலைப்பாடு என்பது ஒரு நுண்கலை! அதனால்தான் எடுத்த எடுப்பிலேயே துணி வேலைப்பாடுகளுக்குப் போகாமல், 'மேட்டி' துணியில் டேபிள் விரிப்பாகவும், சேர் கவராகவும் எம்ப்ராய்டரி செய்தோம்.

எம்ப்ராய்டரியில் எத்தனைவிதமான தையல்கள் உள்ளன.. அவற்றை எப்படி டிசைனாக மாற்றுவது.. நூல் வகைகள், கலர் காம்பினேஷன் என்று பல்வேறு விஷயங்களை அடிப்படையில் இருந்து புரிந்துகொள்ள இதுவரை வந்த பகுதிகள் உதவியிருக்கும்.

இதற்காகத்தான் 'மேட்டி' துணியை ஒரு மீடியமாக வைத்துக்கொண்டோம். அதில்தான் ஓட்டைகள் ஒரே சீரான இடைவெளியில் அமைந்திருக்கின்றன. அதனால், எம்ப்ராய்டரி போடுபவரின் முயற்சி இல்லாமலேயே தையல்கள் சீராக, ஒரே அளவில் அமையும்.

ஆரம்பகட்ட பயிற்சியாளர்கள், புதிதாக கற்கும் தையல் வகையில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும். மேலும் தையலை எங்கே துவங்க வேண்டும், முடிக்கவேண்டும், நூல் பொசிஷன் எப்படி இருக்க வேண்டும் போன்ற விஷயங்களை விளக்கமாக அறிந்து கொள்ள 'மேட்டி' துணிதான் உகந்தது.

இவற்றில் ஓரளவு பயிற்சியாகிவிட்டதால் இனி துணியில் போடும் 'ஃப்ரீ ஸ்டைல்' எம்ப்ராய்டரிக்கான பயிற்சியை ஆரம்பிக்கலாம்..! அதற்கான முக்கிய அம்சங்கள்...

மொழிக்கு இலக்கணம் போல, நல்ல எம்ப்ராய்டரிக்கு அருமையான துணித் தேர்வு, சரியான ஊசி, அளவான நூல், அச்சடித்தாற் போல் ட்ரேஸிங், சீரான தையல், பொருத்தமான டிசைன், அழகான கலர் தேர்வு ஆகியவை மிக முக்கியம்.

**ஊசி, நூல் தேர்வு:**

எப்போதும் எம்ப்ராய்டரி துணிக்குத் தகுந்த ஊசியை எடுத்துக்கொள்ள வேண்டும். தடிமனான துணிக்கு தடிமனான ஊசியையும், மெல்லிய துணிவகைகளுக்கு மெல்லிய ரக ஊசியையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எம்ப்ராய்டரி செய்யும் ஊசியை 'குரூவெல் ஊசி' (crewel needle) என்பார்கள். அதில் 'போனி எம்ப்ராய்டரி குரூவெல் ஊசிகள்'தான் மிகப் பிரசித்தம். இவை எல்லா நூல் கடைகளிலும் கிடைக்கும்.

பாப்ளின், டீ-ஷர்ட், கேஸ்மெண்ட் வகை கனமான துணிகளுக்கு நம்பர் 7 அல்லது 8 ரக ஊசியை



உபயோகிக்கலாம். பிளவுஸ் துணி, மற்றும் புடவைகளுக்கான எம்ப்ராய்டரிக்கு நம்பர் 9, 10 அல்லது 11 வகை ஊசி தேவைப்படும். இதில் நம்பர் - 11 ஊசி மிக மெல்லியது. சற்று பலமாகக் காற்றடித்தாலே பறந்து விடும்.. அழுத்தி தைத்தால் வளைந்து ஒடிந்துவிடும். ஆகவே மிக மெல்லிய ரகத் துணிகளுக்கு மட்டும், ஜாக்கிரதையாக இந்த ஊசியைப் பயன்படுத்த வேண்டும்.

பொதுவாக, தையல் எவ்வளவு சிறியதாக, நுணுக்கமாக அமைகிறதோ, அந்தளவு அதற்கு மதிப்பும் விலையும் அதிகம்! நூலின் தடிமனுக்கு ஏற்றபடியும் தையல் அமையும். அதனால் எந்தவகை தையலுக்கு எவ்வளவு இழை கொண்ட நூல் எடுத்துக்கொள்வது என்பதையும் கவனமாகப் பார்க்க வேண்டும்.

**டிசைன் ட்ரேஸிங் செய்யும் முறை:**

எடுத்துக்கொள்ளும் டிசைனை, துணியில் அலுங்காமல், நலுங்காமல் மிக அழகாக ட்ரேஸ் செய்வது மிக அவசியம். இதற்கு முன்கூட்டியே சிறிது பயிற்சி எடுத்தால்தான் டிசைன் அச்சடித்தது மாதிரி அழகாக அமையும்.

கார்பன் பேப்பர் தேர்ந்தெடுப்பதிலும் சில வழிமுறைகள் உண்டு. வெள்ளை, மஞ்சள், சிவப்பு, நீலம், கறுப்பு ஆகிய நிறங்களில் கார்பன் பேப்பர்கள் கிடைக்கின்றன.

அடர் நிற துணிகளில் டிசைன் நகல் எடுக்கும்போது வெள்ளை, மஞ்சள் நிற கார்பன் பேப்பரை உபயோகிக்க வேண்டும். வெளிர் நிற துணிகளுக்கு கறுப்பு, நீலம் மற்றும் சிவப்பு நிற கார்பன் காகிதங்களை உபயோகிக்கலாம்.

டிசைன் பேப்பரை துணியில் எம்ப்ராய்டரி செய்யப்போகும் இடத்தில் பொருத்தி குண்டூசி குத்தவும். பின்னர் டிசைன் பேப்பருக்கும் துணிக்குமிடையே கார்பன் பேப்பர் நுழைத்து சுற்றிலும் குண்டூசியால் பொருத்திக் கொள்ளவும். நகல் எடுத்து முடித்தபின், கார்பன் பேப்பரை மட்டும் அகற்றி – டிசைன் சரியாகப் பதிவாகியிருக் கிறதா என்று பார்க்க வேண்டும். ஏதேனும் ஒரு பகுதி விடுபட்டிருந்தால், மறுபடி கார்பன் பேப்பர் பொருத்தி வரைந்து கொள்ளலாம்.

நேரடியாக துணியில் டிசைன் போடும் முன்பாக, வேறொரு துணியில் நகலெடுத்துப் பார்த்துப் பிறகு ஒரிஜினல் துணியில் போட்டால் நல்லது.





வெளிநாடுகளில் எம்ப்ராய்டரி கற்க ஆரம்பிக்கும் ஒவ்வொரு பெண்ணும் மெயின் துணியில் போடுவதற்கு முன்பாக, ஒரு சாம்பிள் துணியில் போட்டுப் பழகுவார். இதனால், ஒரிஜினல் துணியில் போடும் போது எம்ப்ராய்டரி கச்சிதமாகவும் அழகாகவும் அமையும்.

**துணி ஃப்பிரேம் உபயோகிக்கும் முறை:**

ஃப்பிரேம் உபயோகிக்கும் முன்பாக, கீழ்ப்பக்க ஃப்பிரேமில் ஒரு 'இன்ச்' அளவுக்கு ஒரு மெல்லிய துணியைச் சுற்றிவிட்டு, அதன்பிறகு எம்ப்ராய்டரி செய்யப்போகும் துணியைப் பொருத்தவும். இதனால் ஃப்பிரேமில் இருந்து துணி நழுவாமல் இருக்கும்.

எம்ப்ராய்டரி செய்யப்போகும் துணி மிக மெல்லியதாக இருக்கும் பட்சத்தில், அதன் அடியில் ஒரு செய்தித்தாளை வைத்து ஃப்பிரேமில் பொருத்தினால் – துணி தொய்ந்து போகாமல் இருக்கும். டிசைனும் கோணல் மாணல் ஆகாமல் கச்சிதமாக அமையும். டிசைன் போட்டு முடிந்ததும், பேப்பரை மட்டும் கிழித்து எடுத்து விடலாம்.

சிலருக்கு ஆர்வம் அதிகமிருந்தாலும், எடுத்த எடுப்பில் ஒரே சீராக தையல் போடவராது. அப்படிப்பட்டவர்கள், டிசைன் அவுட்-லைனில் ஒரே சீராக ஸ்கேல் மூலம் புள்ளிவைத்து தைக்கப் பழகினால் தையல் அழகாக அமையும்.

மேற்சொன்ன எல்லாக் குறிப்பையும் சரியாகப் பின்பற்றினால், நீங்கள் செய்யும் ஒவ்வொரு எம்ப்ராய்டரியும் அற்புதமான அழகுடன் மிளிரும்..

அடுத்து டீ-ஷர்ட் ஒன்றில் 'ஒட்டக சிவிங்கி' எம்ப்ராய்டரி செய்வோம்.

இப்போது 'ஃப்ரீ-ஸ்டைல்' எம்ப்ராய்டரிக்கான களத்தில் குதிப்போம்... இந்த டிசைன்களை தலையணை உறை, குஷன் கவர், டீ-ஷர்ட்டுகளில் தைத்தால் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும்.

உங்கள் குழந்தைக்கு என்ன கலர் டி-ஷர்ட் விருப்பமோ, அதை ரெடிமேடாக கடையில் வாங்கிக் கொள்ளவும்.

அருகே கொடுக்கப்பட்டுள்ள ஒட்டகச்சிவிங்கி டிசைனை டி-ஷர்ட்டில் அலுங்காமல், நலுங்காமல் கார்பன் பேப்பர் வைத்து நகலெடுக்கவும். அதன் அருகிலேயே மறுபடியும் ஒட்டகசிவிங்கி படத்தை வைத்து இரண்டாவது டிசைனுக்கான கார்பன் காப்பி எடுக்கவும். இப்போது டி-ஷர்ட்டில் இரட்டை ஒட்டகசிவிங்கிகளின் படங்கள் பதிவாகியிருக்கும். அதன் அவுட்-லைனில் எம்ப்ராய்டரியை தொடங்க வேண்டியதுதான்...



**தேவையான பொருட்கள்:**

நூல் நம்பர் - 0366

ஊசி (போனி குருவெல்) - நம்பர் 8

எம்ப்ராய்டரி மொத்தத்துக்கும் நான்கு இழைகொண்ட நூலை எடுத்துக் கொள்ளவும். முழுக்க 'பேக் ஸ்டிச்' முறையில் போடப்பட்ட எம்ப்ராய்டரி இது

**பேக் ஸ்டிச்:**

நமக்கு ஏற்கெனவே பரிச்சயமானது! தையலை பின்னோக்கிப் போடுவதால் இதற்கு இந்தப் பெயர்... 'பேக் ஸ்டிச்' போடும் விதத்தை மறுபடி ஞாபகப்படுத்திக் கொள்வோம்.




இத்தையல் நேர் சீராக இருப்பதால் நூல் இழை எத்தனை எடுத்துப் போட்டாலும் தடிமனாகத் தெரியாது. நான்கு இழைகளில் 'பேக் ஸ்டிச்' போடும்போது தையல் முத்து முத்தாக அமையும்.

அடுத்து சைக்கிள் ஓட்டும் யானையை டி-ஷர்ட்டில் போட்டு ஜமாய்ப்போம்.









**சை**க்கிள் ஓட்டும் யானையை 'செயின் ஸ்டிச்' தையல் மூலம் எம்ப்ராய்டரி செய்வோம்.

இந்த தையல் 'லூப் ஸ்டிச்' வகையைச் சேர்ந்தது. ஆரம்பகட்ட பயிற்சியாளர்களுக்கு கற்பிக்கப்படும் தையல் வகை இது! இத் தையலைப் போடும்போது நூல் இழை இரண்டாக மடிவதால் சங்கிலித் தையல் தோற்றம் உருவாகும்போது, தையலின் கனம் கூடுகிறது!

அதனால் தையலின் கனம் எந்தளவு இருக்க வேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானித்து, அதற்கேற்ப நூல் இழைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், நாம் நினைத்ததை விட, தையல் மிக தடிமனாக தோற்றமளிக்க நேரிடும். இந்த டிசைன் டி-ஷர்ட் மார்புப் பகுதியில் வந்தால் அழகாக அமையும்.

'செயின் ஸ்டிச்' போடும் விதத்தைப் பார்ப்போம்.

**மு**தல் புள்ளியிலிருந்து அடிவழியாக மூன்றாவது புள்ளிக்கு ஊசியைக் கொண்டுவந்து (படம்-1) லாகவமாக இழுக்கவும் (படம்-2).

ஒரு 'செயின் ஸ்டிச்' உருவாகியிருக்கும் (படம்-3). தையல் போடும்போது, நூலை பக்கவாட்டில் இடது கட்டைவிரலால் கெட்டியாக பிடித்துக் கொண்டால்தான், 'செயின் ஸ்டிச்' முத்து மாதிரி அழகாக


















அமையும்.

ஒரு 'செயின் ஸ்டிச்' போட்டு முடிந்ததும், அடுத்த மூன்றாவது புள்ளியில் (படம்-4) கோர்த்து வாங்கினால் இரண்டாவது 'செயின் ஸ்டிச்'சும் உருவாகியிருக்கும். (படம்-5). வரிசையாக இதேமாதிரி எம்ப்ராய்டரி செய்ய வேண்டியதுதான்!

**தேவையான பொருட்கள்:**

அடர்நீல டி-ஷர்ட் - உங்கள் குழந்தையின் அளவுக்கேற்ப.

**நூல் நிறம்:**

நம்பர் 047 (சிவப்பு) - தொப்பிக்கு

நம்பர் 0239 (பச்சை) - தொப்பிக்கு

நம்பர் 0347 (தோல் நிறம்) - யானை உடம்புக்கு

நம்பர் 0391 (பாதி வெள்ளை) - சைக்கிளுக்கு

நம்பர் 0530 (நீலம்) - யானை கண்ணுக்கு

**ஊசி:** எம்ப்ராய்டரி போனி குரூவல் - நம்பர் 8

யானையின் நெற்றியில் போடப்பட்டுள்ள சிவப்பு குஞ்சம், புருவம் போன்ற எம்ப்ராய்டரிக்கு மட்டும் 'நேர் தையல்' உபயோகிக்க வேண்டும். இதற்கு நான்கு இழை கொண்ட நூல் தேவைப்படும்.

மற்றபடி மீதமுள்ள எம்ப்ராய்டரி முழுவதையும் 'செயின் ஸ்டிச்' மூலம் போடவும். இதற்கு மூன்று இழைகொண்ட நூல் எடுத்துக்கொள்ள வேண்டும்.















குழந்தைக்கான கவுன் ஒன்றில் 'எம்ப்ராய்டரி' போடுவோம்...

19 இன்ச் நீளம், முன்பக்க மார்பளவு 12 ½ அகலம் கொண்ட கவுனுக்குத் தேவையான பொருட்கள்:

*60 செ.மீ. பாப்ளின் துணி.*



**இதில் உபயோகப்படுத்தும் ஸ்டிச்சுகள்:**

*ஃப்ளை ஸ்டிச் (படம்: A, B, C, D)*
*ஸ்ட்ரெய்ட் ஸ்டிச் (படம்: E, F, G, H, I)*
*பேக் ஸ்டிச் (படம்: J)*
*செயின் ஸ்டிச் (படம்: K)*

**தேவையான நூல்** – மதுரா கோட்ஸ் ஆங்கர் நூல்

*ஃப்ளை ஸ்டிச் ஃபில்லிங்குக்காக.*

*பிங்க் – நம்பர் 052, இளஞ்சிவப்பு – நம்பர் 013, சிவப்பு – நம்பர் 047 - ஒரு ஸ்கெயின் – 4 இழைகள்*

*இளநீலம் – நம்பர் 0433 – ஒரு ஸ்கெயின் – ஸ்ட்ரெயிட் ஸ்டிச் – 4 இழை*

*கருநீலம் – நம்பர் 0157 – ஒரு ஸ்கெயின் – பேக் ஸ்டிச் – 4 இழை (பிரெஞ்ச் நாட்)*

*இளம்பச்சை – நம்பர் 0255 – ஒரு ஸ்கெயின் – செயின் ஸ்டிச் – 4 இழை. பார்டர் முதல் வரி, மூன்றாவது வரி.*

*பச்சை – நம்பர் 0258 – ஒரு ஸ்கெயின் – செயின் ஸ்டிச் – 4*



**▼ ஸ்ட்ரெய்ட் ஸ்டிச்**














இழை. பார்டரின் நடு வரி, காம்பு.

**செய்முறை:** கவுனில் கழுத்து பாகம் வரைந்துகொண்டு கழுத்தின் நடுபகுதியிலிருந்து 6 ½ இன்ச் கீழே பார்டரை வரைந்து கொள்ளுங்கள். பின்பு, 3 இன்ச் கீழே இந்த டிசைனை வரைய வேண்டும்.

இத்துடன் கொடுக்கப்பட்டுள்ள டிசைனை ட்ரேஸ் செய்துகொள்ளவும்.

கழுத்திலிருந்து 3 இன்ச் விட்டு மார்பின் நடுப்பகுதியில் அதாவது 6 ¼ இன்சில் முதல் டிசைன் வரைய வேண்டும்.

படம் 1-ல் உள்ளது போல் 1 ¼ இன்ச் இடைவெளி, 3 இன்ச் டிசைன், ½ இன்ச் இடைவெளி, 3 இன்ச் டிசைன், ½ இன்ச் இடைவெளி, 3 இன்ச் டிசைன், 1 ¼ இன்ச் இடைவெளி வரும்.

பின்பு டிசைனின் வலது, இடது பக்கங்களில் ஸ்ட்ரெயிட் ஸ்டிச்சில் நட்சத்திரக் குறியினை வரைய வேண்டும். அரை இன்ச் இடைவெளியில் இது வரும்.

**குறிப்பு:** இந்த டிசைனை ட்ரேஸ் செய்யும்போது நீலநிற கார்பன் பயன்படுத்துங்கள். கார்பனை ஒரு வெள்ளைத் தாளில் தேய்த்து விட்டு துணியில் அழுத்தாமல் ட்ரேஸ் செய்யுங்கள் (துணியில் கார்பன் திட்டுத்திட் டாகப் படிவதைத் தவிர்ப்பதற்கும் எம்ப்ராய்டரி செய்யும் நூலில் கார்பன் கலர் ஏறாமல் இருப்பதற்கும் உதவும்).




























**எ**ம்ப்ராய்டரியை ஒரு தொழில் நுணுக்கத்துடன் கற்று, அழகாகப் போட வேண்டுமானால் (Sampler) முன்மாதிரி போடுவது மிகவும் அவசியம்.

இதுமாதிரி Sampler போடும்போது தையலின் கனம், தையலின் விஷுவல் எஃபெக்ட் (Visual Effect), கலர் காம்பினேஷன் பற்றிய அறிவு நமக்கு தெரிந்துவிடும்.

**சாம்ப்ளர் போடும் முறை:** பாப்ளின் அல்லது'டூ-பை-டூ' துணியில் அரை மீட்டர் சாம்ப்ளர்க்காக வைத்துக் கொள்ளுங்கள்.

துணியின் தன்மை தையலின் வடிவத்துக்கேற்ப நூலிழை உபயோகப்படுத்த வேண்டும்.

பாப்ளின் மாதிரியான தடிமனான துணி வகைகளுக்கு 6 அல்லது 4 நூலிழைகள் பயன் படுத்த வேண்டும்.

'டூ-பை-டூ' மாதிரியான மெல்லிதாகத் துணி வகைகள் இரண்டு அல்லது ஒரு நூலிழைகள் பயன்படுத்த வேண்டும்.

6 அல்லது 4 இழைகள் உபயோகப்படுத்தும்போது 0.1 இன்ச் (ஒரு இன்ச்சில் பத்தில் ஒரு பாகம்) இன்ச்சில் ஒரு தையலை போடவேண்டும்.

படம் 1a-ல் உள்ளது போல் 3 இன்ச்சுக்கு கோடு போட்டுக்கொண்டு 0.1 இன்ச்சுக்கு புள்ளிகள் வைத்து ஒரு தையலை போடவேண்டும்.

3 இழைகள் என்றால், மேற்சொன்ன அளவில் முக்கால் பாகமும் 2 இழைகள் என்றால் அரை பாகமும் 1 இழை என்றால் கால் பாகமும், ஒரு தையல் அளவு இருக்குமாறு போட்டால் அழகாக இருக்கும்.




எம்ப்ராய்டரியை ஒரு தொழிலாகச் செய்ய வேண்டுமானால், மேற்சொன்ன முதற்கட்ட பயிற்சியை செய்தே ஆகவேண்டும்.

இந்த டிசைனுக்கான **சாம்ப்ளர்** படம் 1a புள்ளிகளுடன் கோடு.

**செயின் ஸ்டிச்:** படம் 2a பாப்ளின் துணி:





























முதல்வரி 4 இழைகள் இரண்டாம் வரி 3 இழைகள்.

படம் 3a 'டூ-பை-டூ' துணி: முதல்வரி 2 இழை. இரண்டாம் வரி 1 இழை.

**பேக் ஸ்டிச்:** படம் 4a பாப்ளின் துணி: 6 இழை

இரண்டாவது வரி 4 இழை.

படம் 5a 'டூ-பை-டூ' முதல்வரி – 2 இழை. இரண்டாம் வரி 1 இழை.

**ஃப்ளை ஸ்டிச்:** படம் 6a பாப்ளின் துணி: முதல்வரி 6 இழை. இரண்டாவது 4 இழை.

படம் 7a 'டூ-பை-டூ' துணி: முதல்வரி 2 இழை. இரண்டாம்வரி 1 இழை.

**யோக் பார்டர் செய்முறை:** அழகிய டிசைனை தேவையான அளவுக்கு எப்படி வடிவமைப்பது என்று பார்ப்போம்.

1. முதலில் எம்ப்ராய்டரி செய்யும் துணியின் முன் மார்பளவு (முன்பகுதி மட்டும், அதாவது மொத்த மார்பளவில் பாதி) எவ்வளவு என்று குறித்துக்கொள்ள வேண்டும்.



உபயோகப்படுத்தும்போது, மார்பு அல்லது கைப் பகுதியின் நீளத்தை அளந்துகொள்ள வேண்டும்.

பிறகு டிசைனின் அளந்துகொண்டு, மார்பின் அல்லது கையின் நீளத்திற்கு எத்தனை முறை இந்த டிசைன் ரிபீட் ஆகும் என்று கணக்கு எடுக்க வேண்டும்.

பிறகு டிசைன் ஒற்றைப் படையாக வந்தால், மார்பு அல்லது கையின் நீளத்துக்கு நடுவிலும் இரட்டை படையில் வந்தால் டிசைனுக்கு உள்ள இடைவெளியை நடுவிலும் வைக்க வேண்டும்.

2. உடைக்கு பொருத்தமாக இருக்கிறதா, டிசைன் எத்தனை முறை ரிபீட் ஆகும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

3. டிசைனின் உயரம், அகலம் அளந்துகொள்ள வேண்டும்.

4. நாம் எடுத்துக்கொண்ட உடையின் அளவுக்கேற்ப கழுத்திலிருந்து 7 அல்லது 10 இன்ச் கீழே டிசைனின் அடித்தளம் வரும். படம் (2) இந்த அடித்தளம் இடுப்பிலிருந்து Armhole-க்கு நடுவில் வரும். இதற்கு, 'மிட்வேஸ்ட்' என்று பெயர்.

5. ஒரு டிசைனை மார்பு பகுதியில் 'யோக்' ஆகவோ அல்லது கையில் பார்டராகவோ

தைப்பதற்கு இருபுறமும் துணியை ஒரே அளவில் விட்ட பின் 'யோக்'கை டிசைன் செய்ய வேண்டும்.

6. துணியில் ட்ரேஸ் செய்யும்போது டிசைன் ஆரம்பிக்கும் இடத்தில் 'யோக்' வரும் இடத்தில் - மார்பு குறுக்களவுக்குக் கோடு போட்டுக்கொண்டு, இந்த கோட்டின்மேல் ட்ரேஸிங் பேப்பரில் உள்ள கோடும் பொருந்தும்படியாக பின் செய்துகொள்ள வேண்டும். பிறகு டிசைனை கார்பன் வைத்து ட்ரேஸ் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால், 'யோக்' அல்லது பார்டர் கோணலாக வரவே வராது.






**மீ**ண்டும் கவுனில் எம்ப்ராய்டரி செய்வோம். உயரம் 19 இன்ச், முன்பக்க மார்பளவு 12 ½ இன்ச் உள்ள குழந்தைக்கான கவுனில் அழகிய டிசைன் பார்ப்போம்.









**தேவையான நூல்:** *நம்பர் - 0297 வெளிர் மஞ்சள் -1 ஸ்கெயின் (விப் செய்வதற்கு)*

*நம்பர் - 0303 கேசரி மஞ்சள் -1 ஸ்கெயின் (செயின் ஸ்டிச்சுக்கும், சேட்டின் ஸ்டிச்சுக்கும்)*

*'விப்' செய்வதற்கு (நம்பர் 0303 கேசரி மஞ்சள் – மூன்று இழை*

*உபயோகப்படுத்த வேண்டும்.)*

செயின் ஸ்டிச்சுக்கும், சேட்டின் ஸ்டிச்சுக்கும் இரண்டு இழை நூல் எடுத்துக் கொள்ள வேண்டும்.

செயின் ஸ்டிச் 'விப்பிங்' படம்: *(1,2)*

செயின் ஸ்டிச் போட்டு முடித்துவிட்டு செயின் ஸ்டிச்சின் ஒவ்வொரு ஸ்டிச்சின் இடையே ஊசி துணியில் செல்லாது நூலில் உள்ளேயே 'விப்' செய்ய வேண்டும்.



**சாம்ப்ளர்:** எந்த ஒரு டிசைன் போடும் போதும் சாம்ப்ளர் போடுவது அவசியம்.

1. பாப்ளின் துணி (படம்:4)





முதல் வரி - 4 இழை மஞ்சள் செயின் ஸ்டிச், 4 இழை மஞ்சள் விப்பிங்

இரண்டாம் வரி - 3 இழை மஞ்சள் செயின் ஸ்டிச், 3 இழை மஞ்சள் விப்பிங்

மூன்றாம் வரி - 4 இழை மஞ்சள் செயின் ஸ்டிச், 4 இழை பச்சை கலரில் விப்பிங்.

நான்காம் வரி - 3 இழை மஞ்சள் செயின் ஸ்டிச், 3 இழை பச்சை கலர்ல விப்பிங்.

2. டு-பை-டு துணி (படம்: 5)

முதல்வரி - இரண்டு இழை மஞ்சள் செயின் ஸ்டிச், இரண்டு இழை, மஞ்சள் விப்பிங்.

இரண்டாம் வரி - ஒரு இழை மஞ்சள் செயின் ஸ்டிச், ஒரு இழை மஞ்சள் விப்பிங்

மூன்றாம் வரி - இரண்டு இழை மஞ்சள் செயின் ஸ்டிச், இரண்டு இழை பச்சை விப்பிங்

நான்காம் வரி - ஒரு இழை மஞ்சள் செயின் ஸ்டிச் ஒரு இழை பச்சை விப்பிங்.

இதில் நீங்கள் இரண்டு வகையை பார்க்கலாம். 'விப்பிங்' என்பது ஏற்கனவே தைத்த தையலின் நூலை சுற்றிச் சுற்றி விடுவது. இதனால் தையல் தடிமனான எஃபெக்ட் கிடைக்கும். இதனால் அதிகம் நிரப்பபடாத டிசைன்கள் பளிச்சென்று இருக்கும்.

செயின் ஸ்டிச்சில் விப்பிங் செய்ய அதே கலர் நூல் பயன்படுத்தினால், பார்ப்பதற்கு உருண்டையான நூல் போல் தெரியும்.

விப்பிங் செய்ய வேறு ஒரு கலர் நூல் பயன்படுத்தினால் தையலுக்கு ஒரு கலர் எஃபெக்ட் கிடைக்கும். அதனால் தையலுக்கு ஒரு அலங்கார தன்மையை கொடுக்கும்.

*பின்குறிப்பு:* உங்களிடமே வேறு ஒரு டிசைன் இருந்தால் மார்பளவுக்கு ஏற்றாற் போல் டிசைனை பெரியதாகவோ சிறியதாகவோ ஜெராக்ஸ் செய்து உபயோகப்படுத்தலாம்.

செய்முறை: படம்-3-ல் உள்ளது போல் நீங்கள் தேர்ந்தெடுத்த துணியின் கழுத்து பாகம் வளைத்து கொண்டு மிட்வேஸ்ட்க்கு மேல் இந்த பறவையின் டிஸைன் வருமாறு ட்ரேஸ் செய்துகொள்ளுங்கள்.

கொடுக்கப்பட்ட படத்தில் மூன்று பறவைகள் உள்ளன. நீங்கள் தேர்வு செய்த துணி மார்பளவு அதிகமாக இருந்தால் பறவையின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தலாம்.

நீலக்கலர் துணியாக இருப்பதால் மஞ்சள் அல்லது வெள்ளை கார்பன் பயன்படுத்தவும்.

ட்ரேஸ் செய்த கோடுகளின் மேல்



படம்-3ல் உள்ளது போல் செயின்ஸ்டிச் மற்றும் செயின் ஸ்டிச் விப்பிங் பயன்படுத்தி தையல்களை போடுங்கள்.

'ஃபில்லிங்' டிசைனுக்கு சேட்டின் ஸ்டிச் உபயோகப்படுத்துங்கள்.



## குழந்தைக்கான கவுனில் அழகிய வாத்து டிசைன் போடலாமே...



**தேவையான நூல்:**

நம்பர் 0339 (லைட் பிரவுன்) – 1 ஸ்கெய்ன்,

நம்பர் 0925 (ஆரஞ்ச்) – 1 ஸ்கெய்ன்,

நம்பர் 0310 (டார்க் பிரவுன்) – 1 ஸ்கெய்ன்,

நம்பர் 054 (பிங்க்) – 1 ஸ்கெய்ன் மற்றும் கறுப்பு.

இந்த வாத்து டிசைனில் 'விப்ட் பேக் ஸ்டிச்' (படம் 1, 2), ஃப்ளை ஸ்டிச் (படம் 3, 4) மற்றும் 'சாட்டின் ஸ்டிச்' உபயோகப்படுத்த வேண்டும்.

தலைபாகத்துக்கு ஃப்ளை ஸ்டிச்...

கண்ணுக்கு ஒரே ஒரு சாட்டின் ஸ்டிச்.

பாதத்துக்கு சாட்டின் ஸ்டிச்.

உடல் அவுட் லைனுக்கு விப்ட் பேக் ஸ்டிச். வாய் பகுதிக்கு பேக் ஸ்டிச் ஆகியவை உபயோகப்படுத்த வேண்டும்.

**செய்முறை:**

படம் 5-ல் உள்ளதுபோல் தேர்ந்தெடுத்ததுணியில் கழுத்து பாகம் வரைந்துகொண்டு





பேக் ஸ்டிச் ▶



◀ விப்பிங்



∴ப்ளை ஸ்டிச் ▶





◀ ∴ப்ளை ஸ்டிச்









**1. பாப்ளின் துணி** *(படம்–6)*

முதல் வரி – 6 இழை பேக் ஸ்டிச், 4 இழை விப்பிங். இரண்டாம் வரி – 4 இழை பேக் ஸ்டிச், 3 இழை விப்பிங். மூன்றாம் வரி – 6 இழை பேக் ஸ்டிச், 4 இழை க்ரீம் கலர் விப்பிங். நான்காம் வரி – 4 இழை பேக் ஸ்டிச், 2 இழை க்ரீம் கலர் விப்பிங்.

**2. டூ பை டூ துணி** *(படம்–7)*

முதல் வரி – 2 இழை பேக் ஸ்டிச், 2 இழை விப்பிங். இரண்டாம் வரி – 1 இழை பேக் ஸ்டிச், 1 இழை விப்பிங். மூன்றாம் வரி – 2 இழை பேக் ஸ்டிச், 2 இழை க்ரீம் கலர் விப்பிங். நான்காம் வரி – 1 இழை பேக் ஸ்டிச், 1 இழை க்ரீம் கலர் விப்பிங்.



மிட்வேஸ்ட்டுக்கு மேல் இந்த வாத்து டிசைன் வருமாறு ட்ரேஸ் செய்துகொள்ளுங்கள்.

டிசைனில் ஏழு வாத்துக்கள் உள்ளன. 1, 4, 7 வாத்துக்கள் ஒரே மாதிரியும், 2, 6 வாத்துக்கள் ஒரே மாதிரியும், 3, 5 வாத்துக்கள் ஒரே மாதிரியும் உள்ளன. படத்தில் உள்ளதுபோல் வாத்துக்களுக்கு வெவ்வேறு நூல்களைப் பயன் படுத்தும்போதுதான் டிசைன் அழகாக இருக்கும்.





▲ பிகினீஸ் ஸ்டிச்

இந்தியா முழுவதும் சில சமூகங்களில் மணப்பெண்ணுக்கு சீர்வரிசை கொடுக்கும் போது கைவினைப் பொருட்கள் கொடுக்கும் பழக்கம் உள்ளது. எம்ப்ராய்டரி கலையே ஒரு பெண்ணின் சீதனப் பொருளாகத்தான் உலகெங்கும் பரவி வளர்ந்தது. பெண், தன் வருங்காலக் கணவருக்கு பரிசாக கொடுக்கும் பொருட்களில் எம்ப்ராய்டரி ஐட்டங்களும் இருக்க வேண்டும் என்பது சில சமூகங்களில் கட்டாயமாகவே இருந்தது. நேர்த்தியான எம்ப்ராய்டரி மற்றும் பரிசு பொருட்களை வைத்து பெண்ணின் திறமையும் அந்தஸ்தும் நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இதழில் உடைகளை அலுங்காமல் நலுங்காமல் வைக்க கவர்ச்சியான பைகளில் எம்ப்ராய்டரி செய்து பார்ப்போம்.

இதே மாதிரி செய்து தெரிந்தவர்களின் திருமணம் அல்லது பிறந்தநாள் பரிசாக கொடுக்கலாம். அழகுக்கு அழகு; பயனும் கூட.

















**உபயோகப்படுத்தப் பட்டுள்ள தையல்:**

1. பிகினீஸ் ஸ்டிச் (Pekenese stich),
2. பேக் ஸ்டிச்,
3. Fly ஸ்டிச்.

'பிகினீஸ் ஸ்டிச்' ஒரு அவுட்லைன் ஸ்டிச் குடும்பத்தை சார்ந்தது.

படம்-1 ல் உள்ளது போல் பேக் ஸ்டிச் போடவேண்டும்.

படம்-2ல் உள்ளது போல் முதல் தையல் போடவேண்டும்.

படம்-3ல் முதல் சுற்றும் படம்-4ல் இரண்டாவது சுற்றும் படம்-5ல் உள்ளது போல தொடர்ச்சியாக போட வேண்டும்.

இதே போல் இந்த பிகினீஸ் ஸ்டிச்சை முறைப்படி செய்தால் ஒரு மெல்லிய (Braid) பின்னல் வேலையை துணி மீது ஒட்டியது போலிருக்கும்.

**தேவையான நூல்:**

கோட்ஸ் ஆங்கர் நூல்

0528–இளநீலம் – 1 ஸ்கெய்ன்

0332 – இள ஆரஞ்சு – 1 ஸ்கெய்ன்

**செய்முறை:**

உங்கள் தேவைக்கு ஏற்ப நீங்கள் தேர்ந்தெடுக்கும் பையின் அகலத்தை பொருத்து படம்-6ல்









உள்ள டிசைனை தொடர்ச்சியாக ட்ரேஸ் செய்து கொள்ளுங்கள். முதலில் ட்ரேஸ் செய்த கோட்டின் மேல் 0528ல் பேக் ஸ்டிச் போட்ட பின்னர், 0332ல் பிகினீஸ் ஸ்டிச் போடுங்கள். பிகினீஸ் ஸ்டிச் செய்த கோட்டுக்குள் ஃப்ளை ஸ்டிச் போடவேண்டும்.

**சாம்ப்ளர்:**

படம்-7ல் பாப்லின் துணி.

**முதல் வரி:** பேக் ஸ்டிச் 6 இழை சிவப்பு, பிகினீஸ் ஸ்டிச் 9 இழை டார்க் புளு.

**2-வது வரி:** பேக் ஸ்டிச் 4 இழை - சிவப்பு. பிகினீஸ் ஸ்டிச் 6 இழை - டார்க் புளு.

**படம் 8:** 2 x 2 பேக் ஸ்டிச் 2 இழை - சிவப்பு. பிகினீஸ் ஸ்டிச் 2 இழை - டார்க் புளு.

இந்த சாம்ப்ளரில் பேக் ஸ்டிச் இழைகளின் அளவுக்கு ஏற்ப,

7



8



சுற்றிவிடும் பிகினீஸ் ஸ்டிச் இழைகளின் அளவும் மாறுபடும் என்பதை கவனத்தில் கொண்டு செய்து பாருங்கள்.

6



இப்போது ஜீன்ஸ் டாப்பில் காம்புத்தையல் (stem stitch) பயன்படுத்தி எம்ப்ராய்டரி செய்வோம்.



**கா**ம்புத்தையல் இருவிதமாக போடலாம்.

*1. படம் 1, 2, 3 ல் உள்ளதுபோல் மெல்லியதாக.*

*2. படம் 4, 5 ல் உள்ளதுபோல் தடிமனாக.*

*நீளம் 23 இன்ச், மார்பளவு 18 இன்ச் உள்ள ஜீன்ஸ் டாப்-ல் உபயோ கப்படுத்தும் ஸ்டிச்சுகள்.*

*1. காம்புத்தையல் (Stem Stitch) - காம்பு, பறவைகளுக்கு*

2. Stem Stitch Filling - இலைகளுக்கு

3. பிரெஞ்ச் நாட் - பறவையின் கண், கழுத்துப்பகுதி, பூவின் நுனியில்.

*4.சாடின் ஸ்டிச் (Satin Stitch)-*













## இப்போது 'ரிப்ட் வீல் ஸ்டிச்' பயன்படுத்தி பிளவுஸில் எம்ப்ராய்டரி பார்ப்போம்.



2



**வ**ட இந்தியாவில் பாட்டியின் எம்ராய்டரி போட்ட புடவை மற்றும் உடைகளை பேத்திக்கு சீதனமாக கொடுக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. இப்படி பரம்பரையாக இந்த எம்ப்ராய்டரி உடைகளை உபயோகிப்பார்கள். இது போல் நீண்ட வருடங்கள் உழைப்பதற்கு காரணம். கைகளால் செய்யப்படும் எம்ப்ராய்டரிதான். மெஷின் எம்ப்ராய்டரியில் ஒரு சில தையல்தான் உபயோகப்படுத்த முடியும். நூல்கள் விரைவில் பிரிந்துவிடும். கையினால் செய்யப்படும் எம்ப்ராய்டரிக்குத்தான் விலையும், மதிப்பும் அதிகம்.

இந்த இதழில் ரிப்ட் வீல் ஸ்டிச் (Ribbed wheel stitch). இது ஒரு நூதனமான தையல். இது filling stitch குடும்பத்தைச் சார்ந்தது. இது ஜப்பானிய எம்ப்ராய்டரியில் அதிகமாக காணப்படுகிறது.

**தேவையான நூல்கள்:**

கோட்ஸ் ஆங்கர் நூல்

1. *0887 - 4* ஸ்கெய்ன்
2. *0316 - 3* ஸ்கெய்ன்
3. *0297 - 3* ஸ்கெய்ன்
4. *013 - 3* ஸ்கெய்ன்
5. *0187 - 3* ஸ்கெய்ன்

**உபயோகப்படுத்தும் தையல்**

1. ரிப்ட் வீல் ஸ்டிச் (Ribbed wheel)
2. விப்ட் பேக் ஸ்டிச் (Whipped back)
3. டெய்சி ஸ்டிச் (Daisy)
4. ஸ்டெம் ஸ்டிச் (Stem)

**செய்முறை:**

படம் 1-ல் உள்ள டிசைன் பிளவுஸில் ட்ரேஸ் செய்து கொண்டு, எம்ப்ராய்டரி தொடங்குங்கள்.

**ரிப்ட் வீல் ஸ்டிச்:**

படம் 2-ல் உள்ளது போல், வட்டம் வரைந்து ஆரங்கள் 6, 8, 10, 12 என இரட்டைப் படையிலதான் எப்போதும் வரும். படம் A-ல் வட்டத்தில் ஆரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. படம் B-ல் ஆரங்களில் உள்ள நூலில் சுற்றி சுற்றி அடுத்த ஆரத்திற்கு செல்ல வேண்டும்.

இதுபோல் டிசைன் போட்டுள்ள பிளவுஸ் பட்டுபுடவைக்கும், சிபான் புடவைக்கும் பொருத்தமாக இருக்கும்.

**சாம்ப்ளர்**

படம் 3-ல் வட்டத்தில் ஆரங்கள் 6, 8, 14 ஆக பிரித்து எம்ப்ராய்டரி செய்யப்பட்டுள்ளது. 14 ஆரங்களாக பிரிக்கப்பட்ட வட்டத்தின் நடுவில் 'பிரெஞ்ச் நாட்'டில் fill செய்யப்பட்டுள்ளது.

1



3





**சோ**பாவின் மேல் அலங்காரமாக போடும் துணியில் எம்ப்ராய்டரியை இப்போது பார்ப்போம்.

இந்த டிசைனில் பலவிதமான வண்ணங்கள் கொண்ட பூக்கள், இலைகள் உங்கள் வீட்டு சோபாவை வண்ணமயமாக அலங்கரிக்கும்.






**உபயோகபடுத்தியுள்ள நூல்கள் (ஆங்கர் நூல்):**

*047, 1106, 0315, 094, 047, 035, 0118, 0280, 0860, 0845* இந்த நூல்களை டிசைனில் உள்ளது போல் வண்ணமயமாக தேர்ந்தெடுத்து உபயோகப்படுத்துங்கள்.

**உபயோகப்படுத்தும் தையல்**

1. டபுள் நாட் ஸ்டிச் (Double knot stitch)
2. ஸ்டெம் ஸ்டிச் (Stem stitch)
3. சாட்டின் ஸ்டிச் (Satin Stitch)

டபுள் நாட் ஸ்டிச் என்பது நாட் (Knot) ஸ்டிச் குடும்பத்தை சார்ந்தது.

படம் - 1-ல் முதல்தையல் படம் - 2-ல்











இரண்டாம் தையல் (முதல் முடிச்சு)

படம் - 3-ல் மூன்றாம் தையல் (இரண்டாம் முடிச்சு)

படம் - 4-ல் முடிவு பெற்ற டபுள் நாட் ஸ்டிச்

படம் - 5-ல் உள்ளது போல் தொடர்ச்சியாக போடவேண்டும்.

இந்த ஸ்டிச்சை மிகவும் கவனமாக போடவேண்டும்.

இந்த தையல் நல்லமுறையில் அழகாக வரவேண்டுமானால் படம் - 6-7-ல் உள்ளது போல் சாம்ப்ளர் போட்டு பாருங்கள், டபுள்நாட் ஸ்டிச் ஸ்டெம் ஸ்டிச், சாட்டின் ஸ்டிச்யை காட்டிலும் தடிமனாக வரும்.

**சாம்ளர்** படம் - 6-ல் பாப்லின் துணி முதல்வரி - 6 இழை, இரண்டாம் வரி - 4 இழை,









*படம் - 7 (2X2 துணி) 2 இழை*

**செய்முறை:** தேர்ந்தெடுக்கும் துணியில் Out line-லிருந்து ஒன்றரை இன்ச் இடைவெளிவிட்டு படம்-8ல் உள்ள டிசைனை டிரேஸ் செய்துகொண்டு பூக்கள், இலைகளுக்கு நூல்களின் வண்ணங்களை மாற்றி உபயோகித்து எம்ப்ராய்டரி செய்யவும்.

**டிப்ஸ்:** எம்ப்ராய்டரி செய்த துணிகளை டிட்டெர்ஜென்ட் சோப் போட்டு துவைக்ககூடாது. வெதுவெதுப்பான தண்ணீரில் நனைத்து துணியின் பின்புறம் உடம்பிற்கு உபயோகிக்கும் சோப்பை பயன்படுத்தி விரல்களால் தேய்க்கவும். துணியை கசக்கியோ, உருட்டியோ அடித்தோ துவைக்கக்கூடாது. எம்ப்ராய்டரியின் பின்புறம் கஞ்சி தண்ணிக் ஒற்றவைத்து நிழலில் காயப்போடுங்கள். பின்பு மிதமான சூட்டில் (iron) தேய்த்து உபயோகப்படுத்தினால் நீடித்து உழைக்கும்.

6



7



8






▲ *ஸ்பைடர்ஸ் வெப் ஸ்டிச்*

**ஸ்**பைடர்ஸ் வெப் (Spiders web) தையலில் ஜீன்ஸ் டாப்பில் ஒரு அழகிய டிசைன் பார்ப்போம்.

இந்த தையல் ஃபில்லிங் ஸ்டிச் (filling stitch) குடும்பத்தை சார்ந்தது. சிலந்தி தன் வலையை எப்படி பின்னுகிறதோ அதேபோல் இந்த தையலை தைப்பதால் ஸ்பைடர்ஸ் வெப் என்று பெயர். இந்த தையலை நம்முடைய துணிகளில் தைக்கும்போது வலை போல் இல்லாமல் அழகிய பூ மொட்டு போல் தோற்றமளிக்கும். இது ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் உள்ள எம்ப்ராய்டரியில் வழக்கத்தில் உள்ளது.

**இந்த டிஸைனில் உபயோகப்படுத்தும் தையல்:**

1. ஸ்பைடர்ஸ் வெப் ஸ்டிச் *(Spiders web stitch)*
2. ஸ்டெம் ஸ்டிச் *(Stem stitch)*
3. டெய்சி ஸ்டிச் *(daisy stitch)*

**தேவையான நூல்:** *(கோட்ஸ் ஆங்கர் நூல்)*

*0326 - 2 ஸ்கெய்ன் - 3 இழை*
*054 - 2 ஸ்கெய்ன் - 3 இழை*
*0846 - 2 ஸ்கெய்ன் - 3 இழை*

**ஸ்பைடர்ஸ் வெப் ஸ்டிச் போடும் முறை:**

*படம்-1ல் உள்ளதுபோல் டிசைன்*



வரையவேண்டும்.

*படம்-2:* முதல் ஆரம் தையல் படம்-3ல் உள்ளதுபோல் ஆரங்களை முடிக்க வேண்டும்.

படம்-4ல் உள்ளதுபோல் தையலை ஒரு ஆரம் விட்டு மற்றொரு ஆரம் நூலை கோத்து எடுக்க வேண்டும். இதுபோல்



8



தொடர்ச்சியாக செய்தால் படம்–5ல் உள்ளது போல் இந்த ஸ்பைடர்ஸ் வெப் தையலானது பூ மொட்டு போல் காட்சியளிக்கும்.

**டெய்சி ஸ்டிச் போடும் முறை:**

ஸ்பைடர்ஸ் வெப் முடிந்த பின்பு படம்–6ல் உள்ளது போல் தையலை

2



1



3



போடவேண்டும். இதுபோல் தொடர்ச்சியாக போட்டால் படம்–7ல் உள்ளது போல் துளிர் இலைகளுக்கு நடுவில் பூ மொட்டு இருப்பது போல் காட்சியளிக்கும். இந்த தையல் துணியின் பட்டன்பட்டியில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

4



6



**செய்முறை:**

படம்–8ல் உள்ளதுபோல் டிசைனை ஒரு வெள்ளைதாளில் வரிசையாக கோடுகளாக வரைந்து கொள்ளவும். பின்பு நீங்கள் தேர்ந்தெடுக்கும் துணியின்மீது இந்த டிசைனை எவ்வளவு நீளம் தேவையோ அந்தளவுக்கு ட்ரேஸ்

7



5



9



10



5,7,9... என ஒற்றை படையில் பிரிக்கவேண்டும்.

இதை பின்பற்றி கீழ்கண்டவாறு டிஸைனை உருவாக்கலாம்.

படம்-9ல் உள்ளது போல் வட்டத்தை 9 ஆரமாக பிரித்து கொள்ளவேண்டும்.

ஆரங்கள் - 4 இழை

சுற்றுவதற்கு - 4 இழை



▲ படம் 9-க்கான வரைபடம்



▲ படம் 10-க்கான வரைபடம்

செய்துகொள்ளவும்.

காம்புகளுக்கு ஸ்டெம் ஸ்டிச்சிலும் பூவுக்கு ஸ்பைடர் வெப் ஸ்டிச்சிலும் பட்டன் பட்டியில் உள்ள பூவின் துணியில் டெய்சி ஸ்டிச்சும் உபயோகிக்கவும்.

**சாம்பிள்:**

ஸ்பைடர்ஸ் வெப் ஸ்டிச்சில் ஒரு டிஸைனை உருவாக்கும்போது வட்டத்தில் ஆரங்களாக பிரிக்கும்போது

ஆரங்களின் நுனியில் டெய்சி - 2 இழை

படம்-10ல் உள்ளது போல் 15 ஆரங்களாக பிரித்து கொள்ளவும். நடுவில் உள்ள வட்டத்தில் சாட்டின் ஸ்டிச்சிலும் *(satin stitch)* நேராகவும் பின்பு குறுக்காகவும் தையலை போட்டால் ஷேட்டின் ஸ்டிச் தடிமனாக இருக்கும். ஆரங்களின் நுனியில் பிரெஞ்ச் நாட் போடவேண்டும்.



## 'சல்வார் கமீஸ்' எம்ப்ராய்டரி பார்ப்போம்.

இந்த டிசைனில் முக்கியமான தையலாக ரன்னிங் ஸ்டிச் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ரன்னிங் ஸ்டிச்சில் பலவகை எம்ப்ராய்டரி நம் நாட்டில் தோன்றியுள்ளது. சாதாரண ஓட்டுத்தையல் (ரன்னிங் ஸ்டிச்) இவ்வளவு அழகான எம்ப்ராய்ட்ரியாக மாறியதற்கு அந்தந்த இடங்களில் வசித்த மக்களின் கற்பனை சக்தியே காரணம்.

இந்த ரன்னிங் ஸ்டிச் எம்ப்ராய்டரி. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு பெயரில் அழைக்கப்படுகிறது.

1. kantha (கான்தா) - மேற்கு வங்காளம்.

6





2. Kasuti (கசூதி) - கர்நாடகா

3. Toda (தோடா) எம்ப்ராய்டரி - (நீலகிரி மக்கள்)

4. Swedish Darning (or) Huck எம்ராய்டரி - ஐரோப்பா

மேலும் வியட்நாம் நாட்டிலும் Negi Kasuti போல் பயன்படுத்துகிறார்கள்.

இது அவுட்லைன் ஸ்டிச் குடும்பத்தைச் சேர்ந்தது.

இதை 1. கோடுகளின் மேலும் 2. ஃபில்லிங் ஆகவும் பயன்படுத்தலாம்.

இந்த டிசைனில் உபயோகப்படுத்தப்படும் ஸ்டிச்சுகள்

1. ரன்னிங் ஸ்டிச் (படம்–1).
2. விப்ட் ரன்னிங் ஸ்டிச் (படம்–2)
3. வேவ் ஸ்டிச் (படம்–3,4,5)
4. டெய்சி ஸ்டிச்

**தேவையான நூல்:**

0245-பச்சை (ஃபில்லிங்) - 3 ஸ்கெயின் - மூன்று இழைகள்

பிளாக் வேவ் ஸ்டிச் - 3 ஸ்கெயின் - நான்கு இழைகள்

0386 - டெய்சி ஸ்டிச் - 3 ஸ்கெயின் - மூன்று இழைகள்

0316 - விப்ட் ரன்னிங் 1 ஸ்கெயின் - 4 இழை ரன்னிங் 4 இழை விப்பிங்

0297 - நடுவில் உள்ள டெய்சி தையல் (பூ) 1


1


2


3


4


5


7


8


9


10


11


12



ஸ்கெயின் - மூன்று இழை

0335 - ஆரஞ்ச் - 1 ஸ்கெயின் - 4 இழை

**செய்முறை:** படம்-6ல் உள்ள டிசைனை தேர்ந்தெடுக்கப்பட்ட துணியில் கழுத்து பாகம் வரைந்துகொண்டு டிரேஸ் செய்ய வேண்டும். விலையுயர்ந்த துணியில் இந்த எம்ப்ராய்டரி போடும்போது பேப்பரில் ஒரு முறை எம்ராய்டரி செய்து பார்த்து திருப்தி ஏற்படுமானால் துணியில் போடுங்கள். சாம்ப்ளர் மிக முக்கியம்.

**சாம்ப்ளர்:** படம்–7 பாப்லின் துணி ரன்னிங் ஸ்டிச் முதல்வரி-6 இழை

பாப்லின் துணி ரன்னிங் ஸ்டிச் இரண்டாம் வரி - 4 இழை

படம்–8 - 2X2 துணி ரன்னிங் ஸ்டிச்-2 இழை

படம்–9 - பாப்லின் துணி-விப்ட் ரன்னிங் ஸ்டிச் முதல்வரி - 6 இழை

இரண்டாம் வரி விப்பிங் - 4 இழை

விப்பிங் - 3 இழை

படம்–10 2X2 துணி விப்ட் ரன்னிங் ஸ்டிச் - 2 இழை

விப்பிங் - 2 இழை

படம்–11 பாப்லின் துணி வேவ் ஸ்டிச் முதல்வரி - 5 இழை

இரண்டாம் வரி - 4 இழை

படம்–12. 2X2 துணி வேவ் ஸ்டிச் - 2 இழை

இந்த அத்தியாயத்தில் Japanese Darning Stitch உபயோகித்து குழந்தைக்கான ஃபிராக்கில் இப்போது எம்ப்ராய்டரி செய்வோம். Japanese Darning என்பது அந்த நாட்டிற்கே உரித்தான ஒரு அழகிய தையல் வகை. நம் ஊரில் ரனனிங் ஸ்டிச்தான். பிறந்த நாள் மற்றும் பண்டிகை நாட்களில் குழந்தைகளுக்கு இத்தகைய உடைகள் தனித்தன்மையை கொடுக்கும்.

**தேவையான நூல்:**

மதுரா கோட்ஸ் ஆங்கர் நூல்

1. 0170 – நீலம் – 4 ஸ்கெயின் – 4 இழை.
2. 0326 – ஆரஞ்சு – 4 ஸ்கெயின் – 4 இழை.

**செய்முறை:** படம்-1ல் உள்ள டிசைனை துணியின் நீள அகலத்துக்கேற்றவாறு, கழுத்து பகுதியிலிருந்து இரண்டு இன்ச் கீழே ட்ரேஸ் செய்து கொள்ள வேண்டும். இந்த தையலை இரண்டு ஸ்டெப்பாக போடவேண்டும்.

படம் 2, 3, 4, 5, 6,ல் உள்ளது போல் நீலக் கலரிலும் படம் 7, 8, 9, 10, 11, 12, 13ல் உள்ளது ஆரஞ்சு கலரிலும் கொடுக்கப்பட்டுள்ளன. ஃபிராக்கில் நீலக்கலர் நூல் 13 வரிகள் உள்ளது. இது ஒண்ணேகால் இன்ச் அகலம் வரும். தங்களுக்கு தேவையான அளவு வரிகளை அதிகப்படுத்திக் கொள்ளவும்.











































**செக்கார்ட் (Chequered)** செயின் அல்லது மேஜிக் செயின் ஸ்டிச் உபயோகித்து, குஷன் கவரில் எம்ப்ராய்டரி செய்வோம்.

ஒரே ஊசியில் இரண்டு வெவ்வேறு கலர் நூல்களைக் கோத்துக்கொண்டு, சாதாரண செயின் ஸ்டிச் போலவே போட வேண்டும். ஆனால் படம் - 1, 2-ல் உள்ளது போல் ஒவ்வொரு ஸ்டிச் போடும் போதும் கலர் நூலை மாற்றி மாற்றி ஊசியில் சுற்றிப் போட வேண்டும்.

இது அவுட்லைன் ஸ்டிச் குடும்பத்தைச் சார்ந்தது. இந்தத் தையலை அவுட்லைன் கோடுகளுக்கு உபயோகித்தால் சிறப்பாக இருக்கும்.

**தேவையான நூல்:**

மதுரா கோட்ஸ் ஆங்கர் நூல்
0304 - மஞ்சள் - 3 ஸ்கெயின்.
0300 - க்ரீம் கலர் - 3 ஸ்கெயின்.

**உபயோகப்படுத்தும் ஸ்டிச்கள்:**

1. செக்கார்ட் செயின் ஸ்டிச்

3





1



2









(மஞ்சள் 2 இழை, க்ரீம் கலர் 2 இழை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஊசியில் கோக்க வேண்டும்.)

2. சாட்டின் ஸ்டிச் - மஞ்சள் 2 இழை.

3. பேக் ஸ்டிச் - வட்டத்தினுள் உள்ள கட்டங்கள் - 4 இழை.

4. பிரெஞ்ச் நாட் - கட்டத்துக்குள் உள்ள புள்ளி முடிச்சுகள் - 4 இழை.

**செய்முறை:**

படம் - 3-ல் உள்ள குஷன் கவர் 45X45 செ.மீ. துணியில் படம் - 4-ல் உள்ள டிசைனை, வெள்ளை கார்பன் வைத்து டிரேஸ் செய்து கொள்ள வேண்டும். டிசைனில் நடுவிலிருந்து எம்ப்ராய்டரியைத் தொடங்க வேண்டும்.

4



## கௌசிங் ஸ்டிச் என்ற பழமையான தையலை உபயோகித்து குஷன் கவரில் எம்ப்ராய்டரி செய்வோம்.





**தேவையான நூல்:** 09 லைட் பீச் கலர் ஆங்கர் நூல் - 4 ஸ்கெய்ன்.

**உபயோகப்படுத்தும் ஸ்டிச்சுகள்:**

1. கௌசிங் ஸ்டிச் - 9 இழை
2. கௌசிங்கை டக் செய்ய - 3 இழை
3. டபுள் நாட் ஸ்டிச் - 3 இழை
4. சார்டின் ஸ்டிச் - 4 இழை

**செய்முறை:**

45 X 45 சென்டி மீட்டர் துணியை எடுத்துக்கொண்டு படம் 1-ல் கொடுக்கப்பட்டுள்ள டிசைனை ட்ரேஸ் செய்துகொள்ளவும். டிசைனை நடுவிலிருந்து வரைய வேண்டும்.

**கௌசிங் ஸ்டிச் போடும் முறை:**

9 இழைகளை ஒரு ஊசியில் கோத்துக்கொண்டு

2









டிசைனில் உள்ள கோடு ஆரம்பத்திலிருந்து முடியும் இடம் வரை கோத்துக்கொண்டு படம் 2-ல் உள்ளது போல் மற்றொரு ஊசியில் மூன்று இழைகளைக் கோத்துக்கொண்டு சரியான இடைவெளி விட்டு டக் செய்ய வேண்டும்.

டிசைனை முதலில் நடுவில் உள்ள சாட்டின் ஸ்டிச்சில் ஆரம்பிக்கவும். பிறகு ஆறு பக்கமும் உள்ள கௌவுசிங் ஸ்டிச்சில் டிசைனைப் போடவும்.

1



## குஷன் கவரில் மயில் டிசைனில் வண்ணமயமான எம்ப்ராய்டரி செய்வோம்.

**தேவையான நூல் மற்றும் உபயோகப்படுத்தும் தையல்:**

நம்பர் 0228 – பச்சை – 3 ஸ்கெயின்.

நம்பர் 0170 – நீலம் – 3 ஸ்கெயின்.

1



2



3



4



கேபிள் செயின் ஸ்டிச் – மயிலின் உடல் பகுதிக்கு.

நம்பர் 0390 – மஸ்டர்ட் மஞ்சள் – 1 ஸ்கெயின்.




பட்டன் ஹோல் ஃபில்லிங் - மயிலின் தோகை மற்றும் இருக்கை பகுதி வரும் வட்டமான டிசைன்.

5







6



நம்பர் 0530 – இளநீலம் – 1 ஸ்கெயின்

பட்டன் ஹோல் ஃபில்லிங் – மயிலின் கழுத்து மற்றும் உடல் பகுதியில் வரும் வட்டமான டிசைன்.

நம்பர் 013 – சிவப்பு.

நம்பர் 029 – டார்க் பிங்க் – 1 ஸ்கெயின்.

பட்டன் ஹோல் ஃபில்லிங் – பூவில் உள்ள டிசைனுக்கு

இதுதவிர செயின் ஸ்டிச் – பட்டன் ஹோல் ஸ்டிச் சுற்றி.

நேர் தையல் – மயிலின் கொண்டை பகுதி.

டெய்சி ஸ்டிச் – பூவை சுற்றி உள்ள தையல்.

**செய்முறை:**

18" X 18" அளவு துணியில் படம்-1ல் உள்ளது போல் ட்ரேஸ் எடுத்து வரைந்து கொள்ளவும்.

இந்த டிசைனில் பிரதானமாக கேபிள் செயின் ஸ்டிச் மற்றும் பட்டன் ஹோல் ஸ்டிச் பயன்படுகிறது.

கேபிள் செயின் ஸ்டிச் படம் 2.3ல் உள்ளதுபோல் டிசைனில் வரும் கோடுகள் முழுவதும் உபயோகப்படுகிறது.

பட்டன் ஹோல் ஸ்டிச் படம் 4, 5, 6ல் உள்ளது போல் கவனமாக டிசைனில் வரும் வட்டத்துக்கு உபயோகப்படுகிறது.

இதுதவிர படம் 7, 8, 9, 10 செயின் ஸ்டிச், பட்டன் ஹோல் ஸ்டிச் சுற்றி டெய்சி ஸ்டிச் பூவை சுற்றி..

நேர் தையல் ஸ்டிச் - மயிலின் கொண்டை பகுதி படங்களை பார்த்து கவனமாக எம்ப்ராய்டரி செய்யவும்.

7



8



9



10



## சல்வார் கமீஸ் உடையின்
## கழுத்து பாகத்தில்
## அழகிய எம்ப்ராய்டரி டிசைன் செய்வோம்.

**தேவையான நூல் மற்றும் உபயோகப்படுத்தும் தையல்:**

1. பட்டன் ஹோல் ஸ்டிச் - 0315 - 3 ஸ்கெய்ன் - 2 இழை
2. பிரெஞ்ச் நாட் - 0306 - 2 ஸ்கெய்ன் - 3 இழை
3. ரன்னிங் விப்டு - 0264 - 2 ஸ்கெய்ன் - 2 இழை.
4. சாட்டின் ஸ்டிச் (பூவின் நடுவில்) - 2 இழை
5. நேர் தையல் - சாட்டின் ஸ்டிச்சை சுற்றி - 4 இழை

**செய்முறை:**

படம்-1ல் கொடுக்கப்பட்ட டிசைனை தேர்ந்தெடுக்கும் துணியில் கழுத்து பாகம் வரைந்து கொண்டு ட்ரேஸ் செய்யும். முதலில் பூவில் 'பட்டன் ஹோல் ஸ்டிச்'சிலும் (படம் – 2, படம் – 3) பூவின் நடுவில் 'சாட்டின் ஸ்டிச்'சி லும், அதை சுற்றி நேர் தையலிலும் பூவின் நடுபாகம் முழுவதும் பிரெஞ்ச் நாட் நிரப்பவும். பூவின் காம்பு, இழை பாகங்களுக்கு ரன்னிங் விப்டு ஸ்டிச்சில் (படம் – 4, படம் – 5) நிரப்பவும்.



▲ பட்டன் ஹோல் ஸ்டிச்



1





◀ பிரெஞ்ச் நாட் ஸ்டிச்



2



3



4



5













2



சல்வார் கமீஸில் (Blanket) பிளாங்கெட் ஸ்டிச் உபயோகப்படுத்தி ஒரு அழகிய டிசைன் செய்வோம்.



3





1

### தேவையான நூல் மற்றும் உபயோகப்படுத்தும் தையல்:

1. நம்பர் 1003 – 2 ஸ்கெயின் – பிளாங்கெட் ஸ்டிச் பூவின் நடுவில் உள்ள இதழ்கள் 2 இழை.
2. நம்பர் 0328 – 2 ஸ்கெயின் – பிளாங்கெட் ஸ்டிச் மற்றப் பகுதியில் உள்ள இதழ்கள் – 2 இழை.
3. நம்பர் 0237 – 2 ஸ்கெயின் – இலை மற்றும் தண்டு – சாட்டின் ஸ்டிச் – 2 இழை.

**செய்முறை:** தேர்ந்தெடுக்கப்பட்ட துணியில் கழுத்து பாகம் வரைந்து கொண்டு படம் 1-ல் உள்ள டிசைனை வரைந்து கொள்ளவும். பூ டிசைனின் 'பிளாங்கெட் ஸ்டிச்'சிலும் (படம் – 2, 3) இலை காம்பு பகுதியில் 'சாட்டின் ஸ்டிச்சிலும் நிரப்பவும்.

a

▲ பிளாங்கெட் ஸ்டிச்



















- எம்ப்ராய்டரி

































**கு**ழந்தைகளுக்கான ஸ்கர்ட்டில் எம்ப்ராய்டரி செய்யலாமா!

கொடுக்கப்பட்டுள்ள டிசைனில் முக்கியமான தையலாக 'ஹெர்ரிங் போன் தையல்' (Herringbone) பயன்படுத்துகிறோம். இது 'ஃப்ளாட்' (Flat) ஸ்டிச் குடும்பத்தைச் சார்ந்தது.

**தேவையான நூல்:**
மதுரா கோட்ஸ் ஆங்கர் நூல்

*0313 – மஞ்சள் – 1 ஸ்கெயின் – 3 இழை*

*0300 – க்ரீம் – 1 ஸ்கெயின் – 3 இழை*

*0278 – இளம்பச்சை – 1 ஸ்கெயின் – 3 இழை*

*0279 – இளம்பச்சை – 1 ஸ்கெயின் – 3 இழை*

**உபயோகப்படுத்தும் தையல்:**

1. ஹெர்ரிங்போன் தையல் – 3 இழை (படம் – 1, 2) (பூ மற்றும் இழைகளுக்கு)
2. செயின் ஸ்டிச் – 2 இழை (பூ மற்றும் இழையின் அவுட்லைன்)









3. நேர் தையல் – காம்புகளுக்கு

**செய்முறை:** படம் – 3-ல் உள்ள டிசைனை ஸ்கர்ட்டின் மையப்பகுதியில் இடம் விட்டு, இரு ஓரங்களிலும் ட்ரேஸ் செய்ய வேண்டும். பின்பு, கொடுக்கப்பட்ட தையலை உபயோகித்து, படங்களைப் பார்த்து எம்ப்ராய்டரி செய்யவும்.



1



2



3



இந்த அத்தியாயத்தில் 'சேர்-பேக்' உறையில் எம்ப்ராய்டரி செய்வோம். இதில் முக்கியமான தையலாக 'நாட்டட் கேபிள் ஸ்டிச்' என்ற அபூர்வமான தையலை பயன்படுத்துவோம்.





**தேவையான நூல் மற்றும் தையல்:**

029 - பிங்க்
046 - ரத்தச் சிவப்பு
020 - கருஞ்சிவப்பு
} இதழ்கள்-3 இழைகள் நாட்டட் கேபிள் ஸ்டிச்

0245 - பச்சை - காம்பு - 4 - இழையில் 'விட்டு ரன்னிங் ஸ்டிச்'

0239 - பச்சை - பச்சை இழை - 4 இழை 'சாட்டின் ஸ்டிச்'

0298 மஞ்சள் 2 இழையும், 0304 மஞ்சள் 2 இழையும் சேர்த்து 4 இழைகளாக 'ஸ்டெம் ஸ்டிச்'

0106 - வயலட் - 2 இழை 'பிரெஞ்ச் நாட்' மற்றும் 'சாட்டின் ஸ்டிச்'

0112 - டார்க் வயலட் - 4 இழை 'விட்டு ரன்னிங் ஸ்டிச்'

ஒரு பூவையும் மற்றொரு பூவையும் பிரிக்கும் கோடு மற்றும் பார்டர் - 'பட்டன் ஹோல் ஸ்டிச்'.

















▲ நாட்டட் கேபிள் ஸ்டிச்

**செய்முறை:** படம் 1-ல் உள்ள டிசைனை ட்ரேஸ் எடுத்துக்கொண்டு நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள துணியில் வரையவும்.

படம்: (2,3,4,5,6)-ல் உள்ளது போல் பூவின் இதழ்களில் 'நாட்டட் கேபிள் ஸ்டிச்' போடவும்.





இந்த அத்தியாயத்திலும் 'சேர்-பேக்' உறையில் ஒரு அழகிய டிசைனில் எம்ப்ராய்டரி செய்வோம்.

இந்த டிசைனில் 'க்ரேடான் (Cretan) ஸ்டிச்'சை முக்கியமான தையலாக பயன்படுத்துகிறோம்.

1





2



**தேவையான நூல், மற்றும் உபயோகப்படுத்தும் தையல்:**

**ஆங்கர் நூல்**

| | | |
|---|---|---|
| 0879 | கரும்பச்சை | - 4 இழை<br>- க்ரேடான் ஸ்டிச்<br>- பார்டர் |
| 0225 | இளம்பச்சை | - 4 இழை<br>- க்ரேடான் ஸ்டிச் ஃபில்லிங்<br>- இலைகள் |
| 0189 | ராமர் பச்சை | - 3 இழை<br>- காம்புத் தையல்<br>- காம்பு |
| 0316 | மஞ்சள் | - 3 இழையில் இருமுறை<br>- 'டபுள் டெய்சி' ஸ்டிச்<br>- பூ மொட்டு |
| 0335 | ஆரஞ்சு | - 6 இழை<br>- 'டபுள் டெய்சி' ஸ்டிச்<br>- பூ மொட்டு |

3



4



5



6



7





மற்றும் 'பேக் ஸ்டிச்' இலையை சுற்றி கரை கட்டுவதற்கு!

**செய்முறை:**

படம்: 1–ல் கொடுக்கப்பட்டுள்ள டிசைனை நீங்கள் தேர்ந்தெடுக்கும் துணியில் ட்ரேஸ் செய்து கொள்ளவும்.

படம்: 2, 3, 4 - 'க்ரேடான் ஸ்டிச்'

படம்: 5 - 'க்ரேடான் ஸ்டிச் 'ஃபில்லிங்

படம்: 6, 7 பேக் ஸ்டிச் இலையை சுற்றி கரை கட்டுவது.

படம்: 8, 9 டெய்ஸி ஸ்டிச் மஞ்சள் கலரில் இருமுறை.

படம்: 10, 11 டபுள் டெய்சி மஞ்சள் கலரை சுற்றிப் போட வேண்டும்.

8



9



10



11



பஞ்சாப் மாநிலத்துக்கே உரிய ஸ்பெஷாலிட்டி புல்காரி எம்ப்ராய்டரி. புல்காரி என்றால் 'பூ வேலை' என்று பொருள். இந்த எம்ப்ராய்டரியைப் பயன்படுத்த கமீஸில் ஒரு டிசைன் செய்வோம்.



7



**தேவையான நூல்:**

*0304* – மஞ்சள் – *6* ஸ்கெய்ன் – 2 இழை

*0306* – மஞ்சள் – *6* ஸ்கெய்ன் – 2 இழை

*0300* – க்ரீம் – *1* ஸ்கெய்ன் – 2 இழை

*020* – சிவப்பு – *5* ஸ்கெய்ன் – 2 இழை

*0156* – நீலம் – *1* ஸ்கெய்ன் – *1* இழை

**உபயோகப்படுத்தும் தையல்:**

சாட்டின் தையல் – 'புல்காரி' முறையில் போடப்பட்டுள்ளது.



4



விகடன் பிரசுரம்





1



2



3



5



6

துணியின் பின்பக்கம் (படம்: *1,2,3*-ல்) உள்ளது போல இருக்கும்.

டிசைன் (படம் – *4*) உள்ளது போல் முன்பக்கம் இருக்கும்.

'செயின் ஸ்டிச்' வட்டம் (படம்: *5,6*) டிசைனில் நடுவில் உள்ள வட்டம்.

**செய்முறை:**

இவ்வகை எம்ப்ராய்டரி பட்டு அல்லது 'சில்க் காட்டன்' துணியில் செய்தால் சிறப்பாக இருக்கும். கழுத்து பாகம் வரைந்துகொண்டு டிசைனை (படம் – *7*) ட்ரேஸ் செய்ய வேண்டும். பின்பு படங்களில் உள்ளதுபோல் எம்ப்ராய்டரி செய்யவும்.

விகடன் பிரசுரம்

**இனி, குழந்தைக்கான 'ஸ்கர்ட்'டில் எம்ப்ராய்டரி செய்வோம். இதில் முக்கியமான தையல் 'ரெய்ஸ்டு சாட்டின்' ஸ்டிச்!**



சாட்டின் தையல் நான்கு வகைப்படும்.

1. நாம் எப்போதும் போடும் சாதாரண முறை..

2. 'ரெய்ஸ்டு சாட்டின்' (Raised satin) - இது முதலில் சாட்டின் தையல் போடும் இடத்தை சுற்றி 'பேக் ஸ்டிச்'சில் தையலை படம் 1–ல் உள்ளது போல் போட வேண்டும். பின்பு படம் 2–ல் உள்ளது போல் மேல் பகுதியில் சாட்டின் தையல் போடவேண்டும். இது சாதாரண 'சாட்டின் தையலை' விட சற்று தூக்கலாக இருக்கும்.



3. 'பேடட்' (Padded) சாட்டின் - இது நிரப்பப்படும் இடம் சிறிதாக இருக்கும். ஒருமுறை நீளவாக்கிலும் மற்றொரு முறை குறுக்கு வாக்கிலும் போட வேண்டும்.

4. பஞ்சாப் மாநிலத்தில் போடப்படும் 'புல்காரி' 'சாட்டின்' தையல்.

இந்த நான்கு 'சாட்டின் தையலும்' ஒவ்வொரு விதத்தில் அழகிய தோற்றத்தை தரும்.





**தேவையான நூல் – 'ஆங்கர் நூல்**

**உபயோகப்படுத்தும் தையல்**

*028, 029 பிங்க், அடர் பிங்க் - 2 இழை*

*'ரெய்ஸ்டு சாட்டின்' ரோஜா*

*047, 020 சிவப்பு red - 2 இழை*

*0239 - பச்சை - 3 இழை - காம்பு தையல் - காம்பு பகுதி*

*0155 - நீளம் - 3 இழை - 'டெய்சி' தையல் - சிறிய பூக்கள் இதழ்.*

1



2





*0332 - ஆரஞ்சு - 3 இழை 'பிரன்ச் நாட்' - சிறிய பூக்களில் நடுலில் உள்ள மகரந்தம்.*

*0896 - பிரவுன் – 3 இழை – 'ஹெரிங் போன் ஸ்டிச்' – ரிப்பன் டிசைன்.*

*ரிப்பன் நடுவில் உள்ள வட்டத்தில் 'பேடட் சாட்டின்' உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.*

**செய்முறை:** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துணியில் படம் 3–ல் உள்ள டிசைனை ட்ரேஸ் செய்து கொண்டு படங்களை பார்த்து எம்ப்ராய்டரி செய்யவும்.

3





**பி**ளவுஸில் 'நாட்டட் பட்டன் ஹோல் ஸ்டிச்' என்ற முக்கியமான தையலை உபயோகித்து எம்ப்ராய்டரி செய்வோம்.

1



**தேவையான நூல் (ஆங்கர் நூல்) மற்றும் உபயோகிக்கும்**

**தையல்:**

*0387 வெண்முத்து கலர் - நாட்டட் பட்டன் ஹோல் ஸ்டிச் - 3 இழை.*

*0278 வெளிர் பச்சை - 'பேடட் சாட்டின்' - 2 இழை மற்றும் காம்பு தையல் - 2 இழை.*

*061 பிங்க் - செயின் ஸ்டிச் - 2 இழை.*

**செய்முறை:**

படம்-1-ல் கொடுக்கப்பட்டுள்ள டிசைனை முதுகுப் பகுதி மற்றும் கைகளில் ட்ரேஸ் செய்துகொண்டு, இழை பகுதிக்கு 'பேடட் சாட்டின்' தையலை நிரப்பவும் (படம்-2,3).

பேடட் சாட்டின் என்பது, சாதாரண சாட்டின் தையலைப் போல் போட்டுக் கொண்டு, பின்பு குறுக்குவாக்கிலும் சாட்டின் தையல் போட வேண்டும். பின்பு 'செயின் ஸ்டிச்' போடவும்.

கடைசியாக, 'நாட்டட் பட்டன் ஹோல் ஸ்டிச்' போடவும்.

படம்-4-ல் வரைபடமும் படம்-5,6,7,8,9-ல் செய்முறையும் கொடுக்கப் பட்டுள்ளது. படங்களைப் பார்த்துக் கவனமாக எம்ப்ராய்டரி செய்யவும்.

2



3








▲ பேடட் சாட்டின் ஸ்டிச்

4




▲ நாட்டட் பட்டன் ஹோல் ஸ்டிச்

5



6



7



8



9





'ருமானியன் ஸ்டிச்' (Roumanian Stitch) முக்கியமான ஒரு தையல். இதை வைத்து குழந்தையின் கவுனில் அழகிய டிசைன் செய்வோம். 'ஃப்ளாட் ஸ்டிச்' குடும்பத்தை சார்ந்தது. இந்த 'ருமானியன் ஸ்டிச்' போட்டு முடித்தபின் அதை 'செயின் ஸ்டிச்'சில் கரை கட்ட வேண்டும்.





1







**தேவையான நூல் மற்றும் உபயோகிக்கும் தையல்:**

0361 ருமானியன் ஸ்டிச் – 4 இழை, செயின் ஸ்டிச் – 2 இழை கரை கட்டுவதற்கு.

0925 – ஆரஞ்சு 'சீடிங்' (Seeding) (நேர் தையலை போலவே தனித்தனியாக போட வேண்டும்).

**செய்முறை:**

தேர்தெடுத்துள்ள துணியில், படமும் 1-ல் உள்ள டிசைனை ட்ரேஸ் செய்யவும். படம் 2-ல் வரைபடமும், படம் 3, 4-ல் செய்முறையும் கொடுக்கப் பட்டுள்ளது. படங்களைப் பார்த்து கவனமாக 'ருமானியன் ஸ்டிச்' போடவேண்டும். பின்பு இதழ்களை சுற்றி 'செயின் ஸ்டிச்'சில் கரை கட்டவும்.

3



4





2

**சேர்** கவரில் ஃப்ளாட் ஸ்டிச் என்ற முக்கியமான தையலைக் கொண்டு எம்ப்ராய்டரி செய்வோம்.





தேவையான தையல் மற்றும் உபயோகிக்கும் நூல் – ஆங்கர் நூல்.

**011** - இளஞ்சிவப்பு, **068** - பிங்க் கலர் - கீழ்வரிசை பூவின் இதழ்களில் மாற்றி மாற்றி உபயோகிக்க வேண்டும் – ஃப்ளாட் ஸ்டிச் - 2 இழை.

**076** பிங்க் கலர் - மேல்வரிசை பூவின் இதழ்களில் மாற்றி மாற்றி உபயோகப்படுத்த வேண்டும் - ஃப்ளாட் ஸ்டிச் - 2 இழை.

**0268, 0239** - பச்சை - இலைகள் மற்றும் காம்புகளுக்கு– ப்ளாங்கட் ஸ்டிச் மற்றும் சாட்டின் ஸ்டிச் - 2 இழை.

இலைகளின் நரம்புகளுக்கு ஃப்ளை ஸ்டிச், விப்புடு ரன்னிங் ஸ்டிச் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**0314** - மஞ்சள் மகரந்தம் பேக் ஸ்டிச் - 3 இழை.







2



3



1



**0887** - ப்ரவுன் - பிரெஞ்ச் நாட் - 4 இழை.

**செய்முறை:** படம் 1-ல் உள்ள டிசைனை ட்ரேஸ் செய்துகொண்டு. பூ இதழ்களில் படம் 2-ல் உள்ளது போல் ஃப்ளாட் ஸ்டிச்சிலும், இழை பகுதிக்கு படம் 3-ல் உள்ளது போல் ப்ளாங்கட் ஸ்டிச்சிலும் எம்ப்ராயட்ரி செய்து மற்ற படங்களை பார்த்து கவனமாக செய்து பாருங்கள்.







'ஃபிஷ் போன் ஸ்டிச்' (Fish Bone Stitch) என்ற தையலை உபயோகித்து எம்ப்ராய்டரி செய்வோம். அகலமான இடங்களை நிரப்ப இந்தத் தையல் உதவும். மீன் எலும்பு போலிருப்பதால் இந்தத் தையலுக்கு இப்படிப் பெயர்.

1







**தேவையான நூல் மற்றும் உபயோகிக்கும் தையல்:**

*மஞ்சள் பூ: 0292 – இளம் மஞ்சள், 0311 – பொன் மஞ்சள் . ஃபிஷ் போன் – 2 இழை*

*மகரந்தத்திற்கு: 'சாட்டின் ஸ்டிச்' – 2 இழை. அதைச் சுற்றி 'பிரெஞ்ச் நாட்' – 4 இழை.*

*சிவப்பு பூ: 013 – சிவப்பு, 020 – கருஞ் சிவப்பு. ஃபிஷ் நாட் – 2 இழை.*

*தொட்டியில் உள்ள பூக்களின் மகரந்தத்திற்கு... 'சாட்டின் ஸ்டிச்' – 2 இழை. அதைச் சுற்றி 'பட்டன் ஹோல் ஸ்டிச்' – 2 இழை.*

*காம்பு: 0269 – கரும்பச்சை. 'ஸ்டெம் ஸ்டிச்' – 3 இழை.*

*இலைகள்: 0230 – பச்சை, 0253 – இளம்பச்சை. ஃபிஷ் போன் – 2 இழை.*

**செய்முறை:** படம்-1-ல் உள்ள டிசைனைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துணியில் ட்ரேஸ் செய்து கொண்டு, படம்-2-ல் 'ஃபிஷ் போன் ஸ்டிச்' போடும் முறையும் மற்ற படங்களைப் பார்த்து, மற்ற தையலையும் கவனமாக எம்ப்ராய்டரி செய்யவும்.



2




2



3






1

**உபயோகிக்கும் நூல் மற்றும் தையல்:**

1. 022, 0339 – (படம் 2, 3) 'ஃபெதர் ஸ்டிச்' – 4 இழை.
2. 022 – 'ரன்னிங் ஸ்டிச்' – 4 இழை.
3. 0920 – 'சாட்டின் ஸ்டிச்' – 2 இழை.

**குறிப்பு:** பேனல் டிசைனின் அகலத்தை நமது தேவைக்கேற்ப முடிவு செய்து, அதற்கேற்ப டிசைனை ட்ரேஸ் செய்துகொள்ளவும். பின்பு எம்ப்ராய்டரியைத் தொடங்கவும்.

'ஃபெதர் ஸ்டிச்' (Feather Stitch) உபயோகித்து, ஜீன்ஸ் டாப்ஸ் ஒன்றில் பேனல் எம்ப்ராய்டரி செய்வோம்.

இந்த 'டாப்'ஸில் முன்புற பேனலை (படம்–1) நன்கு கவனித்து, பின்பு கழுத்து வரைந்து, டிசைனை ட்ரேஸ் செய்யவும்.

பேனலில் எம்ப்ராய்டரி செய்து, பிறகு துணியைக் கவனமாகத் தைக்கவேண்டும்.







இங்கே ஜீன்ஸ் டாப்ஸில் 'டிவிஸ்டெட் செயின் ஸ்டிச்' என்ற முக்கியமான தையல் உபயோகித்து எம்ப்ராய்டரி செய்வோம்.



**உபயோகப்படுத்தும் நூல் மற்றும் தையல்:**

1. 0306, 074 – 'டிவிஸ்டு செயின் ஸ்டிச்' – 4 இழை.
2. 054 – 'செயின் ஸ்டிச்' – 3 இழை.
3. 074 – 'சாட்டின் ஸ்டிச்' – 2 இழை.
4. 0300 – 'பேக் ஸ்டிச்' – 4 இழை.
5. 0288, 0304 – 'பிரெஞ்ச் நாட் ஃபில்லிங்' – 4 இழை.
6. 0306, 0300 – 'ஸ்பைடர்ஸ் வெப் ஸ்டிச்' – 4 இழை.

**செய்முறை:** தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள துணியில் வரைந்து கொண்டு கழுத்துக்கு 3" கீழே படம்-1ல் கொடுக்கப்பட்டுள்ள டிசைனை வரைந்து கொள்ளவும். இந்த டிசைனில் முக்கியமான தையலாக டிவிஸ்டெட் செயின் ஸ்டிச் (Twisted Chain) உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. படம்-2,3ல் செய்முறையையும், படம்-4ல் உள்ள வரைப்படத்தையும் பார்த்து கவனமாக போடவும். டிசைனை பார்த்து மற்ற தையல்களிலும் எம்ப்ராய்டரி செய்யவும்.
























இனி முக்கியமான தையல்களாக 'வீட் இயர் ஸ்டிச்' (Wheat Ear Stitch) மற்றும் பட்டன் ஹோல் ஃபில்லிங் ஸ்டிச் (Button Hole Filling Stitch) பயன்படுத்தி எம்ப்ராய்டரி செய்வோம்.











**தேவைப்படும் நூல்: 0881 ஆங்கர் நூல்**

**உபயோகப்படுத்தும் தையல்:**

1. நேர் தையல் – 3 இழை
2. டெய்ஸி தையல் – 4 இழை
3. சாட்டின் ஸ்டிச் – 2 இழை
4. பேக் ஸ்டிச் – 4 இழை
5. ரன்னிங் ஸ்டிச் – 3 இழை
6. டபுள் நாட் – 4 இழை
7. வீட் இயர் – 4 இழை
8. பட்டன் ஹோல் ஃபில்லிங் – 3 இழை
9. நான்கு பக்க தையல் – 3 இழை
10. பிரெஞ்ச் நாட் – 3 இழை







2



1



**செய்முறை:**

படம்–1–ல் உள்ள டிசைனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துணியில் ட்ரேஸ் செய்துகொண்டு, தையலை நடுவிலிருந்து ஆரம்பிக்கவும்.

**வீட் இயர் ஸ்டிச் போடும் முறை:**

படம்–2–ல் உள்ள வரை படத்தையும் படம்–3,4–ல் உள்ள செய்முறையையும் பார்த்துக் கவனமாகப் போடவும்.

**பட்டன் ஹோல் ஃபில்லிங் ஸ்டிச் போடும் முறை:**

படம்–5, 6, 7–ல் உள்ள செய்முறையையும் பார்த்துக் கவனமாகப் போட்டுக் கொள்ளவும்.

மற்ற தையல்களைப் படங்களைப் பார்த்துக் கவனமாகப் போடவும்.







**தேவைப்படும் நூல் மற்றும் உபயோகிக்கும் தையல்:**

**ஆங்கர் நூல்**

*1.046* – ரத்தசிவப்பு – ஹெர்ரிங் போன் ஸ்டிச் (Herring bone stitch) – *2* இழை.

*2.1005* – கருஞ்சிவப்பு – அப் அண்ட் டவுன் பட்டன் ஸ்டிச் – *3* இழை.

*3.*கருப்பு – ஸ்டெம் ஸ்டிச் – *2* இழை.

**செய்முறை:**

தேர்தெடுக்கப்பட்ட துணியில் படம்–1–ல் உள்ள காலர் மற்றும் கைக்கு உள்ள டிசைனை டிரேஸ் .செய்து படம்–2–ல்

**இ**ந்த அத்தியாயத்தில் மூன்றுவித முக்கியமான தையல்கள் கொண்ட எம்ப்ராய்டரி செய்வோம். முதலில் ஜீன்ஸ் டாப்பில் முக்கியமான தையலாக அப் அண்ட் டவுன் பட்டன் ஹோல் ஸ்டிச்: (Up and down buttonhole stitch) பயன்படுத்தி எம்ப்ராய்டரி செய்வோம்.

2




1



அப் அண்ட் டவுன் பட்டன் ஹோல் ஸ்டிச்





3



4





5



உள்ள வரைபடத்தையும் படம்–3,4,5–ல் உள்ள செய்முறையையும் பார்த்து *(1005)* கருஞ் சிவப்பு ஆங்கர் நூலில் அப் அண்ட் டவுன் பட்டன் ஹோல் ஸ்டிச்சிலும் நடுவில் *(046)* ரத்த சிவப்பு நூலில் ஹெர்ரிங் போன் ஸ்டிச்சிலும், கருப்பு நூலால் மற்ற டிசைனையும் போடவும்.

**இ**ரண்டாவதாக ப்ளவுஸில் **க்ளோஸ்டு பட்டன் ஹோல் தையலை** (Closed Button hole Stitch) பயன்படுத்தி எம்ப்ராய்டரி செய்வோம்.

**தேவையான நூல்** – *0386* முத்து கலர்

**உபயோகப்படுத்தும் தையல்:**

*1.* க்ளோஸ்டு பட்டன் ஹோல் ஸ்டிச் – *3* இழை.
*2.* ரன்னிங் ஸ்டிச் – *3* இழை.
*3.* செயின் ஸ்டிச் – *2* இழை.
*4.* சாட்டின் ஸ்டிச் – *2* இழை.

**செய்முறை**

படம்–1–ல் கொடுக்கப்பட்டுள்ள டிசைனைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ப்ளவுஸ் துணியில் கைக்கும் முதுகு பகுதிக்கும் டிரேஸ் செய்து, படம்–2–ல் உள்ள எம்ப்ராய்டரியைப்

2





பார்த்து முதலில் ரன்னிங் ஸ்டிச்சும், அதை சுற்றி செயின் ஸ்டிச்சும் பிறகு க்ளோஸ்டு பட்டன் ஹோல் ஸ்டிச்சும் போட வேண்டும். நட்சத்திர டிசைனுக்கு நடுவில் சாட்டின் ஸ்டிச் போட வேண்டும்.

**பட்டன் ஹோல் ஸ்டிச் போடும் முறை:**

படம்-3, 4, 5, 6-ல் உள்ள வரைபடத்தையும் செய்முறையையும் பார்த்து கவனமாக எம்ப்ராய்டரி செய்யவும்.














க்ளோஸ்டு பட்டன் ஹோல் ஸ்டிச்













**மூ**ன்றாவதாக குஷன் கவரில் **ஜேகோபியன் கௌவுசிங் அல்லது ட்ரெல்லிஸ்** (Jacobean Couching or Trellis) என்ற புதுவிதமான தையலை பயன்படுத்தி எம்ப்ராய்டரி செய்வோம்.

**தேவையான ஆங்கர் நூல்**

089 – பிங்க்
0298 – மஞ்சள்
110 – வயலட்
0306 – மஞ்சள்
0243, 0241, 0245 } பச்சை



**உபயோகப்படுத்தும் தையல்:**

1. ஜேகோபியன் கௌசிங் அல்லது ட்ரெல்லிஸ் – 3 இழை.




▲ ஜேகோபியன் கௌசிங் ஸ்டிச்



2. விப்டுரன்னிங் ஸ்டிச் – 3 இழை ரன்னிங். 3 இழை விப்பிங்.

3. சாட்டின் ஸ்டிச் – 3 இழை.

**செய்முறை:**

துணியில் படம் – 1–ல் உள்ள டிசைனை டிரேஸ் செய்து, முதலில் படம்–2,3,4,5, 6,7,8,–ல் உள்ள படங்களைக் கவனமாகப் பார்த்து ஜேகோபியன் ஸ்டிச் போடவும், அதைச் சுற்றி விப்டுரன்னிங் ஸ்டிச் போடவும். நடுவில் சாட்டின் ஸ்டிச் போடவும்.

2



3



4



5





6



7



1







8





இங்கே இரண்டு புதிய டிசைனில் எம்ப்ராய்டரி செய்வோம்.



முதலாவதாக ஸ்கர்ட்டில் ஃபெர்ன் ஸ்டிச் (Fern Stitch) எம்ப்ராய்டரி செய்வோம்.

**உபயோகப்படுத்தும் நூல் மற்றும் தையல்கள்:**

0387 – முத்து வெள்ளை – ஃபெர்ன் ஸ்டிச் – 4 இழை.



3



0387 – முத்து வெள்ளை – சாட்டின் ஸ்டிச் – 2 இழை, பேக் ஸ்டிச் – 2 இழை, செயின் ஸ்டிச் – 3 இழை.

ஃபெர்ன் ஸ்டிச் நடுவில் உள்ள செயின் ஸ்டிச் - 2 இழைகளில் போடவும்.

0187 – மயில் கழுத்து பச்சை – வேவ் ஸ்டிச் – 6 இழை, செயின் ஸ்டிச் – 3 இழை.

0297 – மஞ்சள் – ஃபெர்ன் ஸ்டிச் 4 இழை.

**செய்முறை:**

படம் - 1ல் உள்ள டிசைனை ட்ரேஸ் செய்துகொண்டு நடுவிலிருந்து ஆரம்பிக்கவும். படம்-2ல் உள்ள வரைபடத்தையும்

2




4



5



6



1



படம் – 3, 4, 5, 6, 7ல் உள்ள செய்முறைகளையும் பார்த்து ஃபெர்ன் ஸ்டிச் போடவும். படம்-8ல் உள்ளது போல் வேவ் ஸ்டிச் போடவும். ஃபெர்ன் ஸ்டிச் நடுவில் உள்ள செயின் ஸ்டிச்க்கு 2 இழை உபயோகிக்கவும்.

8



7



**இ**ரண்டாவதாக சமையல் கூடத்தில் பயன்படும் 'ஏப்ரனி'ல் அழகிய டிசைனில் எம்ப்ராய்டரி செய்வோம்.

1





**உபயோகப்படுத்தும் நூல் மற்றும் தையல்:**

311 – இளம் மஞ்சள் – புல்லியன் ஸ்டிச் – 3 இழை.

0314 – மஞ்சள் – புல்லியன் ஸ்டிச் – 3 இழை.

0332 – ஆரஞ்சு – புல்லியன் ஸ்டிச் – 3 இழை.

0306 – மஞ்சள் – சாட்டின் ஸ்டிச் - 2 இழை

0256, 0281 – பச்சை – ஸ்டெம் ஸ்டிச், ஸ்டெம் ஃபில்லிங் – 3 இழை.

**செய்முறை:**

படம்-1ல் உள்ள டிசைனை







2




தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துணியில் கழுத்துக்கு கீழேயும் பாக்கெட்டிலும் வரைந்துகொண்டு எம்ப்ராய்ட்ரி செய்யவும். இதில் முக்கிய தையலாக புல்லியன் ஸ்டிச் (Bullion stitch) உள்ளது. படம் 2-ல் உள்ள வரைபடத்தையும் படம் – 3,4,5ல் உள்ள வரை படங்களையும் படம் 3, 4, 5ல் உள்ள செய்முறையையும் பார்த்து கவனமாக போடவும்.

3



4



5















தொகுப்பு: **எஸ். கல்பனா, பொன். காசிராஜன்**